www.padippakam.com

# பெருமைக்குரிய பெண்கள்

சந்திரிகா சோமசுந்தரம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெருமைக்குரிய பெண்கள்

சந்திரிகா சோமசுந்தரம்
M.A., M.Phil;

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600001

படிப்பகம்

www.padippakam.com

முதல் பதிப்பு : 1990

© ஆசிரியருக்கு

விலை ரூ. 15-00

---

**சமர்ப்பணம்**

மண்ணினைக் காக்க
தன் இன்னுயிர் தந்த - தருகின்ற
தாய்க்குலத்திற்கு !

---

வெளியிடுவோர்:

**குமரன் பதிப்பகம்**

13-2, கஜபதி தெரு
சென்னை-5

அச்சிட்டோர் :
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ்,
சென்னை-600 017

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

ஒவ்வொரு சரித்திரத்தின் பின்னாலும் ஒரு பெண் இருப்பது உண்மையே. ஆனால் இந்திய சரித்திரத்தின் பின்னணியில் பெண் இரண்டறக் கலந்தவள் என்பதை எவருமே மறுக்க முடியாது. அன்று தொட்டு இன்றுவரை பாரதமாதாவிற்கு பெருமை சேர்க்கும் பெண்கள் பிறந்த வண்ணமே இருக்கிறார்கள் வேறு மண்ணில் உதித்தா லும்கூடத் தமது பணிகளை பாரத பூமிக்கு அர்ப்பணிக் கும் பெண்களையும் நம் நாடு தாங்கி வரும் பெருமையு முடையது.

அப்படிப்பட்ட பெண்களில் இந்த நாட்டின் வளர்ச் சிக்காகத் தமது சாதனைகளைத் தந்தவர்களையும், வேத னைகளைத் தாங்கியவர்களையும் தேர்ந்தெடுத்துள்ளேன். அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்து அளிப் பது அவர்களுக்கும் அவர்களின் நற்பணிகளுக்கும் நான் தலை சாய்த்து வணங்கும் சிறு காணிக்கையே தவிர வேறொன்றுமில்லை.

பல்வேறு துறைகளிலுள்ள பெண்கள் தங்கள் வழியில் இந்த நாட்டு நலனுக்காக பாடுபட்டிருப்பதை குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். அவர்களை நமது முன் மாதிரியாக மதித்து நாமும் இந்த நாட்டுக்காக பணி செய்ய முன்வர வேண்டும். அந்த நோக்கத்தில் உருவாக்கப் பட்டதே இந்த நூல். அதை உணர்ந்து இதை வெளிக்கொண்டு வருவதில் உதவிய அனைவருக் கும் எனது நன்றி.

சந்திரிகா சோமசுந்தரம்
சென்னை—4

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளடக்கம்


வீர விளக்கு ஜான்சி ராணி ... 5

விடுதலை வேண்டிய அன்னி பெசன்ட் ... 31

சுதந்திரத்திற்கு குரல் தந்த சரோஜினி நாயுடு ... 53

புரட்சியைப் புகுத்திய முத்துலட்சுமிரெட்டி ... 67

சேவைக்கொரு சுபலட்சுமி ... 85

நாட்டை நிமிர்த்திய இந்திராகாந்தி ... 94

கலைச்சுடர் ருக்மணி தேவி அருண்டேல் ... 117

தியாக தீபம் அன்னை தெரசா ... 126


படிப்பகம்

www.padippakam.com

# வீரவிளக்கு ஜான்சிராணி

பாரத நாடு பழம் பெரும் நாடு. வற்றாத செல்வங்களும் இயற்கை வளங்களும் நிறைந்த நன்னாடு.

இந்த மண்ணில்தான் கலையும் கலாச்சாரமும் கண்டெடுக்கப்பட்டன. இந்த பூமியில் தான் வீரமும் விவேகமும் விளைந்து செழித்தன. இந்த நிலத்தில் தான் நீதியும் நியாயமும் நிறைந்து நின்றன. இங்கேதான் உலகம் போற்றும் உத்தமர்கள் பலர் உதித்துள்ளனர்.

இந்திய மண் வெறும் சடப்பொருளால் ஆனதல்ல. இங்கு ஒவ்வொரு துகளும் ஒரு சரித்திரத்தை சொல்லி நிற்கும். மனித தோற்றத்தையும் நாகரீகச் சுவடுகளையும் பற்றி கதை படிக்கும். சரித்திரத்திற்கு இந்த மண் சொந்த மண்.

இங்கு ஆண்கள் படைத்த சரித்திரங்களையும் சாதனைகளையும் பெண்களும் நடத்தினர் என்பதை மறுக்க முடியாது. சுதந்திரம் என்கிற பேச்சு இங்கு முழங்கும் முன்னரே பெண்கள் சுதந்திரமாக உலவிய பூமி நமது பூமி. அவர்கள் சம அந்தஸ்துடன் ஆட்சி புரிந்ததும் இங்குதான். ஆண்களைப் போல அறிவிலும், ஆற்றலிலும், உழைப்பிலும், உயர் பண்புகளிலும் உயர்ந்து நின்ற பெண்கள் பலரை பெற்ற பூமி பாரதம் என்றால் மிகையாகாது. இந்த நாட்டின் மாண்பையும், மரபையும், சுதந்திரத்தையும், பண்பாட்டையும் கட்டிக் காப்பதற்காக தன்னையே ஈந்த தியாக தீபங்கள் இங்கு இருந்திருக்கின்றனர். அவர்களில் பலர் பெண்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த வீர வரிசையில் முதல் இந்திய சுதந்திரப் போரில் தாயகத்தின் தன் மானம் காக்க தன் இன்னுயிரை ஈந்து இந்த மண்ணினைக் காத்த ஜான்சிராணி என்ற வீர விளக்கை நாம் மறக்க முடியாது.

ஜான்சி ராணி இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறத் தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண்மணி. இந்த மண்ணின் வரலாறு ஒரு புதிய சகாப்தத்தை உணர்வதற்கு உதவிய பெண்புலி. வெள்ளைச் சிப்பாய்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய சிங்கம். சுதந்திரத் தாகத்தை சாதாரண மக்களுக்கும் சொல்லித் தந்த சூறாவளி அவள்.

ஜான்சிராணி என்பது அவளின் இயல்பான பெயரல்ல. ஜான்சி ராணியின் இயற்பெயர் மனுபாய். காசி நகரத்தில் வாழ்ந்து வந்த மௌரிபந்தன், பாகீரதி தம்பதிகள் வறுமையில் வாடிக்கொண்டிருந்தனர். அவர்களது அருமைப் புதல்வியாக மனுபாய் 1835 ஆம் ஆண்டு பிறந்தாள். ஏழ்மையில் வாடினாலும் மௌரிபந்தன் மகளிடம் அன்பையும் பாசத்தையும் அளவுக்கதிமாகவே கொட்டி வளர்த்தார். ஆனாலும் வறுமையின் கொடுமை வருத்தத் தொடங்கியது. வறுமை தன் மகளின் வாழ்வை பாதித்து விடுமோ என்று வருந்தினார் மௌரிபந்தன். இதற்கு முடிவுதான் என்ன? முடிவில் மௌரிபந்தனுக்கு ஒரு எண்ணம் உதித்தது.

அப்போது மகாராஷ்டிர மன்னராக இருந்தவர் பாஜிராவ் பேஷ்வா. அவர் அரசியல் காரணங்களுக்காக பிரம வர்த்தம் என்ற ஊருக்கு வருவதாக இருந்தார். மௌரிபந்தன் பாஜிராவின் உயர்ந்த குணங்களையும் உதவி செய்யும் மனப்பான்மையும் அறிந்தவர். தன் மகளின் நல்வாழ்வுக்காக மன்னரை சந்தித்து உதவி கேட்பதென்று முடிவு செய்தார் மௌரிபந்தன்

மன்னர் பாஜிராவ் பேஷ்வா பிரமவர்த்தம் வந்து சேர்ந்தார். மௌரிபந்தனும் தன் குடும்பத்துடன் சென்று

படிப்பகம்

www.padippakam.com



மன்னரை சந்தித்தார். மன்னரிடம் தன் வறுமை நிலையை எடுத்துக் கூறினார். மகளை மன்னர் கையில் தந்தார். மன்னர் தனக்கு உதவ வேண்டுமென்று கோரினார்.

மனமிளகிய மன்னர் பாஜிராவ் மௌரிபந்தனுக்கு ஆறுதல் கூறினார். மனுபாயை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார்.

மனுபாய் இயற்கையிலேயே மிகுந்த அழகும், அறிவும் அமையப் பெற்றிருந்தாள். வறுமையினால் வாடினாலும் செம்மையான குணங்களைப் பெற்றிருந்தாள. குழந்தைத் தனத்துடன் கூடிய அறிவு பூர்வமான பேச்சுகளைப் பேசி வந்தாள். இவை பாஜிராவை மிகவும் கவர்ந்தன. மனுபாயின் அருங்குணங்கள் பாஜிராவின் அன்பையும் பாசத்தையும் சம்பாதித்துக் கொண்டன.

முடிவில் பாஜிராவ் மௌரிபந்தனின் வறுமையையும், மனுபாயின் நல்வாழ்வையும் மனத்தில் கொண்டு அவர்களுக்கு உதவ முன்வந்தார். மனுபாயை தம்முடன் அழைத்துச் சென்று வளர்ப்பதாக கூறினார். முதலில் மௌரிபந்தனின் மனம் இதற்கு ஒப்பவில்லை. பெற்ற பாசம் தடை போட்டது, ஆனால் மன்னரின் நல்லெண்ணமும், மகளின் நல்வாழ்வும் அவரை இதற்கு சம்மதிக்கச் செய்தது. ஆற்றொணாத் துயருடன் மனுபாயை பாஜிராவ் வசம் ஒப்படைத்தார். இளம் மனுபாய்க்கு ஒன்றுமே புரியவில்லை. மன்னரின் கனிவான பேச்சும், உபசரிப்பும், அன்பும் புதிதாகவே இருந்தாலும் குழந்தை 'மனம்' அதில் ஒன்றிப் போயிற்று.

பாஜிராவ் பேஷ்வா தன்னுடைய வளர்ப்பு மகனான நாணா சாகிப்புடன் மனுபாயையும் வளர்ப்புப் பெண்ணாக ஏற்றுக் கொண்டார். நாணா சாகிப்புக்கு தன்னுடன் விளையாட ஒரு தங்கை கிடைத்ததில் ஏக சந்தோஷம்.

www.padippakam.com



புதிய சூழ்நிலையும், செல்வம் மிக்க அமைப்புகளும் மனுபாய்க்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாக இருந்தது. அன்பான வளர்ப்புத் தந்தை ஆசையுடன் அண்ணன். மாடமாளிகைகள், விளையாட நல்ல வசதிகள், உண்ப தற்கும், அணிவதற்கும் விதவிதமான ஏற்பாடுகள். இவை குழந்தை மனத்தை குதூகலிக்கச் செய்தன. பழைய நினைவுகளை மெல்ல மறந்தாள் மனுபாய்.

மனுபாய் சிறுவயதிலேயே வீரம் மட்டுமின்றி விவேகமும் நிரம்பியவளாக இருந்தாள். அப்போதே சமத்துவம் பற்றி அறியாமலே ஆணுக்கு நிகராக வீர சாகசங்கள் புரிந்தவள் அவள். இளமையிலே கல்வியில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தாள்.

அவளுடைய அண்ணன் நாணாசாகிப்பும், பிற சிறுவர்களும் படித்துக் கொண்டிருக்கும் இடத்தில் தானும் சென்று அமர்ந்து கொள்வாள். ஆர்வமாக அவள் பாடங்களை கவனிக்கவும் செய்வாள். இது தவிர விளையாட்டுகளின் போதும் அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆரம்பித்தாள். உடற்பயிற்சிகளையும் அவள் கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். எதையும் புதிதாக கற்றுக் கொள்வதில் மனுபாய்க்கு இருந்த ஆர்வத்தை சொல்லில் அடக்க முடியாது. எப்போதும் எதையாவது சோம்பலின்றி செய்து கொண்டே இருப்பாள்.

மனுபாயின் இந்த துறுதுறுப்பும், சுறுசுறுப்பும் அரண்மனைப் பெண்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் மனுபாய் ஆண்களுடன் சுற்றி வருவதை ராணியிடம் கூறி வந்தார்கள். இது ஒரு பெண்ணுக்கு உரிய குணங்களல்ல என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

மனுபாயிடம் அன்பும் பாசமும் கொண்டிருந்த அன்னை அவள் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டிருந் தாள். பிறர் தன் மகளைப் பற்றி குறை கூறி விடக்கூடாது என்பதில் அவர் குறியாக இருந்தார்.

www.padippakam.com



ஒருநாள் ராணி மனுபாயை அழைத்து புத்திமதி கூறினார். ஆண்களுடன் பெண்கள் சரிசமமாக அமர்ந்து படிப்பதுவும், விளையாடுவதும் தவறு என்று கூறினார். 'கல்வி ஆண்பிள்ளைகளுக்கு உரியது. நாமெல்லாம் வீட்டுக்கு அடங்கியவர்கள்' என்றும் சொன்னார். மனுபாய் இனிமேல் படிப்பதற்கோ, விளையாடுவதற்கோ சிறுவர்களுடன் சேர்ந்து சுற்றுவதும் தவறு என்று அறிவுரை கூறினார்.

ஆனால் மனுபாயின் கல்வி ஆர்வமும், அறிவுத் தாகமும் இவைகளை செவிமடுக்கவில்லை. தாயாருக்கு தகுந்த மரியாதை கொடுக்கும் பொருட்டு இவைகளை கேட்டுக் கொண்டார். ஆனால் தன் சுபாவத்தை சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை. மீண்டும் அவர் படிப்பதிலும், விளையாடுவதிலும், உடற்பயிற்சி செய்வதிலும் நாணா சாகிப்புடன் சேர்ந்து கொண்டாள். இது அவள் தாயாருக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தினாலும் மகளின் கல்வி ஆர்வம் கண்டு மகிழ்ந்து போனாள்.

மனுபாய் படிப்பில் மட்டுமன்றி மற்ற கலைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தாள். சிற்பம் செய்வதிலும், சித்திரங்கள் தீட்டுவதிலும் பேரார்வம் காட்டினாள். அவளுடைய விளையாட்டுத் தோழர்கள் அவளின் கலையார்வத்தை கண்டு வியந்து போனார்கள். பாஜிவ்ராவும் அவரது மனைவியும் மனுபாயின் கலையுணர்வை எண்ணி வியந்து நின்றார்கள்.

அவள் கலையார்வததுடன் மட்டும் காணப்படவில்லை. ஆண்கள் விளையாடும் பல வீர விளையாட்டுகளையும் விரும்பி விளையாடினாள். யானையேற்றத்திலும், குதிரை யேற்றத்திலும் சிறந்து விளங்கினாள். போர்க்கலைகளை ஆர்வமுடன் கற்றுக் கொண்டாள். வாள் வீச்சிலும் வேல் வீச்சிலும் வேகத்துடன் ஈடுபட்டாள். வில் வித்தையில் ஆண்களையும் மிஞ்சி நின்றாள். தந்தை அரசியல்

படிப்பகம்

www.padippakam.com



விவகாரங்களை பற்றி ஆலோசிக்கும் போது அவற்றை ஆர்வமுடன் கவனித்து வந்தாள். தந்தை பாஜிராவ் மகளின் இந்த ஆர்வங்களுக்கு தடையாக இருக்க விரும்பவில்லை. மகன் நாணா சாகிப்போடு அவளையும் சரிசமமாகவே நடத்தி வந்தார்.

நாணா சாகிப்பும் தன் அருமைத் தங்கையின் ஆர்வங் களுக்கு ஊக்க முட்டியே வந்தான். அவளுக்கு போர்க்கலை களையும், மற்ற வித்தைகளையும் கற்றுத் தருவதற்கு பெரு முயற்சியும் பேராதரவும் அளித்து வந்தான். அண்ணனின் இந்த ஊக்கம் தான் மனுபாய் அனைத்திலும் முன்னணியில் நிற்க உதவியது என்று கூறினாலும் மிகையாகாது.

மனுபாய் வீரமிக்க பொழுது போக்குகளையே விரும் பியதால் அவள் மனமும் உறுதியாகவே இருந்தது. மென் மையான விளையாட்டுகளை குறிப்பாக பெண்கள் விளை யாடக் கூடிய விளையாட்டுகளை அவள் எப்போதுமே தவிர்த்து வந்தாள். அவற்றை வீண் பொழுது போக்கு களாகவே அவள் கருதினாள்.

விளையாட்டுகளில் மட்டுமன்றி வேறு வேலைகளை செய்யும் போதும் மனுபாய் பெண்கள் விரும்பிச் செய்யக் கூடிய வேலைகளை விரும்பவில்லை. மாறாக அவளது மனம் ஆடவர்கள் ஈடுபடக் கூடிய கடின வேலைகளையே நாடியது. தாயார் எவ்வளவோ முயன்றும் மனுபாயின் இந்த சுபாவத்தை மாற்ற முடியவில்லை. மற்றவர்கள் இது குறித்து செய்த புகார்கள் புகார்களாக மட்டுமே இருந்தன. எந்த வித மாற்றமும் தென்படவில்லை.

காலை எழுந்தது முதல் இரவு முடியும் வரையிலும் அவள் தந்தையுடனும் தமையனுடனுமே பெரும் பொழுது கழித்து வந்தாள். நாணா சாகிப்பின் உதவியுடன் உடற் பயிற்சிகளை கடுமையாக மேற் கொண்டாள். அரசியல் பற்றிய பெரியோர் கருத்துகளை ஆர்வமுடன் கேட்டு

www.padippakam.com



வந்தாள். இராணுவ விதிகள் பற்றி தெரிந்து கொள்வதில் மனுபாயின் ஈடுபாடு அதிகமாக இருந்தது.

அந்தப் புரத்தில் இருந்ததை விட மனுபாய் அரசவை யிலிருந்த காலமே அதிகம் என்று கூறலாம். அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட காட்சிகள் மிகவும் அரியவை. அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதல்ல. என்றாலும் இவற்றை இலட்சியம் செய்யாத மனுபாய் மேலும் மேலும் தன் அரசியல் ஈடுபாட்டை வளர்த்துக் கொள்வதிலேயே குறியாக இருந்தாள்.

அவளுடைய திறமையும், அறிவும் எல்லோருக்கும் தெரியக் கூடிய ஒரு நாளும் வந்தது. ஒரு முறை மன்னர் பாஜிராவ் பேஷ்வா அரபு நாட்டிலிருந்து குதிரைகளை கேட்டிருந்தார். அரபு நாட்டுக் குதிரைகளும் அரண் மனைக்கு வந்து சேர்ந்தன. அரபு நாட்டுக்குதிரைகள் இயல்பிலேயே முரட்டு சுபாவம் உடையவை. அடக்கு வதற்கு அதிக பலம் தேவைப்படும். பல நாட்கள் பயணம் செய்து இந்தியா வந்த குதிரைகளை பயணக் களைப்பு வாட்டியது. கூடவே பழக்கமில்லாத சூழ்நிலை. குதிரைகள் மிரண்டன. சுற்றியிருந்த வீரர்களை கீழே தள்ளின.

வீரர்களும் சோர்ந்தவர்கள் அல்லர். பல குதிரைகளை அடக்கி இலாயத்தில் அடைத்து வைத்தார்கள். அவற்றில் ஒரு குதிரை அதிக வனப்புடனும் பலத்துடனும் இருந்தது. அந்த முரட்டுக் குதிரையிடம் பலசாலி வீரர்களின் அடக்கு முறைகள் பயன் படவில்லை. வீரர்களும் சலிக்காமல் போராடிப் பார்த்தார்கள். குதிரை அவர்களை படாத பாடு படுத்திக் கொண்டிருந்தது. குதிரைப் படைத் தலைவன் களைப்பும் சலிப்பும் உற்றான். முடிவில் செய்வ தறியாது திகைத்த அவன் மன்னரை சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறினான். மன்னரும் என்ன செய்வதென்று சிந்திக்க ஆரம்பித்தார்.

www.padippakam.com



அப்போது மனுபாய் குறுக்கிட்டாள். "அந்தக் குதிரை இருக்கும் இடம் எங்கே?" என்று கேட்டாள். எல்லோரும் அவளை ஆச்சரியமாகப் பார்த்தனர். அந்தக் குதிரையை தான் அடக்குவதாகவும் அவள் கூறினாள். இந்தச் செய்தி கேட்டு சபையில் வியப்பு இன்னும் அதிகமாயிற்று. எல்லோரும் ஏதோ சிறு பிள்ளைத் தனமான பேச்சு என்று கேலி செய்தனர். ஆனால் மனுபாயோ விடாப்பிடியாக தான் சொல்வதையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தாள். பாஜிராவும் இதை நம்பவில்லை. சின்னப் பெண். ஏதோ புரியாமல் பேசுகிறாள் என்று பேசாது இருந்தார். சபையினரும் மனுபாயை அலட்சிய மாகப் பார்த்தனர். ஆனால் மனுபாய் பிடிவாதமாக, தான் அக்குதிரையை அடக்கிக் காட்டுவதாக சொன்னாள். அவளது இந்த உறுதிக்கு நாணா சாகிப் உத்தரவாதம் கொடுத்தான். தன் சகோதரியின் அறிவையும் ஆற்றலை யும் எடுத்துக் கூறினான். அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் அவள் அவற்றை நிரூபிப்பாள் என்றும் பரிந் துரை செய்தான். அவளால் தான் அது முடியும் என்றும் உறுதியாக கூறினான்.

பாஜிராவ் சிந்தித்தார். தன் பிள்ளைகளின் பேரில் அவருக்கு நம்பிக்கையும், நல்லெண்ணமும் இருந்தது. பெண்ணின் வேண்டுகோளுக்கு செவிமடுத்தார் மனுபாய் குதிரையை அடக்க முயற்சி செய்யலாம் என்று சம்மதம் தெரிவித்தார்.

மனுபாய்க்கும், நாணாசாகிப்புக்கும் மகிழ்ச்சி தாங்க வில்லை. கூட்டம் ஆச்சரியத்துடன் அவர்களைப்பின் தொடர்ந்தது. மனுபாய் உள்ள உறுதியுடன் வீர நடை போட்டு சென்றாள். அனைவரும் எதிர்பார்ப்புடன் குதிரை லாயத்தை அடைந்தார்கள். அங்கே அவர்கள் ஆச்சரியம் அளிக்கும் சம்பவத்தை சந்தித்தார்கள்.

சேதி கேட்டு நகர மக்கள் குழுமினார்கள். மக்கள் கூட்டத்தால் மைதானம் நிரம்பி வழிந்தது. ஆர்வத்துடன்

படிப்பகம்

www.padippakam.com



அனைவரும் நோக்கியிருந்தார்கள் முரட்டுக் குதிரை பல வித தொந்தரவுகளுக்கிடையே அழைத்து வரப்பட்டது. குதிரையின் முரட்டுத் தனம் கண்டு ஊரே வியந்தது.

ஆறு பேர் பிடித்திழுத்து வந்த அந்தக் குதிரையைக் கண்டு அவையோர் பெருங்கவலை கொண்டனர். அடுத்து வந்த சின்னஞ்சிறு மனுபாய் அவர்களை மேலும் கவலைக் குள்ளாக்கினாள். கூட்டம் அலை மோதியது. ஆர்ப் பரித்தது. கூட்டத்தினர் அங்கலாய்த்துக் கொண்டனர். "சின்னப் பெண். இந்த முரட்டுக் குதிரையின் முன் எம்மாத்திரம்"

"கம்பீரமும், கடுமையான குணமும் கொண்ட இந்தக் குதிரையிடம் இவள் என்ன பாடுபடப் போகிறாளோ?"

"ஆட்களாலே அடக்க முடியாத இந்தக் குதிரையை இவளா அடக்கப் போகிறாள்? பாவம்" என்றெல்லாம் பலர் பலவிதமாக பேசத் தொடங்கி விட்டார்கள்.

இவையெல்லாம் மனுபாயின் காதில் விழுந்தால்தானே. தன்னுடைய நோக்கமே தீர்வு என்பது போல மனுபாய் குதிரையை நோக்கி வந்தாள்.

குதிரை கனைத்தது. தன்னைக் பிணைத்து வைத்துக் கொண்டிருந்த காவலாளிகளை உதைத்துக் கீழே தள்ளியது. கூட்டம் வியப்பும் வேதனையும் அடைந்தது. ஆனால் மனுபாய் சிறிதும் கலங்கவில்லை அவள் அஞ்சா நெஞ்சினளாய் குதிரையை மிக வேகமாக நெருங்கினாள். சிறிதும் அயராமல் குதிரையை எட்டிப் பிடித்தாள். குதிரை திமிறியது. மனுபாயை கீழே தள்ளியது அந்த முரட்டுக் குதிரை. கூட்டம் பயத்தில் குரலெழுப்பியது

ஆனாலும் மனுபாய் சிறிதும் சோர்வடையவில்லை. அதிக வேகத்துடன், அஞ்சா நெஞ்சுடனும் மீண்டும் அக்குதிரை மேல் பாய்ந்தாள். முரட்டுக் குதிரையும் சளைக்கவில்லை. தன் முரட்டு ஓட்டங்களையெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



அந்தச் சிறு பெண்ணிடம் பிரயோகித்துப் பார்த்தது. தன் பலத்தையெல்லாம் திரட்டி திமிறிப் பாய்ந்தது.

மனுபாயும் விடவில்லை. கயிறுகளை தன் பலங் கொண்ட மட்டும் இறுக்கிப் பிடித்தாள். மேலே பாய்ந்து குதிரையின் முதுகில் அமர்ந்து தன் கைவரிசையை காட்ட லானாள். குதிரை மேலே தன் கால்களைத் தூக்கியும், பக்கவாட்டில் சாய்ந்தும் மனுபாயை கீழே தள்ள முயற் சித்தது. சிறுமியோ விடாப் பிடியாக ஒட்டிக் கொண்டாள். நேரம் ஓடியது. முடிவில் களைத்துச் சலித்த அக்குதிரை ஓய்ந்து போனது. முடிவில் மனுபாயே வென்றாள்.

எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். அவளை இகழ்ச்சியாகப் பார்த்தவர்கள் அவள் ஆற்றலைப் புரிந்து கொண்டார்கள். சிறுமி என்று எடை போட்டவர்கள் வியந்து போனார்கள். அங்கிருந்த சிப்பாய்கள் சிறுமியின் முன் தலைகுனிந்து நின்றார்கள். மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மன்னர் மகிழ்ந்து மகளை ஆரத் தழுவிக் கொண்டார். அமைச்சர்களும், அரசவை பிரமுகர் களும் மனுபாயை பெரிதும் பாராட்டினார்கள். நாணா சாகிப் தங்கையின் ஆற்றல் தரணிக்கு தெரிந்ததை யிட்டு ஆனந்தப்பட்டான். மனுபாயின் வீரமும் விவேகமும் வெளியுலகுக்குப் புலனாகின.

அதன்பின் அவளது ஆண்மை மிக்க ஆற்றல் வளர்வதில் தடையென்ன இருக்க முடியும்? சிறுமி மனுபாய் தன் இஷ்டம்போல் நாணாசாகிப்புடன் வீர விளையாட்டு களில் ஈடுபட்டு வந்தாள்.

அப்போதுதான் தந்தை பாஜிராவ் பேஷ்வாவுக்கு தந்தைக்கே உரிய கவலை தோன்றியது. மகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டியது தந்தையின் கடமை அல்லவா? தன் மகளுக்கு தகுந்த கணவனைத் தேடி அவளை ஒப்படைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



சாதாரணப் பெண்களுக்கே திருமணம் என்பது ஒரு கேள்வியாக அமையும்போது மனுபாயின் வீரத்திற்குமுன் திருமணம் அவ்வளவு இலகுவாகி விடுமா? அவளது அழகும், வீரமும், அறிவும் அவளுக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுப்பதில் பாஜிராவுக்கு குழப்பத்தை தந்தன. வீரத்தில் மனுபாய்க்கு இணையான மாப்பிள்ளையை தேர்ந்தெடுப்பது மன்னருக்கு அத்தனை சுலபமாக இருக்க வில்லை.

மன்னரும் தன் மகளை ஒரு சுத்த வீரனுக்குத்தான் கொடுப்பதென்று பிடிவாதமாக இருந்தார். பலரிடம் சொல்லி வைத்தார். மனுபாயின் வீரத்தை அறிந்த பலர் தங்கள் தகுதிகள் மனுபாயின் முன் மிகச் சாதாரணம் என்று உணர்ந்து விலகிக் கொண்டனர். மன்னரின் கவலை அதிகமாயிற்று.

அப்போதுதான் பாஜிராவ் பேஷ்வாவுக்கு ஒரு நல்ல சேதி வந்தது. மன்னர் விரும்பியபடியே உள்ள ஒரு வரன் பற்றிய செய்தி அது.

ஜான்சி என்கிற நாட்டை அப்போது ஆண்டு கொண் டிருந்த மன்னர்தான் அந்த வரன். ஜான்சி மன்னன் கங்காதரன் பற்றி அறிந்த பாஜிராவ் உடனே ஜான்சி மன்னருக்கு தூது அனுப்பினார். அவனே தனக்கு மாப்பிள்ளையாகத் தகுதி பெற்றவன் என்று தீர்மானித் தார். மனுபாயின் வீர தீர செயல்களைப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் தெரிவித்தார். தன் மகளின் குணாதிசயங்களைப் பற்றியும் பாஜிராவ் தெரிவிக்கத் தவறவில்லை.

இதையெல்லாம் அறிந்த கங்காதர ராவ் மனுபாயின் வீரத்தையும், விவேகத்தையும் அடையாளம் கண்டுகொண் டார். அவளது பிற நற்குணங்களையும் கேள்விப்பட்ட அவர் இவளே தனக்கு ஏற்றவள் என்றும் முடிவு செய்தார். தன் முடிவை பாஜிராவ் பேஷ்வாவுக்கும் தெரிவித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



தன்னுடைய எண்ணம் போலவே மாப்பிள்ளை அமைந்ததில் மன்னருக்கு மகிழ்ச்சி. தனக்கு ஒரு வீரமான மனைவி அமைவதில் கங்காதர ராவுக்குத் திருப்தி.

நகரம் திருமண தோரணங்களுடன் காட்சியளித்தது. மக்கள் மத்தியில் இதே பேச்சு நிலவியது. நாட்டில் மகிழ்ச்சி கரை புரண்டது.

1842 ஆம் ஆண்டு மனுபாய்க்கும் கங்காதர ராவிற்கும் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. திருமணத்தின்போது மனுபாயின் வயது ஏழுதான். காசியில் பிறந்து பாஜிராவிடம் வளர்ந்த மனுபாய் ஜான்சியில் குடிபுகுந்தாள்.

மராத்திய மக்களிடையே பொதுவாக ஒரு பழக்கம் நிலவியது. பிறந்த வீட்டில் பெண்ணுக்கு இருக்கும் பெயர் அவள் மணம் புரிந்தவுடன் மாற்றப்பட்டு விடும். அம்முறைப்படி மனுபாயின் பெயரும் மாற்றப்பட்டது. ஜான்சி நாட்டை அவள் அடைந்தவுடன் அவளை எல்லோரும் இலட்சுமி பாய் என்று அழைக்கத் தொடங்கினர். அன்று முதல் அவள் ஜான்சி ராணி இலட்சுமிபாய் என்றே அழைக்கப்பட்டு வந்தாள்.

ஒரே குணங்களும், ஒத்த கருத்துக்களும் கொண்ட கங்காதர ராவ்- ஜான்சி ராணி குடும்பம் மகிழ்ச்சிகரமாகவே இருந்தது.

ஆண்டுகள் உருண்டோடின. இருவரும் ஆனந்தமாக இருந்தாலும் ஒரு குறை அவர்களை வருத்தி வந்தது. இருவருக்கும் திருமணமாகி எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனாலும் கொஞ்சி மகிழ ஒரு குழந்தை இல்லாத குறை இருவரையும் வாட்டி எடுத்தது. அத்தனை பெரிய ஆட்சிக்கு ஒரு வாரிசு இல்லை என்பது அவர்கள் மனதை வருத்தியது. பலரது ஆலோசனையின் பேரில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர்.

www.padippakam.com



பெரியவர்கள் சொல்லியபடி தீர்த்த யாத்திரையை மேற்கொள்வது என்பதே அவர்கள் மேற்கொண்ட முடிவு. 1850 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை சான்றோர் களிடம் தந்துவிட்டு ஜான்சிராணியும் அவள் கணவரும் தீர்த்த யாத்திரைக்கு சென்றனர். திரும்பி வந்து அவர்கள் பொறுப்பேற்று ஓராண்டு கழிந்தது அவர்கள் மனம் விரும்பியபடியே ஜான்சிராணி ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள். மன்னரும் மக்களும் மகிழ்ச்சி வெள்ளத் தில் நீந்தினார்கள். ஜான்சிராணி அடைந்த ஆனந்தத் திற்கும் கண்ட கனவுகளுக்கும் அளவேயில்லை.

ஆனால் எந்த மகிழ்ச்சியும், எந்த துன்பமும் தான் நிலையாக நிற்பதில்லையே? அதுபோல் ஜான்சிராணியின் ஆனந்தமும் நீண்ட நாள் நீடிக்கவில்லை. பிறந்து மூன்றே மாதங்கள் ஆன அந்தப் பிஞ்சுக் குழந்தை இறந்துவிட்டது. இச்சோக சம்பவம் ஜான்சிராணியில் உள்ளத்தை பெரிதும் பாதித்தது.

மன்னரின் நிலையோ சொல்லவொண்ணாதது. உள்ள நிலை மட்டுமன்றி அவரது உடல்நிலையும் தன் மகனின் பிரிவால் பாதிக்கப்பட்டது. மன்னர் உடல் நலம்குன்றி படுக்கையில் வீழ்ந்தார். ஆண்டுகள் உருண்டோடின. மன்னரின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகியது. ஜான்சிராணி கவலையே உருவானவளாக உருகிப் போனாள். மன்னர் நிலை தேறவில்லை. 1853 ஆம் ஆண்டில் மரணம் தன்னை நெருங்குவதை அறிந்த கங்காதரராவ் மக்கள் நலனைக் கருதி ஒரு தீர்மானத்திற்கு வந்தார். ஜான்சிராணியின் கருத்தும் இதற்கு ஒப்புதல் அளித்தது. இருவரும் மனமொருமித்து தங்களுக்கு வாரிசாக ஜான்சி நாட்டை ஆளுவதற்காக ஒரு சிறுவனை தத்தெடுத்துக் கொள்ள முடிவு செய்தனர், இதற்கான ஏறபாடுகளைச் செய்வதில் ஜான்சி ஈடுபட்டாள்

அப்போது ஆங்கிலேய ஏஜெண்டாக இருந்தவன் எல்லிஸ் என்பவன். மன்னரின் விருப்பப்படி தாமோதரராவ்

www.padippakam.com



என்ற சிறுவனைத் தத்தெடுத்துக் கொள்ள முன்வந்தாள் இராணி, எல்லிஸ் முன்னிலையில் அதிகார பூர்வமாக இந்நிகழ்ச்சி நடந்தேறியது. சிறுவன் தாமோதரராவ் ஜான்சி நாட்டின் அதிகார பூர்வமான வாரிசானான். ஐந்து வயதே நிரம்பிய அப்பாலகனைப் பராமரிப்பதுவும், தனக்குப்பின் இந்நாட்டை ஆளுவதும் இராணியின் பொறுப்பு என்று மன்னர் கட்டளையிட்டார். அதற்கான உறுதிமொழியையும் இராணியிடமிருந்து வாங்கிக் கொண்டார். இராணியும் தன் கணவரின் விருப்பப்படியே நடந்து கொள்வதாக வாக்களித்தாள்.

மன்னரின் பொறுப்பு தீர்ந்து விட்டது என்ற நிறைவுடன் கங்காதரராவின் இறுதி மூச்சு விடை பெற்றுக் கொண்டது. பதினெட்டே ஆண்டுகள் நிரம்பியிருந்த ஜான்சிராணி விதவை ஆனாள். ஆனால் மன்னருக்கு அவள் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்காக தான் ஆவியை அவள் போக்க முடியவில்லை. துன்பத்தின் சுமை அவளை அழுத்தியது. நாட்டு மக்களின் நலம் அவள் நெஞ்சில் நிலைத்தது. இளமையில் கைம்மை கண்ட அவள் மக்களின் நலமே இனி தன்னுடைய நலம் என்று முடிவு செய்தாள். நாட்டுப்பணியே இனி தன் குறிக்கோள் என்று தீர்மானித்தாள்.

தன்னை மெல்லத் தேற்றிக் கொண்டு ஆட்சியின் மீதும் மக்களின் மீதும் கவனம் செலுத்த ஆரம்பித்தாள். வேதனைப்படும் தன் மனதை திசை திருப்ப முயற்சித்தாள்.

ஜான்சி மக்களும் இராணியின் பொறுப்பை வரவேற்றனர். மன்னர் இறப்பதற்கு முன் கூறியபடி மேஜர் எல்லிஸின் வரவை எதிர்நோக்கியிருந்தனர். மேஜர் எல்லிஸிடமிருந்து வரும் கட்டளை இராணியை ஆட்சிப் பொறுப்பை ஏற்கச் சொல்லும் என்று காத்திருந்தனர்.

மூன்று மாதங்கள் ஓடிச் சென்றன. எல்லிஸ்ஸின் வரவு ஒரு கேள்விக்குறியாகியது. மக்கள் மனம் அமைதிஇழந்தது.

www.padippakam.com



அப்போது தான் அந்தக் கட்டளை வந்தது. எல்லிஸ் வரவில்லை ஆனால் தெல்ஹவுசின் கட்டளை ஜான்சி நாட்டுக்கு வந்து சேர்ந்தது. அது மக்களுக்கு பேரிடியாக அமைந்தது.

அதிலிருந்த செய்தியின்படி ஜான்சி மன்னர் கங்காதர ராவ், சிறுவன் தாமோதரராவை தத்து எடுத்துக் கொண்டதை ஆங்கிலேய அரசு அங்கீகரிக்கவில்லை. அது மட்டுமல்ல ஜான்சி நாட்டை ஆங்கிலேய அரசின் பிற பகுதிகளுடன் இணைத்து விட வேண்டுமென்றும் தெல்ஹவுசின் கட்டளை தெளிவாக்கியது. இச்செய்தி ஜான்சி ராணிக்கு மட்டுமல்ல அங்குள்ள மக்களுக்கும் பிடிக்கவில்லை.

ஜான்சிராணி ஜான்சிக் கோட்டையில் குடியிருப்பதை யும் தெல்ஹவுசி எதிர்த்து, அக்கோட்டையை விட்டு வெளியேறி விடவேண்டும் என்றும் அக்கட்டளை தெரி வித்தது. தவிரவும் நகர எல்லை அரண்மனையில் ராணி குடியேறலாம் என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளுக்கு பிரதி பலனாக ஆங்கிலேயே அரசு ஜான்சி ராணிக்கு பிரிட்டிஷ் அரசு மான்யமாக மாதமொன்றுக்கு ரூபாய் ஐந்தாயிரத்தை அளிக்க முடிவு செய்திருப்பதாகவும் தெல்ஹவுசி குறிப்பிட்டிருந்தார்.

மக்கள் நலனில் அக்கறையும் நாட்டு நலனில் நாட்டமும் கொண்டிருந்த ஜான்சிராணியின் துணிவு கொண்ட மனத்தின் முன் இவை எம்மாத்திரம்? ராணி அரசவைப் பிரமுகர்களுடன் கலந்தாலோசித்தாள். இவை ஒன்றிலுமே தமக்கு 'சம்மதமில்லாததையும் தெரிவித்தாள். மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்றும் திட்டமிட்டாள்.

சமாதானத்தை விரும்பியும், போர்களை வெறுத்தும் வந்த அவளது மனம் தெல்ஹவுசிக்கு விபரங்களை எடுத்து சொல்ல விரும்பியது. இந்திய மக்களின் உள்ள உணர்வு

www.padippakam.com



களை தெல்ஹவுசிற்கு புரிய வைக்க வேண்டுமென்பதில் ராணி குறியாக இருந்தாள்.

ஆங்கிலேய ஆட்சி இந்திய நிலைமைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமெனவும், தாமோதர ராவின் சுவீகாரத்தை அங்கீகரிக்க வேண்டுமெனவும் ராணி ஆங்கிலேய அரசின் பிரதிநிதி தெல்ஹவுசிற்கு விண்ணப்பித்தாள். தன்னுடைய உரிமைபற்றி விளக்கமாக எடுத்துக்கூறி வலியுறுத்தினாள்.

இவையெதுவுமே ஆங்கிலேய அரசின் மனத்தை மாற்றுவதாக அமையவில்லை. வர்த்தகத்திற்காக வந்தவர்கள் ஆட்சியை அமைப்பதில் ஆர்வம் காட்டினார்கள். மக்களின் எண்ணங்களை மதிப்பதை விட்டு பிரிட்டிஷ் மன்னரின் எண்ணங்களை செயலாக்குவதையே விரும்பினார்கள். ஜான்சியின் விளக்கங்களும், வேண்டுகோள்களும் வெறும் தூசுக்களாக கருதப்பட்டன. மீண்டும் மீண்டும் ஜான்சி ராணி மேற்கொண்ட முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை. மாறாக ஜான்சியில் பிரிட்டிஷ் ராஜ்யமே நடந்து வந்தது.

ஜான்சி ராணி மனம் வெதும்பினாள். மக்களை சூழ்ந்துள்ள பேராபத்து கண்டு கொதித்தாள். தன்னுடைய கடமையை எண்ணி கலங்கினாள்.

இந்நிலையில் வெள்ளையரை எதிர்த்து இந்தியர்கள் வெகுண்டெழுந்தனர். மக்கள் வெள்ளை அரசின் விபரீதங்களை உணரத் தொடங்கினார்கள். பிரிட்டிஷ் அரசினை எதிர்த்து இந்திய மன்னர்கள் செயல்படத் தொடங்கினார்கள். வெள்ளையரும் ஆங்காங்கே சமஸ்தானங்களை அடக்கக் கிளம்பினார்கள். தமக்கு எதிராக எழுந்த மன்னர்களையெல்லாம் அடிமையாக்கி வந்தார்கள். படை பலமும், பண பலமும் பிரிட்டிஷ் அரசுக்கு மிகையாக இருந்தன. ஆனாலும் இந்த வழிகளுக்கு பயப்படாத இந்தியர்களும் இருந்தனர். அவர்களிடம் வெள்ளை அரசு

www.padippakam.com



தோற்றுப் போனது. தேசமெங்கும் சுதந்திர உணர்ச்சி கொப்புளிக்க ஆரம்பித்தது. வெள்ளைப் படைகள் எங்கும் குவிந்தன.

ஜான்சி நாட்டையும் வெள்ளையர் விட்டு வைக்க வில்லை. ஜான்சிக் கருகில் வெள்ளைப் படை நிரம்பியது, ஆங்கிலேயர் தமக்கு எதிராக மன்னர்களும் சிப்பாய்களும் கிளம்பியதை காரணம் காட்டி ஜான்சி ராணியின் உதவியை நாடினார்கள்.

ஜான்சி ராணி இலட்சுமிபாயின் நிர்வாகத் திறமையும் மக்கள் நலனில் அவர் கொண்டிருந்த அக்கறையும் ஜான்சி மக்களை காப்பாற்றியது. ஆங்கிலேய ஆட்சியும், ஆதிக்கமும் ஜான்சி நாட்டில் முற்றிலுமாக ஒழிந்தது. ஆங்கிலேயரை மிகத் திறமையாக சமாளித்த இலட்சுமிபாயின் புகழ் நாடெங்கும் பரவியது. மக்கள் அவள் பேரில் வைத்திருந்த நம்பிக்கையும், மதிப்பும் அதிகரித்தன.

நாட்டு மக்கள் தந்த பேராதரவுடன் ஜான்சியில் மீண்டும் இலட்சுமிபாயின் நிர்வாகம் தலைதூக்கியது. அந்நியரிடமிருந்து தன்னுடைய மண்ணைக் காப்பாற்றி விட்ட மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் ராணி அரசு நிர்வாகங்களில் ஈடுபட ஆரம்பித்தாள்.

இந்த ஆனந்தம் அதிக நாள் நீடிக்கவில்லை. இம்முறை இடையூறாக வந்தவர்கள்—ஆங்கிலேயர் அல்லர். இந்திய மண்ணில் பிறந்த பேராசை பிடித்த சில எதிரிகள் தான்.

சதாசிவராவ், நத்தேகான் போன்ற பல உள் நாட்டு எதிரிகள் ஜான்சியின் வளர்ச்சியிலும், அந்நாட்டின் நிர்வாகத் திறனிலும் பொறாமை கொண்டவர்கள். மக்களிடையே ராணி பற்றி இருந்த நல்லெண்ணங்களைக் கண்டு உள்ளம் வெதும்பியவர்கள். ஜான்சி நாட்டை எப்படியும் சீர்குலையச் செய்ய வேண்டும் என்ற துர் எண்ணத்துடன் காத்திருந்தவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் ஜான்சியை எப்படியாகிலும் கைப் பற்றி விடுவது என்ற எண்ணத்துடன் செயல்பட்டார்கள். பல தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனாலும் ஜான்சியை அசைக்க முடியவில்லை. ஜான்சி ராணியின் நிர்வாகத் திறமையும், நேர்மையும், வீரமும், விவேகமும் அவளைக் காத்து நின்றன. மக்களிடம் ராணி இலட்சுமிபாய் கொண்டிருந்த பேரன்பும், ஜான்சி மக்களுக்கு ராணி பால் இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும் அரணாக நின்று ஈடு கொடுத்தன.

எதிரிகளின் எண்ணங்கள் தூள்தூளாகின. தங்கள் முயற்சியில் தோற்றுப் போன எதிரிகள் ஓடிப் போனார்கள். ஜான்சியில் அமைதியும், சமாதானமும் மீண்டும் தலை தூக்கின. மக்கள் ஆனந்தமாக வாழ ஆரம்பித்தனர்.

குடிமக்கள் குறையைத் தன் குறையாக நினைத்தாள் ஜான்சிராணி. குடிமக்களைத் தன் குழந்தைகளாகவே கருதினாள் அவள். அரசு நிர்வாகத்தில் அதிக அக்கறையும், ஈடுபாடும் காட்டி வந்தாள். மக்கள் நல்வாழ்வு கருதி பல திட்டங்களைத் தீட்டி வந்தாள். படைபலம், ஆயுத உற்பத்தி, நாட்டின் பாதுகாப்பு முறைகள், அரசு செயல்பாடுகள் அனைத்திலுமே ஜான்சிராணி மிகுந்த கவனம் எடுத்துக் கொண்டாள். தன் எண்ணங்களையும், செயல்களையும் ஜான்சி நாட்டு மக்களுக்காகவே அர்ப்பணித்து வந்தாள் என்று சொன்னால் மிகையாகாது.

ஜான்சி ராணி இலட்சுமிபாயின் ஆட்சியில் கலையும், கலாச்சாரமும் செழித்து வளர்ந்தன. ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையும், ஆட்சியில் இருந்த கவனமும், மக்கள் பால் அவள் கொண்டிருந்த ஈடுபாடும் அவளை மக்களுடைய உணர்வுகளுடன் இறுகப் பிணைத்தன.

கல்வியில் இளமை முதல் அவளுக்கிருந்த ஆர்வம் இத்தனை ஆண்டுகளிலும் சிறிதும் குறையவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



புத்தகங்களைத் வாங்குவதிலும், வாங்கிச் சேர்ப்பதிலும் ராணி அதிக பணத்தையும், நேரத்தையும் ஒதுக்கினாள். தனக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் நல்ல நூல்களைப் படித்து வந்தார். தனக்கென்று சொந்தமான சிறந்த நூல் நிலையமொன்றையும் தன் மாளிகையில் வைத்திருந்தாள் ராணி. அறிவு தாகம் ஜான்சிக்கு புதிதான ஒன்றல்லவே?

பெண்கள் நலனிலும் முன்னேற்றத்திலும் ராணிக்கு இருந்த ஈடுபாடும் அக்கறையும் சொல்லவொண்ணாதது. தன்னுடைய ஆட்சியில் பெண்களுக்கும் சரிசமமான நிலையை அளிக்க விருப்பம் கொண்டாள் ராணி. பெண்களை ஆண்களுக்கு நிகராக தொழில்களில் ஈடுபடுத்தவும் எண்ணம் கொண்டாள். அதன் படியே நடக்கவும் ஆரம்பித்தாள்.

ராணியின் படையில் பெண்களை அதிகம் சேர்த்ததுடன் அவர்களுக்கு தகுந்த இராணுவப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தது. அரசுப் பணிகளுக்கும் பெண்களை அதிகம் பயன்படுத்திக் கொண்டாள் ராணி. எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு உரிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. பெண்கள் நலத்தில் அந்த நூற்றாண்டிலேயே அக்கறை காட்டிய இந்தியப் பெண்மணி ஜான்சிராணி என்றே சொல்லாம்.

ஓராண்டுக்குள் ஜான்சி ராணியின் திறமையும், நோக்கமும் மக்களிடையே திறம்பட வெளிப்பட ஆரம்பித்தது. அவள் ஜான்சி மக்களின் அன்பையும், மதிப்பையும் விரைவில் சம்பாதித்து விட்டாள்.

1857 ஆம் ஆண்டு ஜான்சி நாட்டின் வரலாற்றில் சில புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தியது. ஆங்கிலேய ஆதிக்கம் ஜான்சியிலிருந்து விலகியிருந்தாலும் இந்தியாவின் பிற பகுதிகளில் ஆங்கிலேயர் கை ஓங்கியே இருந்தது. ஆங்கிலேயரின் ஆதிக்க வெறிக்கு அளவேது?

•

படிப்பகம்

www.padippakam.com



1857 ஆம் ஆண்டில் ஆங்கிலேயப் படைகள் ஜான்சியிலும் தன் கைவரிசையை காட்ட ஆரம்பித்தன. இப்படிப் பட்ட ஒரு நிலைமையை ஆரம்பத்திலிருந்தே இலட்சுமிபாய் எதிர்பார்த்துத்தான் காத்திருந்தாள்.

ஒரு நாள் ஜான்சி கோட்டையின் மீது குண்டுமாரிப் பொழிந்தது. ஆனால் இதற்கு எதிர் தாக்குதலை ஜான்சி கோட்டை திருப்பியளிக்கவும் தவறவில்லை. ஆங்கிலேயப் படை தாக்கியவுடன் ஜான்சி கோட்டையும் திருப்பி தாக்க ஆரம்பித்தது. ஆங்கிலேயப்படை அதிர்ச்சி அடைந்தது. அதனால் தன் தாக்குதலின் வேகத்தை தீவிரப்படுத்தியது.

மறுநாள் நடந்த போராட்டத்தின் போது ஜான்சி கோட்டை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ராணி அதிர்ச்சி யடைந்தாள். ஒருவாரப் போராட்டத்திற்குப் பின் தாக்குப் பிடிக்க முடியாமல் தன் சகோதரன் நாணா சாகிப்பின் உதவியைக் கோரினாள்.

1857, மார்ச் மாதத்தின் கடைசி நாளில் இரவு முடிந்து பொழுது புலர ஆரம்பித்தது. தன் சகோதரியின் வேண்டு கோளுக்கிணங்கி நாணா சாகிப் அனுப்பிய படை ஜான்சிக்கு வந்து சேர்ந்தது. ராணிககு இது புதிய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது. புதிய பலத் துடன் படைகளை ஏவ ஆரம்பித்தாள். நாணா சாகிப்பின் படையின் துணையோடு ஜான்சி படைகள் ஆங்கிலேயப் படையுடன் மோத ஆரம்பித்தன. ஆனால் ஆங்கிலேயப் படையில் ஆள்பலமும், ஆயுத பலமும் ஓங்கியிருந்தன. பணபலமும் இவற்றுக்கு பக்க பலமாக அமைந்திருந்தது.

தாத்யா டோப்பின் தலைமையில் நாணா சாகிப் அனுப்பிய இருபதினாயிரம் வீரர்களும் தோல்விகண்டனர். தாத்யா டோப்பின் திறமையிலும், இருபதினாயிரம் வீரர் களின் பலத்திலும் அதிக நம்பிக்கை கொண்டிருந்த ஜான்சி ராணிக்கு இத்தோல்வி பெரும் அதிர்ச்சியை தந்தது. ஜான்சி

www.padippakam.com



மக்கள் செய்வதறியாது திகைத்தனர், ராணியின் பெரும் முயற்சிகளையும் கடந்து மக்களை அவநம்பிக்கையும் அச்சமும் சூழ்ந்து கொண்டன. அச்சமுற்ற அவர்கள் தளர்வுற்றனர்.

ஆனால் இரும்பொத்த இலட்சுமிபாயின் மனம் இத்தனை குழப்பத்திலும் தடுமாறவில்லை. தன்னுயிரைவிட மேலாக மதித்த ஜான்சி மக்களை காப்பதே தனது குறிக்கோள் என்பதை மனத்தில் கொண்டாள். ஜான்சி மக்களை ஒன்று திரட்டினாள் அவர்களுக்கு, நம்பிக்கையையும், புதிய தைரியத்தையும் ஊட்டினாள். 'தாயக சுதந்திரமே தமது தாரக மந்திரம்' என்பதை நினைவூட்டினாள். அவர்களிடையே ஆங்கிலேய ஆட்சியை ஒழிப்பதே தமது குறிக்கோள் என்ற எண்ணத்தை வலியுறுத்தினாள்.

கூட்டத்தின் முடிவில் மக்கள் புதிய பலத்துடன் வெளி வந்தார்கள். ஜான்சி ராணியுடன் இணைந்து போராட முடிவு செய்தார்கள். நாட்டு நலமே நமது நலம் என்று தீர்மானித்தார்கள். மக்களின் இந்த மனமாற்றம் ராணிக்கு பெரும் ஆறுதலையும், பலத்தையும் அளித்தது.

மக்களின் உறுதியும், தன்னிடமிருந்த ஆயிரத்து ஐந்நூறு வீரர்களும் மட்டுமே துணைவர ஜான்சி ராணி தானே படை நடத்திச் சென்றாள். வெற்றி அல்லது வீர மரணம் என்ற உயர்ந்த எண்ணத்துடன் முன்னேறினாள் ராணி.

ஜான்சி ராணி அணிந்திருந்த ஆடைகள் அவள் வழக்கமாக அணியும் ஆண் உடைகளைப்போலவே அமைந்திருந்தன. தோற்றத்தில் அவள் ஓர் இளைஞனை ஒத்திருந்தாள். இடுப்பிலே நஞ்சில் தோய்த்த குறுவாள் ஒன்றையும் செருகி வைத்திருந்தாள் ராணி. மார்பில் கவசமும், கையில் வீரவாளும் தாங்கியிருந்த ராணி இரண்டு துப்பாக்கிகளையும் ஏந்தியிருந்தாள். தலையில் சிவப்பு பட்டுத்

படிப்பகம்

www.padippakam.com



தொப்பியும், கரங்களில் பாதுகாப்பு அணிகளும் அணிந்து ஜான்சி ராணி போர்க் கோலத்தில் சென்றாள்.

குறைந்த பட்ச ஆள் பலத்துடன் ராணியின் நுட்பம் நிறைந்த போர்முறைகள் கடினமானவையாக இருந்தன. வெள்ளைப் படைகளால் ராணியின் சிக்கலான போர் முறைகளைக் தாக்குப் பிடிக்க முடியவில்லை. புயலெனப் பாய்ந்து போரிட்டாள் ராணி.ராணியின் போர் வேகத்தை. தாக்குப் பிடிக்க முடியாத வெள்ளைச் சிப்பாய்கள் பதுங்கத் தொடங்கினார்கள். மகராணிக்கு மகத்தான வெற்றி. மனநிறைவுடன் ராணி மாளிகைக்குத் திரும்பினாள். அங்கே அதிர்ச்சி காத்திருந்தது.

கோட்டைத் தலைவாயிலை காத்து நின்ற இருபெரும் வீரர்களை ஜான்சிக் கோட்டை இழந்து நின்றது. பீரங்கிப் படைத் தலைவன் குலாம் கௌஸ்கான், தலைவாயில் பொறுப்பாளர் கும்பர் குதா பக்ஷ் ஆகியோரின் இழப்பு மகாராணியின் மனத்தை வருத்தின. அடுத்த கட்டம் என்ன என்ற கேள்விக்குறி பூதாகரமாக ராணியின் மனத்தை ஆக்கிரமித்தது.

கோட்டை பெரும் அபாய கட்டத்தை எதிர்நோக்கி இருந்தது. ஜான்சியிலிருந்து பாதுகாப்பாக ராணி வெளி யேறுவதை அனைவரும் விரும்பினார்கள். ராணியிடம் இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

ராணி சிறிதும் அஞ்சவில்லை. தன்னுடன் பன்னிரண்டு வீரர்களை அழைத்துக் கொண்டாள். முதுகு மீது தன் மகன் தாமோதரனை கட்டிக் கொண்டாள். குதிரை மீது ஏறி மிக வேகமாக வடக்கு வாயிலில் வெளிப்பட்டாள்.

விரையில் ஜான்சிக் கோட்டை ஆங்கிலேயர் கைவச மானது. நாட்டில் கொலையும், கொள்ளையும் தாண்டவ மாடின. எங்கு திரும்பினாலும் நாசகாரியங்களே எஞ்சி யிருந்தன. ஜான்சி மயான பூமியாகக் காட்சி அளித்தது

www.padippakam.com



எங்குதேடியும் ஜான்சி ராணி கிடைக்கவில்லை. ஜான்சி ராணி வெளியேறியதை அறிந்த வெள்ளை அரசு லெப்டினன்ட் பௌகரை அனுப்பியது. பௌகர் ராணியை வலை வீசித் தேடி சலித்தான்.

அப்போது ராணி தன் மகனுடன் கலாமி நகருக்கு கிளம்புவதற்காக பாண்டரே என்ற இடத்தில் இருந்தாள். ராணி கிளம்ப முயலும் போது பௌகர் அங்கு வந்து சேர்ந்தான்.

வீர ரத்தத்தை சுமந்து நின்ற ராணி சிறிதும் அஞ்ச வில்லை. மகனை முதுகிலும், ஆயுதங்களை இடையிலும், தைரியத்தை நெஞ்சிலும் சுமந்து நின்ற ராணி குதிரை மீது தாவினாள். பௌகர் பின் தொடர்ந்தான்.

இந்தியாவின் இணையற்றப் பெண் சிங்கத்திடம் ஈடுகொடுக்க முடியாமல் பௌகர் வீழ்ந்தான். வீரர்கள் சிதறினார்கள். ஜான்சிராணி தப்பிச் சென்றாள்.

விரைந்து சென்ற குதிரை நள்ளிரவில் கலாமி நகரை அடைந்தது. இருபத்து நான்கு மணி நேர பயணத்தில் நூற்றியிரண்டு மைல் தூரத்தை கடந்து வந்த அந்த வீரப் புரவி கலாமியில்தன் இறுதி மூச்சை விட்டது.

ராணி தன் சகோதரனை கலாமி மன்னர் உதவியுடன் புதிய போர் முயற்சியில் ஈடுபட்டாள். ஆங்கில வீரர் களுடன் மீண்டும் ஒரு போருக்கு தயாரானாள். ஆங்கிலே யர் அங்கே மோதிய போது. ஜான்சிராணி திரும்பிய திசையெல்லாம் ஆங்கிலத் தலைகளைக் கொய்து வீழ்த்தி னாள். நின்ற இடத்தில் எல்லாம் அவர்களை நிலை தடுமாறச் செய்தாள். வாள் பாய்ந்த இடத்தில் எல்லாம் ஆங்கிலேயர் படை வீழ்ந்தது.

வீரப்போரின் வேகம் தாளாமல் ஆங்கிலேயப்படை அச்சமுற்றது. அடுத்து என்ன என்ற எண்ணத்தின் பின் வெள்ளைப் படைகள் ஒட்டகமேறி வந்தன. இந்த

www.padippakam.com



மாற்றம் ஆங்கிலேயருக்கு சாதகமாக அமைந்தது. இந்தியப் படைகள் தோல்வியுற்றன. கலாமிக் கோட்டை ஆங்கிலேயர் வசமானது. ஜான்சிராணி கோட்டையிலிருந்து வெளியேறினாள்.

அப்போது வெள்ளையருக்கு ஆதரவளித்த இந்திய நகர் குவாலியர் ஆகும். கலாமியிலிருந்த வந்த ராணி இது பற்றி அறிந்து தன்னிடமிருந்த படையுடன் குவாலியர் மீது தாக்குதல் நடத்தினாள். இராணியின் ஆலோசனையின் பேரில் நடந்த அப்போரில் குவாலியர் ஜான்சிராணியின் வசமானது.

குவாலியர் மக்களும் ஜான்சிராணியின் வரவை வரவேற்றனர். குவாலியர் மக்கள் மனதில் மகிழ்ச்சி பூத்தது. குவாலியர் நகரமே வெற்றிக் களிப்பில் மூழ்கியது.

இந்த மகிழ்ச்சியும் சிறிது காலமே நீடித்தது. ஆங்கிலப் படை ஹியுரோஸ் தலைமையிலான ஒரு சிறுபடையை குவாலியருக்கு அனுப்பி வைத்தது. படைகள் குவாலியரை நெருங்கின. இது கேட்ட ஜான்சிராணி தனது படைகளை தாத்யா டோபே தலைமையில் தயார் செய்தாள்.

நகரத்தின் கிழக்கு பகுதியை ராணியே பொறுப் பேற்றுக் கொண்டாள். ஆணுடையில் கிளம்பிய அவள் உருவிய வாளுடன் குதிரை மீது ஏறிக் கிளம்பினாள்.

ஆனால் ஆங்கிலப்படை போர் விதிகளை மீறி கண் மூடித் தனமாக தாக்கியதால் இந்தியப்படை சிதறியது. ஆனாலும் திரும்பும் திசைசெயல்லாம் தென்றலாய் செயல் பட்டு தீரம்புரிந்த ராணியைக் கண்டு வெள்ளை அதிகாரிகள் அஞ்சினர். அவளது வீர ஆவேசத்தைக் கண்டு நடுங்கினர்.

முடிவில் ராணி பத்தே வீரர்களுடன் தனித்து விடப் பட்டாள். தயங்காது சுழன்று போரிட்டாள். கண்ணிமைக்

www.padippakam.com



கும் நேரத்துக்குள் எதிரிகளைக் கிறிக்கொண்டு வெளியேறி வேகமாக புரவியில் சென்றாள்.

அவளைத் துரத்தி வந்த துப்பாக்கி குண்டு ஒன்று அவள் முதுகைத் தீண்டியது. ஆனாலும் ராணி நிற்க வில்லை. தொடர்ந்து போராடிக் கொண்டே முன்னேறி னாள்.

அவளது துரதிர்ஷ்டம் இடையில் தடையாக அமைந் தது ராணி சென்ற பாதையில் ஒரு கால்வாய் குறுக் கிட்டது. குதிரை ஓட்டத்தை நிறுத்தியது. தயங்கி நின்றது. மேலும் நகர மறுத்தது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திய பரங்கிப் படை வீரர் ஜான்சி ராணியைத் தாக்கினர். அவள் மார்பிலும் சிரசிலும் வாளைப் பாய்ச்சினார்கள். அப்போதும் அந்த வீரப் பெண் தன் வாள் வீச்சை நிறுத்தவில்லை. அவள் கரங்கள் சுழன்று செயல்பட்டன. பலர் வீழ்ந்தனர்.

தன் இறுதிக் காலம் நெருங்கி விட்டதை அறிந்த ராணி தன் பணியாளை அழைத்தாள். அவனுடைய உதவியுடன் அருகிலிருந்த குடிசையொன்றில் ஒதுங்கினாள் தன் உடல் கூட வெள்ளையரிடம் போய்ச் சேரக்கூடாது என்ற உறுதி யான சிந்தனையுடன் ராணியின் வீர ஆத்மா விண் ணுலகம் சென்றது.

நமது மண்ணின் மாண்பையும். மானத்தையும் காத்த ஜான்சிராணி சுதந்திரத்திற்காக இந்த பூமி ஏற்ற முதல் பெண் பலியாவாள்.

அன்று வித்திட்ட அந்த சுதந்திர வேட்கைதான் இன்றளவும் நம்மை சுதந்திரக் காற்றை சுவாசிக்க வைத்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



நாம் பெற்ற சுதந்திரம் சாதரணமாக வந்ததல்ல. நமது விலைமதிப்பில்லா பொக்கிஷங்களின் இழப்பில் உருவானது.

இருபத்து இரண்டே வயது நிரம்பிய இளமைப் பருவத்தில் எந்த சுகத்தையும் பெரிதென எண்ணாமல் சுதந்திரமே பெரிதென மதித்தவள் ஜான்சிராணி.

தன்னுயிர் ஈந்து இந்த மண்ணினைக் காத்த அந்த மாமணியை பாரதபூமி இன்றும் என்றும் என்றென்றும் போற்றும் என்பது திண்ணம்.

• • •

படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை வேண்டிய அன்னி பெசன்ட்

அன்பு அனைத்தையும் தாங்கக் கூடியது எல்லா வற்றையும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. எதையும் எதிர் பார்க்காதது. பிரதி பலனாக அன்பையேக் கூட ஏந்தி நிற்காதது. ஆசைகளுக்கு முதலிடம் கொடுக்காதது. வீண் மரியாதைகளுக்கும் வெறும் சம்பிரதாயங்களுக்கும் பலி யாகாதது. சிறுமை கண்டு சினந்து விடாதது. பெருமையை கூடப் பெரிதாக எண்ணாதது. வாழ்விலும் தாழ்விலும் துணையாக வருவது நன்மையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது. அன்பு அனைத்துலக மக்களாலும் பேசப் படுகிற இனிய மொழி.

அத்தகைய அன்பு எந்த நாட்டில் பிறந்தவருக்கும் இருக்கக் கூடிய உயர்ந்த உணர்வு. அந்த நல் உணர்வு மேலோங்கி இந்திய நாட்டின் விடுதலைக்கும், இந்திய மக்களின் நல்வாழ்விற்கும் பாடுபட்ட ஆங்கிலப் பெண் மணி ஒருவரை இந்த நாடு மறக்கவே முடியாது.

அவர் தான் அன்னி பெசன்ட் அம்மையார். அன்னி 1847 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி இலண்டனில் பிறந்தவர். இங்கிலாந்து அவருக்கு தாய்நாடு, அவருடைய தந்தை டாக்டர் வில்லியம் வுட் என்பவர். தாயார் பெயர் எமிலி. வில்லியம் வுட் கல்வியில் சிறந்தவர். சிறந்த அறிவாளி. மருத்துவப் பயிற்சியில் பட்டம் பெற்றவர். ஆனாலும் மருத்துவராக அவர் பணி புரிய விரும்பவில்லை,

படிப்பகம்

www.padippakam.com



அதிகமான அறிவு நாட்டமும், பல துறைகளில் அவருக்கு இருந்த ஆர்வமும் அவரை மருத்துவப் பணியை மேற் கொள்ள விடவில்லை. தொழில் ஆர்வம் காரணமாக வில்லியம் பெரும் பணத்தை முதலீடு செய்து வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தார்.

வில்லியம் வுட்டின் மனைவி எமிலி மோரிஸ் மிகுந்த மதப்பற்று மிக்கவர். அவருக்கும் அறிவு பூர்வமான நூல் களைப் படிப்பதிலும் அது பற்றி கணவனிடம் பேசு வதிலும் ஆர்வம் அதிகம். இருவரின் அறிவு தாகமும் அவர் கள் குழந்தைகளிடமும் நிரம்பியிருந்தது. அறிவில் ஒத்திருந்த வில்லியம்ஸ் தம்பதிகள் அன்பினாலும் இணைந் திருந்தனர். அவர்களின் அன்பிற்குரிய குழந்தைகளான ஹாரி அடுத்தவள் அன்னி, கடைக்குட்டி ஆல்பிரட் வாழ்க் கையை இனிக்கச் செய்தனர்.

இரண்டு ஆண்களுக்கு நடுவில் பிறந்த ஒரே பெண் என்ற படியால் அன்னியிடம் அனைவரும் அன்பைப்பொழிந் தனர். மிகவும் செல்லமாக வளர்ந்த அன்னியிடம் மென்மை யும், அழகும் மிகையாக இருந்தன. எப்போதும் சுறுசுறுப் பாக அன்னி சுற்றி வந்தாள். துணிச்சலும், துறுதுறுப்பும் அன்னியின் உடன் பிறந்தவை. அவளுடைய இந்த குணங் களுக்காக அன்னிக்கு அளிக்கப்பட்ட செல்லப் பெயர் 'சிறிய வான் கோழி' என்பதாகும்.

இப்படி அன்பான சூழ்நிலையில் வளர்ந்த அன்னிக்கு இளம் வயதிலே பெரும் இழப்பு ஒன்று ஏற்பட்டது. அவள் தந்தையின் மரணம் தான் அது. அப்போது அன்னிக்கு வயது ஐந்து. டாக்டர் வில்லியம் வுட் மருத்துவராக பணி புரியவில்லையே தவிர நண்பர்களுக்கு உதவும் வகையில் சக டாக்டர்களுடன் இணைந்து மருத்துவ உதவிகளை செய்து வந்தார். அப்படி அவர் உதவி வந்த போது ஒரு அறுவை சிகிச்சை செய்ய நேரிட்டது. அதுவே அவருக்கு எமனாக வந்தது. ஒரு காசநோய் நோயாளியின் எலும்பில் அறுவை சிகிச்சை செய்த டாக்டர் வில்லியம்சின் விரலில்

படிப்பகம்

www.padippakam.com



அந்நோயாளியின் எலும்பு குத்தி விட்டது. வுட்டின் அஜாக்கிரதை காரணமாக இந்த சிறிய விபத்து கவனிக்கப் படவில்லை. நோய் வில்லியம்சை பற்றிக் கொண்டது. முடிவில் வில்லியம்ஸ் நோயின் கோரப்பிடியில் சிக்கி வருந் தினார். டாக்டர்கள் எவ்வளவு முயன்றும் அன்னியின் தந்தையை காப்பாற்ற முடியவில்லை. முடிவில் டாக்டர் வில்லியம் வுட் இறந்தார். இந்த நிகழ்ச்சி அன்னியை மட்டு மல்லாது முழுக் குடும்பத்தையுமே தாக்கியது. அன்னியை அதிர்ச்சியும், அழுகையும் ஆட்கொண்டது. எமிலி மோரிசுக்கோ துயரம் மட்டுமன்றி குடும்பாரமும் சேர்த்து அழுத்தியது.

இந்தச் சோகம் இன்னொரு சோகத்திற்கு வழி கோலியது. கடைக் குட்டி ஆல்பிரட் தந்தையை தேடி அழுதான். தந்தையின் பிரிவு அவனை பெரிதும் வருத்தியது. நோயில் விழுந்த அவன் இறுதியாக ஒரு நாள் மடிய நேரிட்டது. இந்த இரு இழப்புகளும் எமிலியை புதிய முடிவென்றை தேர்ந்தெடுக்க வைத்தன.

தன் மூத்த மகன் ஹாரி வழக்குரைஞராக வரவேண்டு மென்பதே டாக்டர் வில்லியம்சின் ஆவலாக இருந்து வந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றவும், அதற்கான பொருளை ஈட்டவும், குடும்ப துயரத்தை மறக்கவும் இட மாற்றம் தேவை என்றுணர்ந்தார். அதன் பொருட்டு ஹாரோ நகருக்கு செல்லவும் எமிலி முடிவு செய்தார். ஹாரியின் படிப்பு செலவுக்கு பெரும் பணம் தேவைப் படுவதால் அதற்காக மாணவர் விடுதியொன்றை நடத் தவும் அவர் விரும்பினார். அதன் படியே அன்னியின் குடும்பம் ஹாரோ நகருக்குச் சென்றது. அங்கு மாணவர் விடுதியொன்றை எமிலி நடத்தினார். அன்னி ஓர் இளவரசி போல அங்கு சுற்றி வந்தார். பல ஆண் பிள்ளைகள் இருக்கும் இடத்தில் அன்னியை வளர்ப்பது சிரமம் என்பதை நன்றாகவே உணர்ந்திருந்தார் எமிலி, ஆனாலும் வேறு

www.padippakam.com



வழியின்றி அன்னி பற்றிய கவலையுடனேயே எமிலி அந்த விடுதியை நடத்தி வந்தார்.

அப்போது அவரது கவலையைத் தீர்க்கும் சம்பவம் ஒன்று நடந்தது. அவ்விடுதிக்கு ஒரு முறை மேரியட் என்ற அம்மையார் வந்தார். அன்னியின் துள்ளி ஓடும் நடை, துடிப்பான செயல்கள், துறுதுறுத்த கண்கள் இவை மேரியட்டின் மனதை பெரிதும் கவர்ந்து விட்டன. மேரியட் திருமணமாகாதவர். ஆனாலும் குழந்தைகளின் பாசத்தை பெரிதும் விரும்பியவர். வசதி படைத்த மேரியட்டிற்கு தியாக உணர்வும், பெரிய மனமும் இருந்தன. எமிலியின் நிலையைக் கண்டு இரங்கிய மேரியட் குழந்தை அன்னியின் நல்வாழ்வு கருதி அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினார். முதலில் எமிலி இந்த விருப்பத்தை ஏற்க வில்லை. ஆனால் பின்னர் தன் மகளின் நல்வாழ்வு கருதி இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார். அப்போது அன்னிக்கு வயது ஏழு. அவளது வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது.

அன்னி மிஸ் மேரியட்டுடன் சென்று தங்கினாள். மேரியட்டின் சகோதரி மகள் அங்கு அன்னிக்குத் துணையாக இருந்தாள். இருவருக்கும் கல்வி, மற்றும் சகல வசதிகளும் வழங்கப்பட்டன. ஏழு ஆண்டுகள் நல்ல ஆரோக்கியமான அறிவுச் சூழலில் கழிந்தன. அங்கு அன்னிக்கு படிப்பு மட்டுமன்றி உடற்பயிற்சிகளும் வழங்கப்பட்டன. குதிரைச் சவாரி, உல்லாசப் பயணங்கள், நல்ல பழக்க வழக்கங்கள், மதப்பற்று ஆகியவை அன்னியின் வசமாயின. சுயமாக வாழ்வதற்கு நம்பிக்கையும், ஆர்வமும் அன்னிக்கு ஊட்டப் பட்டன. சிறந்த கல்வியின் பொருட்டு அன்னி ஜெர்மனிக்கும் பாரிசுக்கும் பிற இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டார். வளமான வாழ்வும், சிறந்த கல்வியும் அன்னிக்கு கிடைத்தன.

தன்னுடைய பதினாறாவது வயதில் கல்விப் பயிற்சி முடிந்து, ஹாரோ திரும்பிய அன்னிக்கு நல்ல நூல்களைப்

படிப்பகம்

www.padippakam.com



படிக்கும் பழக்கமும், சங்கீதம், சேவை முதலிய சிறந்த பொழுது போக்குகளும் துணையாக வந்தன.

ஹாரோவின் சூழ்நிலை அன்னிக்கு மிகவும் பழக்க மில்லாததாக இருந்தது. தாய் விடுதி வேலைகளில் ஈடுபட்டிருந்தார். தமையன் ஹாரி படிப்பில் முற்றிலுமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தான். அன்னிக்கு தனிமை தான் எஞ்சி நின்றது. அந்த தனிமையை அன்னி வீணாக்க விரும்பவில்லை. விடுதியில் கிடைத்த நூல்களைப் படிக்க ஆரம்பித்தாள். தவிர ஹாரோவில் கிடைக்கக் கூடிய அறிவு நூல்கள், கவிதைப் புத்தகங்கள், அறிவியல் நூல்கள் ஆகியவைகளை அன்னி விரும்பி படித்தாள் இவை தவிர அறிவு வளர்க்கும் எந்த நூலையும் அன்னி விட்டு வைத்த தில்லை. நாவல்களை வாசிப்பதிலும் அன்னி ஆர்வம் காட்டினாள்.

வீண்பொழுது போக்குவதில் அன்னிக்கு ஆர்வம் இருக்கவில்லை. எப்பொழுதையும் பயனுள்ள பொழுதாக ஆக்குவதையே அன்னி விரும்பினாள். இசை, வில்வித்தை, அம்பெய்தல் போன்றவற்றில் பொழுதைப் போக்கினாள். 'நாடோடி ராணி' என்ற பெயருடன் இருந்த குதிரை யொன்று அன்னியிடமிருந்தது. அதில் ஏறி அடிக்கடி தனிமையில் பயணம் செய்வாள்

அன்னிக்கு பத்தொன்பது ஆண்டுகள் நிரம்பின. அந்த வருட ஈஸ்டர் பண்டிகையை தாத்தா வீட்டில் கொண்டாடு வதற்காக அன்னி ஈஸ்டர் விடுமுறையின் போது கிராமத்துக்குச் சென்றாள். அன்னியின் கிராமத்து துணை யாகத் தோழி மின்னி அமைந்தாள், உல்லாசமாக கிராமத்தை சுற்றி வந்தார்கள். அப்போது தன்னுடைய வாழ்வின் ஒரு திருப்பு முனையை சந்திக்கப் போகிறாள் என்பதை அறியாத அன்னி இளமையின் கனவுகளுடன் வளைய வந்தாள்.

www.padippakam.com



ஈஸ்டர் பண்டிகைக்கு கை நிறைய மலர்களுடனும் மனம் நிறைய மகிழ்ச்சியுடனும் கோயிலுக்குள் நுழைந்தாள் அன்னி. கூடவே அவளது தோழி மின்னி. அப்போது தான் அந்த சந்திப்பு நிகழ்ந்தது. பிராங்க் பெஸன்ட் என்ற மதபோதகர் அறிமுகம் ஆனார்.

பிராங்க் பெஸன்ட் ஒரு மத போதகர். அவர் ஒரு வியாபாரியின் மகன் என்றாலும் அவரது மனது மதப் பற்றில் ஊறியது. பொருளீட்டும் தொழிலை விட மன நிம்மதி தரும் மத போதனையை அவர் விரும்பி ஏற்றுக் கொண்டார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்ற அவர் அன்னியின் வெள்ளை உள்ளத்தினால் ஈர்க்கப் பட்டார்.

மதப் பற்றில் ஊறிய குடும்பத்திலிருந்து வந்த அன்னிக்கும் பெஸன்ட்டின் போதனைகள் பிடித்துப் போயின. ஒரு நல்ல நட்பு உருவானது. களங்கமில்லாத அந்த நட்பு அன்னியை பொறுத்த வரை நட்பாகவே எண்ணப்பட்டது ஆனால் பிராங்க் பெசன்ட்டின் எண்ணம் வேறு விதமாக அமைந்திருந்தது. அதை அவர் காதலாகக் கருதினார். இந்த ஒரு தலைப்பட்சக் காதலை திருமணமாக்க வேண்டும் என்றும் கனவு கண்டார்.

அதற்கும் காலம் பிறந்தது. ஈஸ்டர் முடிந்து பிராங்க் பெசன்ட் ஊருக்கு போக வேண்டிய நாள் வந்தது. அன்னியை சந்தித்த அவர் தான் அன்னியை திருமணம் செய்ய விரும்புவதைத் தெரிவித்தார். அன்னிக்கு இச்செய்தி அதிர்ச்சி அளித்தது. ஆனாலும் அவருடைய தொழில் மற்றும் மதிப்பை நினைத்து தன்னுடைய விருப்பமின்மையை தெரிவிக்கவில்லை. பிறகு பார்க்கலாம் என்ற நினைப்பில் காலம் மனித மனத்தை மாற்றும் என்ற நம்பிக்கையில் பேசாமல் இருந்து விட்டாள். ஆனால் பெசன்ட் இந்த மௌனத்தை சம்மதம் என்று எண்ணிக் கொண்டார். திருமணத்தை விரைவில் நடத்தவும் முடிவு செய்தார்.

www.padippakam.com



ஹாரோவுக்கு சென்ற பிராங்க் பெசன்ட் அன்னியின் தாயாரைச் சந்தித்தார். அன்னியை தாம் சந்தித்தது பற்றியும் தமது திருமண எண்ணம் பற்றியும் எமிலியிடம் எடுத்துக் கூறினார். 'மகள் சம்மதித்து விட்டாள்' என்று எமிலியும் தவறாக எண்ணிக் கொண்டு, திருமணத்திற்கு தன்னுடைய சம்மதத்தைத் தந்து விட்டார்.

மதப்பற்று மிக்க பிராங்க் பெசன்ட்டை தேர்ந்தெடுக்க எமிலி விரும்பினாலும் அன்னியின் மனம் இந்த திருமணத்தில் விருப்பம் காட்டவில்லை. ஆனாலும் அன்னையின் வாக்கைக் காப்பாற்ற கடமைப்பட்டுள்ள அன்னி இறுதியில் தன்னுடைய விருப்பத்தையும் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

அன்னியின் திருமண நிச்சயதார்த்தம் வெகு விமரிசை யாக நடத்தப்பட்டது. சில நாட்கள் கழித்து திருமணத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. இடையில் ஹாரியின் படிப்பு நிறைவுற்றது. மேற்படிப்புக்காக ஹாரி கேம்பிரிட்ஜ் செல்ல வேண்டியதாயிற்று. அதனால் எமிலி தான் குடும்பத்துடன் லெனார்ட்ஸ் நகருக்கு சென்று விட்டார். அந்த நகரில் தான் அன்னி 1867 ஆம் ஆண்டு திருமதி அன்னி பெசன்ட் ஆனார். அப்போது அவருக்கு வயது இருபது.

குடும்ப வாழ்க்கை அன்னியைப் பொறுத்தவரை சொர்க்கமாக இருக்கவில்லை. மன ஒற்றுமைக் குறைவு, கருத்துக்களில் ஏற்பட்ட வேற்றுமை காரணமாக குடும்பத் தில் புயல் புகுந்தது. சுதந்திர எண்ணங்கள் கொண்ட அன்னியால், பெசன்ட்டின் பெண்களை அடிமையாகக் கருதும் மனப்பான்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை

அன்னிக்கு இருந்த அறிவு தாகம் அதிகமாயிற்று. நூல்களைப் படிக்கவும், படித்தவற்றை கொண்டு சிறந்த விஷயங்களை எழுதவும ஆர்வம் அதிகரித்தது. கணவனிடம் அன்பான வாழ்வு கிடைக்காத அன்னி சிறு

பெ—3

www.padippakam.com



கதைகளை எழுதத் தொடங்கினார். 'பேமிலி ஹெரால்ட்டு' என்ற பத்திரிகை அவரது சிறுகதைகளை வரவேற்றது. இப்பத்திரிகையில் பிரசுரமான சிறுகதை இவருக்கு முதல் சன்மானத்தை வாங்கித் தந்தது. அன்னி அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. தன்னுள் உறங்கிக் கிடந்த திறமையை அன்னி முதல் முறையாக அடையாளம் கண்டு கொண்டார். தொடர்ந்து சிறு கதைகளை அன்னி எழுதிக் குவித்தார்.

ஓராண்டு கழிந்த போது அன்னிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆர்தர் டிக்பி பெசன்ட் என்று பெயரிட்டார்கள். ஆனால் குழந்தையின் பிறப்பு அன்னியின் மனக்கவலையை மாற்றவில்லை. மாறாக அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. அடுத்த ஆண்டிலேயே இன்னொரு பெண் குழந்தையின் வரவு அன்னியின் நோயை அதிகப் படுத்தியது. நேரமின்மை, குடும்பப் பொறுப்புகள், கணவனின் முரண்பாடுகள் ஆகியவை அன்னியை பெரிதும் பாதித்தன. குழந்தை மேபல் எமிலியின் பிறப்பின் பின் அன்னி படுத்த படுக்கையானார் என்றே சொல்லலாம். அந்நிலையில் அவரைப் பரிசோதிக்க வந்த மருத்துவர் அன்னிக்கு உடல் நோயைவிட மன நோயே அதிகம் என்பதை உணர்ந்து கொண்டார். அதற்கான காரணங்களையும் கேட்டறிந்தார்.

அன்னி பெசன்ட்டின் நூல் ஆர்வம் கண்டு மருத்துவரே புத்தகங்களை கொண்டு வந்து தரத் தொடங்கினார். மூன்றாண்டுகள் வருத்திய நோயின் பிடியிலிருந்து அன்னி ஒருவாறு விடுபட்டார். இந்த கடுமையான காலத்தில்தான் அன்னிக்கு மதத்தின் மீதிருந்த நம்பிக்கை குறையத் தொடங்கியது. நோயிலிருந்து குணமடைந்த அன்னி முற்றிலுமாகத் தன் மதப்பற்றை விட்டு விலகியிருந்தார்.

இதே சந்தர்ப்பத்தில் அன்னியின் தாயார் எமிலியின் சேமிப்பு பணத்தைக் கடனாகப் பெற்றிருந்தவர்கள்

www.padippakam.com



எமிலியை ஏமாற்றி விட்டார்கள். கையிலிருந்த பொருளை இழந்து நின்றார் எமிலி. அன்னியின் குழந்தையும் உடல் நலம் இழந்து வருந்திக் கொண்டிருந்தது. பிராங்க் பெசன்ட்டின் பிடிவாதமும், அடிமைப் படுத்தும் குணமும் மேலோங்கி நின்றன. இவை யாவும் அன்னியின் மன அமைதியைக் குலைத்ததுடன் உடல் நலத்தையும் பாதித்தன. ஆனால் இவை எதுவுமே பெசன்ட்டின் அன்பையோ இரக்கத்தையோ சம்பாதிக்கவில்லை. அவர் எந்த உதவியையும் நல்கவும் முன்வரவில்லை.

இந்த சூழ்நிலைகள் இருவரிடையேயும் திரையொன்றைப் போட்டது. வெறுப்பு, விரக்தி, துயர் கடுமையான போராட்டம் போன்ற வாழ்க்கையின் விரும்பத்தகாத அம்சங்கள் அன்னியை தற்கொலை முயற்சிக்குத் தூண்டின. தற்கொலை செய்து கொள்ள நினைத்த அன்னி அதில் ஈடுபட்டபோது மனப் போராட்டம் ஏற்பட்டது. தன்னையே கோழை என்று கோபித்து கொண்டார் அன்னி. மனம் மாறிய அன்னி தற்கொலை முயற்சியை கைவிட்டார். வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடுவதென்று முடிவு செய்தார்.

மீண்டும் குடும்ப வாழ்வில் மனமொன்றி ஈடுபட முயன்ற அன்னிக்கு மத நம்பிக்கை மட்டும் மீண்டும் ஏற்படவில்லை. நாட்கள் உருண்டன.

ஒருநாள் பிராங்க் பெசன்ட்டின் மதத் தொண்டு வேறொரு கிராமத்திற்கு மாற்றப்பட்டது. சிபசே என்ற கிராமத்தில் உள்ள மாதா கோயிலில் இவரது பணி தொடங்கியது. அங்கேயே ஓர் அழகிய வீடு அவருக்கு வழங்கப்பட்டது. அன்னியின் குடும்பம் அங்கே சென்று தங்க சந்தர்ப்பம் அமைந்தது. புதிய சூழ்நிலை அன்னிக்கு பல புதிய சம்பவங்களை அறிமுகப் படுத்தியது.

அன்னி பெசன்ட் தம் ஓய்வு நேரத்தில் பல புதிய நூல்களைப் படிக்க முடிந்தது. பல மத நூல்களையும்

www.padippakam.com



அவர் படிக்க ஆரம்பித்தார். ஆனாலும் மீண்டும் உடல் நலம் குன்ற ஆரம்பித்தது. பிராங்க் பெசன்ட் இப்போதும் அதிகளவு அக்கறை காட்டாமலேயே இருந்தார். மிக மோசமான உடல்நிலை காரணமாக அன்னி பெசன்ட் தாய் வீட்டுக்குச் சென்றார்.

எமிலியின் அன்பான கவனிப்பு, சுதந்திரமான பழக்க வழக்கங்கள் ஆகியவை அன்னியின் உடல்நிலையை சிறிது தேற்றியது. அங்கு அன்னி சந்தித்தவர்களில் முக்கிய மானவர் தாமஸ் ஸ்காட் என்பவர். தாமசுக்கும் அன்னிக்கும் இடையில் மதக் கருத்துக்கள் ஒற்றுமையுடைன வாக இருந்தன.

தாமஸ் ஸ்காட்டின் வேண்டுகோளின்படி அன்னி எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டார். மத சம்பந்தமான ஓர் ஆய்வுக் கட்டுரையை அன்னி எழுதியும் கொடுத்தார். இக்கட்டுரை கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை குறை கூறும் கருத்துக்களைத் தொகுத்து தந்தது. தம்முடைய கருத்தை தைரியமாகக் கூறினாலும் தாயின் மீதிருந்த மதிப்பு காரணமாக அன்னி மாதா கோயிலுக்கும் சென்று வந்தார். ஆனாலும் மதச் சடங்குகளை முற்றிலும் வெறுத்து ஒதுக்கினார் அவர்.

இசைப் பயிற்சி பெறுவதற்காகத்தான் அவர் மாதா கோயிலுக்கு சென்றார் என்பது இன்னொரு உண்மை. அந்நாளில் ஒருநாள் தனிமையில் மாதா கோயிலில் நின்றிருந்தார். ஏதோ ஒரு வேகம் அன்னியின் மனதைத் தாக்கியது. தனிமையில் பேச ஆரம்பித்தார் அன்னி. தன்னுடைய பேச்சு வல்லமை பற்றி முதல் முறையாக அறிந்து கொள்ள அன்னிக்கு வாய்ப்பு கிடைத்தது. தனக்குள் தூங்கிக் கொண்டிருந்த திறமையைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. தன்னால் பேச்சாற்றலுடன் உரையாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவருள் பூத்தது.

படிப்பகம்

www.padippakam.com



தொடர்ந்து தாமஸ் ஸ்காட்டுக்கு அன்னி அனுப்பிய கட்டுரை வெளியானது, ஆனாலும் அன்னி தன் பெயரில் அக்கட்டுரை பிரசுரமாவதை விரும்பவில்லை. புனை பெயரில் வெளியான இக்கட்டுரை விஷயம் ரகசியமாகவே இருந்தது. ஆனாலும் இதனை எப்படியோ தெரிந்து கொண்ட உறவினர் ஒருவர் இது பற்றிய தகவலை பிராங்க் பெசன்ட்டுக்கு தெரிவித்து விட்டார்.

கோபம் கொண்ட பிராங்க் பெசன்ட் இது பற்றி எச்சரித்து கடிதம் எழுதினார். ஆனால் அன்னியின் எண்ண ஓட்டங்களை அவரால் தடுத்து நிறுத்த முடிய வில்லை. அன்னி மீண்டும் ஒரு கட்டுரையை எழுதி வெளியிட்டார். தொடர்ந்து மாதா கோயிலுக்கு செல்லும் வழக்கத்தை தவிர பிற வழிபாடுகளை புறக்கணித்தார். இந்த நிலை பொது மக்கள் அன்னியைப் பற்றி இழிவாகப் பேசும் நிலையை உருவாக்கியது.

அப்போது அன்னியின் உடல் திரும்பவும் பாதிக்கப் பட்டது. நரம்புத் தளர்ச்சியும், இருதயக் கோளாறும் இடைவிடாது தொல்லை தந்தன. ஆனாலும் அன்னி தன் கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்தார்.

சிபசேவிற்கு சென்ற பிராங்க் பெசன்ட்டின் நண்பர் அன்னியின் போக்கு பற்றி அவரிடம் கூறி குறைப்பட்டுக் கொண்டார். இது 'பிராங்கின் கோபத்தை மேலும் அதிகரித்தது. தம்முடைய குடும்ப வாழ்க்கை நீடிக்க வேண்டும் என்றால் மனைவியின் போக்கில் நிச்சயம் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டும் என்று விரும்பினார் பிராங்க்.

மனைவிக்கு இது குறித்து கோபமான நீண்ட கடிதம் ஒன்றை பெசன்ட் எழுதினார். அக்கடிதத்தில் அன்னியின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தும், மதச் சடங்குகளில் அன்னி கலந்து கொள்வதை வற்புறுத்தியும் அவர் எழுதி யிருந்தார். அப்படி அன்னி தம் விருப்பப்படி நடந்து

www.padippakam.com



கொள்ள மறுத்தால் அன்னி தாய் எமிலியுடன் இருந்து விடுவதையே தாம் விரும்புவதாகவும் பெசன்ட் கடுமையாக எழுதினார்.

இக்கடிதத்தில் இருந்த கட்டளைகள் அன்னி பெசன்ட்டை சிறிதும் பாதிக்கவில்லை. மாறாக ஒரு முடிவுக்கு வருவதற்கு வழி வகுத்தது. மனசாட்சிக்கும், தன் கொள்கைகளுக்கு இடையூறாக தன் கணவன் இருப்பதை அன்னி விரும்பவில்லை. வாழ்க்கையில் திடமான ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டத்தில் இருந்த அவர் தன் கணவனைப் பிரிவதென்று முடிவு செய்தார்.

இந்த முடிவு எமிலிக்கு பெரும் அதிர்ச்சி தருவதாக இருந்தது. மகளின் வாழ்வில் நேர்ந்த இச்சம்பவம் எமிலிக்கு மனக் கலக்கத்தைத் தந்தது.

ஐந்தாண்டு காலமே கணவருடன் வாழ்க்கை நடத்திய அன்னியின் மணவாழ்வு என்றுமே இனிப்பாக இருந்த தில்லை என்றாலும் நிரந்தரமான இந்தப் பிரிவு தமையன் ஹாரிக்குப் பிடித்திருக்கவில்லை. தன் சகோதரியின் மன உணர்வுகளையும், அன்பையும் அறிந்திருந்த ஹாரி விவாகரத்துக்கு ஏற்பாடு செய்தார். நீதிமன்றத்தின் தீர்ப்பு படி 1873 இல் அன்னி பிராங்க் பெசன்ட்டை சட்ட பூர்வமாகப் பிரிந்தார். அதே தீர்ப்பு பெண் எமிலியைத் தாயிடமே வழங்கியது. அன்னி தனி மரமானார். ஆனாலும் கலங்கவில்லை.

தங்குவதற்கு ஒரு வீடு தேவைப்பட்ட தங்கைக்கு மத எதிர்ப்பு பிரச்சாரங்களை விட்டொழிக்கும் பட்சத்தில் வீடு தருவதாக கூறினார் ஹாரி. ஆனால் அன்னி எந்தக் கட்டுப்பாடுகளையும் விரும்பவில்லை. தமையனின் வேண்டுகோளையும் வெறுத்து ஒதுக்கினார். தனியாக வாழத் தொடங்கினார்.

ஜீவனாம்சமாக பிராங்க் பெசன்ட் அனுப்பிய பணம் செலவுகளைச் சமாளிக்கவில்லை. தமக்குத் தெரிந்த தையற்

www.padippakam.com



தொழிலும் பெரும் வருமானத்தை அள்ளித் தரவில்லை. அதனால் ஒரு மதகுரு வீட்டில் வேலைக்குச் சேர்ந்த அன்னி சம்பளத்தை பணமாகப் பெறவில்லை எமிலிக்கு உணவும், உறைவிடமும் இலவசமாகத் தரப்பட்டன.

மூன்று மாத காலம் தன் குழந்தை மேபல் எமிலியுடன் அங்கேயே தங்கியிருந்தார். தொடர்ந்து அன்னியின் பால் கொண்டிருந்த அன்பும், கவலையும் தாய் எமிலி மோரிசின் உடல்நிலையை வருத்தின. ஒருநாள் தாயின் மறைவு அன்னிக்குப் பேரிடியாக வந்தது. எதற்கும்அஞ்சாத அன்னி உடைந்து போய் நின்றார்.

அவர் மனப்புண்ணை ஆற்றுவதாக இருந்தது நண்பர் தாமஸ் ஸ்காட்டின் நட்பு. அன்னியின் நிலை கண்டு இரங்கி அவர் தம்முடைய நூலகத்தை அன்னிக்கு உதவுவதற்காக தந்தார். அன்னி தன் மனக்கவலை மாற்றுவதற்காக படிப்பதிலும் எழுதுவதிலும் அதிக நேரத்தை செல விட்டார்.

அன்னியின் அறிவார்ந்த தொடர்புகள் சார்லஸ் பிராட்லா என்கிற நண்பரை அறிமுகப்படுத்தி வைத்தன. சார்லஸ் பிராட்லா நல்ல பேச்சாளர், சிறந்த சீர்திருத்த வாதி, கிறிஸ்துவ கொள்கைகளை தீவிரமாக எதிர்த்தவர், ஏழைகளின் நண்பன். உழைப்பாளிகளுக்கு உற்ற தோழன், மூட நம்பிக்கைகளை குழி தோண்டி புதைக்கச் சொல்லுபவர்.

பிராட்லா நடத்திய 'தேசிய சீர்திருத்தவாதி' என்கிற பத்திரிகைக்கு அன்னி நிறைய எழுதித் தந்தார். அன்னியின் கருத்துச் செறிந்த பேச்சுக்களையும் சமுதாயப் புரட்சிக் காக பயன்படுத்த பிராட்லா விரும்பினார். அன்னிக்கு மேடைப் பேச்சு வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்தார்.

1874 இல் பிராட்லாவின் தேசிய செக்யூலர் சொஸைட்டியின் உறுப்பினராகச் சேர்ந்த அன்னி மேடை யிலேறி முழங்கினார். அந்த நாள் அவரை மக்களுக்கு

www.padippakam.com



அறிமுகப்படுத்திய மாபெரும் நாளாக அமைந்தது. பொது மக்களிடையே பிரபலமாகி வந்த அன்னி 1877 இல் நோட்டன் பாம்லட் (Knowlten Pamphlet) என்கிற பிரசுரத்தில் மால்துசியன் [Malthusian Doctorine] கொள்கை பற்றி எழுதினார். இது அவருக்குப் பெருந் துன்பத்தை ஏற்படுத்தியது.

தன் குழந்தை தொடர்ந்து அன்னியிடமிருந்து வளர்ந்தால் எமிலியின் எதிர்காலம் இருளாகி விடுமென்று காரணம் கூறி எமிலியை பிரித்துச் சென்றார் பிராங்க் பெசன்ட். அன்னியின் மனநிலையை இது வெகுவாக தாக்கியது. ஆனால் நண்பர்களின் ஆறுதலான பேச்சும் ஊக்கமும் அன்னியை அமைதி அடையச் செய்தன.

பல துறைகளிலும் தன் ஆர்வத்தை விசாலப்படுத்திக் கொண்ட அன்னி 1878 இல் இங்கிலாந்தும், இந்தியாவும் ஆப்கானிஸ்தானும்' என்ற [தன் பிரபலமான] நூலை எழுதி வெளியிட்டார். இச் சிறிய நூலில் விடுதலை வேண்டும் அவசியத்தைக்குறிப்பிட்டு அவர்எழுதியிருந்தார்.

அன்னி பெண்களின் அரசியல் நிலை பற்றி முதல் சொற்பொழிவொன்றையும் ஆற்றினார். அன்னியும் பிராட்லாவும் பல கூட்டங்களில் சென்று பேசி வந்தார்கள்.

அதிகமான நண்பர்கள், விரிவாகிச் சென்ற புகழ் இவை அதே அளவுக்கு எதிரிகளையும் அன்னிக்கு தோற்றுவிக்கத் தவறவில்லை. உறவினர்கள் அன்னியின் கொள்கைகளை வெறுத்ததுடன் தூற்றியும் வந்தனர். ஆனாலும் அன்னிபெசன்ட் தளரவில்லை. தன் இலட்சியமே நோக்கமாகத் தொடர்ந்து சென்றார். அன்னியின் தொடர்புகள் தேசிய எல்லைகளைத் தாண்டின.

அச்சமயம் இலண்டன் பல்கலைக்கழகம் பெண் கல்வியை முதன் முறையாக அறிமுகப்படுத்தியது. அன்னி பெசன்ட்டின் அறிவு தாகம் அவரை மெட்ரிக்குலேஷன் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தூண்டியது. இயல்பாகவே

படிப்பகம்

www.padippakam.com



கல்வி ஆர்வமுடைய அன்னிக்கு பரீட்சையில் தேர்வதும் சுலபமாகவே இருந்தது.

ஆனால் தொடர்ந்து பி.எஸ்.சி வகுப்பில் தேற முடியாதபடி கிறிஸ்துவ மதத்தைப் பற்றிய அன்னியின் கருத்துக்கள் தடையாக அமைந்தன. இவை பற்றி அன்னி கவலைப்படாமல் தன் மேடைப் பேச்சுக்களையும், எழுத்துத் துறையையும் தொடர்ந்து கவனித்து வந்தார்.

சார்லஸ் பிராட்லாவின் உதவியுடன் அன்னி பெசன்ட் நாடு முழுவதும் சுற்றி வந்தார். அன்னியின் மதிப்பு மக்களிடையே உயர்ந்து வந்தது. ஆனாலும் இடையில் ஒரு கசப்பான சம்பவம் நிகழ்ந்தது.

அன்னிக்கு பொதுவுடமைக் கருத்துக்களில் நாட்டமும் நம்பிக்கையும் மிகையாக இருந்தது. ஆனால் பிராட்லா இந்தக் கொள்கையில் நம்பிக்கை இல்லாதவர். இந்தக் கருத்து வேறுபாடு இருவர் திசைகளையும் மாற்றி யமைத்தன. கருத்துக்களின் ஏற்பட்ட பிளவு இருவர் நட்பையும் பாதித்தன. முடிவில் அன்னி தனித்து செயல்படத் தொடங்கினார்.

பொது நலம் கருதி செயற்பட்ட அன்னிக்கு அறிஞர் பெர்னார்ட்ஷாவின் நட்பு கிட்டியது. தவிர பல அறிஞர் களும், கல்விமான்களும், சேவை மனம் கொண்டவர்களும் அறிமுகமானார்கள்.

ஏழைகளின் பால் அன்பு கொண்ட அன்னி ஏழைத் தொழிலாளர்களின்குடியிருப்புகளுக்குச் சென்றுஅவர்களின் நிலைமைகள் பற்றி நேரில் கண்டறிந்தார். நிலைமைகள் அவரின் மனதைப்பெரிதும் வருத்தியது.அவர்களின் வறுமை கண்டு துடித்தார். பாட்டாளிகளின் துயர் துடைக்க, சமத்துவம், சமவுடமை பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானார்.

நாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்களின் நலனுக்காக அன்னி மேடைகளில் முழங்க ஆரம்பித்தார். தொழிலாளர் சங்கங்களில் இணைந்து செயற்பட்டு

www.padippakam.com



நல்வாழ்வு திட்டங்களை அமுல்படுத்தினார். புதிய திட்டங்களை நீட்டி தொழிலாளர்க்காகப் போராடினார். தொழிலாளருக்கு குடும்ப நலம், பொருளுதவி ஆகியவற்றை சாதித்துத் தந்தார். பாட்டாளிகளின் கூட்டாளியாக ஒரு பெண் விளங்கியது அந்நாட்டு சரித்திரத்தில் முதல் தடவையாக நடந்தது.

பொதுத்தொண்டில் இரவு பகல் பாராது ஈடுபட்ட அன்னியின் பெரு முயற்சியில் பலருக்கு வீடு கிடைத்தன, வேலை கிடைத்தன; சலுகைகள் கிடைத்தன அன்னியின் தொண்டுள்ளமும், தியாக உணர்வும் தங்கள் குறிக்கோளை அடைய ஆரம்பித்தன.

ஆனாலும் அன்னிக்குள் ஏதோ ஒரு குறை நிலவ ஆரம்பித்தது. ஏதோ ஓர் ஒளி தனக்கு புலப்படாமல் இருப்பதாக அன்னி உணர ஆரம்பித்தார். அவரது மனம் வாழ்வின் உண்மையைத் தேட ஆரம்பித்தது.

கல்வி, எழுத்து. பேச்சு, சிந்தனை, ஆய்வு என்று அன்னி பெசன்ட்டின் நாட்கள் ஓடின. திருப்தியில்லாத மனத்துடன் வருந்திய அன்னிக்கு ஒருநாள் அசரீரியாக ஒரு குரல் கேட்டது. "அஞ்சாதே. துணிவோடு இரு. உண்மை ஒளி உன்னைத் தேடி வரும்" என்ற அந்தக் குரல் அன்னிக்குள் ஆனந்தத்தையும், பரவசத்தையும் ஏற்படுத்தியது.

வரப்போகும் உண்மை ஒளிக்காக அன்னி காந்திருந்தார். 1889 இல் ஒருநாள் ஸ்டெட் (Stead) என்கிற நண்பர் பிளாவாட்ஸ்கி (H. P. Blavatsky) எழுதிய ('The Secret Doctorine') 'இரகசியக் கோட்பாடுகள்' என்கிற நூலை அன்னியிடம் கொண்டு வந்து தந்து விமர்சனம் எழுதிக் கேட்டார்.

அந்த நூல் அன்னியின் பாதையில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. பிளாவாட்ஸ்கி அம்மையாரும் ஆல்பர்ட் என்பவரும் சேர்ந்து ஏற்படுத்திய பிரம்ம ஞான சபை பல

படிப்பகம்

www.padippakam.com



முறை அன்னி பெசன்ட்டின் கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. ஆனாலும் பிளாவாட்ஸ்கியின் நூல் அன்னி. தேடி வந்த ஒளியை அவருள் ஏற்படுத்துவதாக இருந்தது. அன்னியின் தேடலை நிறைவேற்றுவதாக அமைந்தது. அன்னி பிளாவாட்ஸ்கியை காண விரும்பினார். பிரம்ம ஞானசபை பற்றியும் உண்மையான தகவல்களை அறிந்து கொண்டார்.

ஒரு நாள் சந்தர்ப்பம் சரியாக அமைந்தது. அன்னியும் பிளாவாட்ஸ்கி அம்மையாரும் சந்தித்துக் கொண்டனர். பலமுறை இருவரும் தொடர்ந்து சந்திக்க இது வழி செய்தது. பரஸ்பர பேச்சுக்களும், ஆலேசனைகளும் முடிவில் அன்னியின் ஆர்வம் பிரம்ம ஞான சபை ஈடுபட காரணமாயிற்று. பிரம்ம ஞான சபையில் உறுப்பினராக விரும்பிய அன்னியை பிளாவாட்ஸ்கிஅம்மையார் தடுத்தார். தன்னைத் தாக்கி எழுதிய ஒரு நூலை அன்னியிடம் தந்து அதைப் படித்து முடித்து விட்டு முடிவெடுக்கும் படி கோரினார். அன்னி பெசன்ட் அந்நூலைப் படித்து முடித்த பின்னரும் தன் முடிவிலிருந்து மாறவில்லை. திடமான எண்ணமும் உறுதியான மனமும் கொண்ட அன்னியின் முடிவு கண்டு மலைத்த பிளாவாட்ஸ்கி அம்மையார் முடிவில் அன்னி பிரம்ம ஞான சபையில் சேர்வதை ஆதரித்தார்.

ஆனால் அன்னியின் இந்த முடிவு பலரது விரோதத்தையும், எதிர்ப்பையும் அன்னிக்குப் பெற்றுத் தந்தது.குறிப்பாக அன்னியின் பழைய நண்பர் பிராட்லா இதைக் கடுமையாக விமர்சித்தார். ஆனால் அன்னி பெசன்ட் எதையுமே பொருட்படுத்தாது பிரம்ம ஞான சபையில் உறுப்பினரானார்.

தொடர்ந்து அச்சபையில் தான் சேர்ந்ததன் காரணத்தை நூல் வடிவில் அவர் வெளியிட்டார். இது தொடர்பாக சொற்பொழிவொன்றையும் ஆற்றினார்

www.padippakam.com



அவர் அவரது சபை வேலைகளால் தொழிலாளர் நலத் தொடர்பான பணிகள் பாதிக்கப்படாதவாறும் பார்த்துக் கொண்டார். பணிகளின் பங்கு அதிகரிக்க அதிகரிக்க அன்னிக்கு நூல்களின் தொடர்பும் கூடிக் கொண்டே போனது. எப்போதும் எதையாவது படித்துக் கொண்டே ஏன்? பயணங்களை கூடப் பயனுள்ளவைகளாக ஆக்கிக் கொண்டார்.

இச்சமயத்தில் பிளாவாட்ஸ்கி அம்மையார் நன்கொடைகளை சேகரித்து பெண்களுக்கான விடுதி ஒன்றை அமைப்பதில் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். அந்த முயற்சி முடிந்து முழு உருவம் பெற்ற போது விடுதிக்கு தலைவியாகும் பொறுப்பு அன்னிக்கு வழங்கப்பட்டது.

அங்கிருந்த படியே தான் பிரம்ம ஞான சபையில் சேர்ந்ததற்கான மூன்று காரணங்களை உலக சகோதரத் துவம், ஐரோப்பிய கலை, கலாச்சார, இலக்கியங்களைப் பரப்புதல், மனிதனுக்குள் உறையும் இயற்கைச் சக்திகளை வெளிக் கொண்டு வருதல் என்று ஊரெல்லாம் முழங்கி வந்தார். உலகெல்லாம் பிரம்ம ஞான சபை பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

1891 ஆம் ஆண்டில் பிளாவாட்ஸ்கி அம்மையரின் மறைவைத் தொடர்ந்து. அன்னி பெசன்டின் கடமைகள் பெருகின. 1893 இல் சிகாகோவில் நடந்த உலக மாதர்கள் மாநாட்டுக்கு அன்னி பெசன்ட் சென்றார். அங்கு அவர் ஆற்றிய உரை பல்லாயிரக்கணக்கான மாதர்களின் மனத்தைக் கவர்வதாக அமைந்தது.

இந்தியாவைப் பற்றி இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொண்டிருந்த அன்னி பெசன்ட் இங்கு வருவதைப் பெரிதும் விரும்பினார். இங்குள்ள கலை, கலாச்சாரம், தத்துவம், பண்பாடு மற்றும் மனித நேயமுமே தம்மைக் கவர்ந்ததாக அன்னி பெசன்ட் குறிப்பிட்டுள்ளார். அவரது ஆவல் பூர்த்தியானது 1893 ஆம் ஆண்டு நவம்பர்

படிப்பகம்

www.padippakam.com



பத்தாம் தேதி அன்னி இந்திய மண்ணில் காலடி எடுத்து வைக்க வாய்ப்புக் கிடைத்தது.

தூத்துக்குடியில் வந்து இறங்கிய அன்னி பெசன்ட் "இந்தியாவின் கடந்த கால சிறப்புக்கள்தான் என்னை இந்திய மண்ணைப் பற்றி நினைவு கூறத் தூண்டுகின்றன" என்று கூறினார்.

பல ஊர்களுக்கும் சென்று உரையாற்றிய அன்னி பெசன்ட் உண்மையின் உயர்வை வலியுறுத்தி வந்தார். பெண்கள், சமுதாயம், கல்வி போன்ற துறைகளில் தேவைப்பட்ட மேம்பாடு பற்றியும் எடுத்துரைத்தார். இந்தியாவும் இந்தியரும் அன்னி பெசன்ட்டின் அன்புக்கு பாத்திரமாயினர். அந்நிய ஆதிக்கம் இந்தியரை அடிமைப் படுத்தியிருப்பதை எதிர்த்தவர் அவர். நாடு முழுவதும் அவரைப் பற்றி பரபரப்பாக பேசியது.

இறுதியில் அடையாறு பிரம்ம ஞான சபைக்கு வந்த அவர் பின்தங்கியோர் நலம் காக்க குழந்தைகள் பள்ளி யொன்றை நிறுவினார். ஆல்காட்டின் பெயரில் அப்பள்ளி நிறுவப்பட்டது.

1893 ஆம் ஆண்டு முதல் தீவிரமான உலக சுற்றுப் பயணத்தை இருபதாண்டு காலம் மேற்கொண்ட அன்னி ஆண்டுதோறும் இந்தியா திரும்பத் தவறுவதில்லை. 1898 இல் காசியில் ஒரு கல்லூரியை துவக்கிட அன்னி முடிவு செய்தார். நன்கொடைகளை வசூலித்து 1904 இல் மத்திய இந்துக் கல்லூரியை காசியில் அமைத்தார். பின்னர் அது பல்கலைக் கழகமாக உயர்த்தப்பட்டது. அங்கிருந்து ஒரு பத்திரிகையும் நடத்தப்பட்டது.

1907 ஆம் ஆண்டில் ஆல்காட்டின் மறைவு பிரம்ம ஞான சபையின் தலைமை பீடத்தை அன்னியிடம் சேர்ப் பித்தது.

படிப்பகம்

www.padippakam.com



1910 ஆம் ஆண்டில் பிராணி வதை தடுப்பு இயக்கத்தின் கூட்டத்தில் பேசிய அன்னி பெசன்ட்டின் பேச்சை அப்போதைய கவர்னர் பெரிதும் பாராட்டினார்.

1914 ஆம் ஆண்டில் தேசியக் கல்வி வளர்ச்சி இயக்கத்தை ஆதரிக்கும் தேசிய பல்கலைக் கழகத்தை அடையாறில் அமைத்தார்.

இந்திய மக்களுக்கு அன்னி பெசன்ட் ஆற்றியுள்ள அரும் பணிகளை எண்ணிவிட முடியாது. எடுத்துச்சொல்ல இயலாது. பெண் கல்வியை வலியுறுத்தி பெரும் பணி ஆற்றியுள்ளார் அவர். அவரது அருஞ்செயல்களை காரணம் காட்டி காசிப் பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. பால்ய விவாகம், விதவா விவாகங்களை தீவிரமாக எதிர்த்தார் அவர். பெண்களுக்கு சம உரிமைப் பெற்றுத் தருவதற்காக அவர் அமைத்த அமைப்பு 'இந்திய மகளிர் சங்கம்'. இதன் முதல் தலைவியான அன்னி பெசன்ட் நாடு முழுவதும் கிளைகளை ஏற்படுத்தினார்.

பத்திரிகைத் துறைக்காக அன்னி பெசன்ட் ஆற்றிய சேவையை நாம் மறக்கவே முடியாது. பத்திரிகையியல் பற்றிய பட்டப் படிப்பை முதன் முதலில் அறிமுகம் செய்த பெருமை அவருக்கே உரியது. மூன்றாண்டுகள் கால அளவில் இப்படிப்பு அடையாறு தேசிய பல்கலைக் கழகத்தில் இருபத்தைந்து மாணவர்களுக்கு அளிக்கப் பட்டது. பத்திரிகையியல் துறையில் பயிற்சிஅளிப்பதற்காக மாணவர்கள் 'நியூ இந்தியா' பத்திரிகையில் வேலை பார்க்கவும் அனுமதிக்கப் பட்டார்கள். இந்த வகையில் அன்னியின் பத்திரிகையியல் துறை ஆர்வம் பெரிதும் பாராட்டப் படுவதற்குரியது.

இந்தியர் ஆளப்பட வேண்டியவர் அல்லர் ஆள வேண்டியவர் என்று வீர முழக்கமிட்டார். சுயாட்சி கோரிக்கை நியாயமானதே என்றும் அவர் வாதிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



இதற்காகவே அவர் தொடங்கிய **Home Rule** இயக்கம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் இதயங் கவர்ந்த அமைப்பாகும். அன்னி பெசன்ட்டின் கவர்ச்சி மிக்க, தேசப்பற்றை தூண்டும் பேச்சுக்கள் அரசியலிலும் அவருக்கு அதிக வரவேற்பு அளித்தது.

நாடு முழுவதும் சுதந்திரத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. காந்திஜிக்கு இருந்த செல்வாக்கு அன்னி பெசன்ட்டுக்கும் மக்கள் மத்தியில் கிடைத்தது. காங்கிரஸ் அம்மையாரை பெரிதும் மதித்தது.

ஆனால் உலகப் போர் முரண்பாடுகளை தோற்று வித்தது. இந்தியாவை ஈடுபடுத்த ஆங்கில அரசு கொண்ட எண்ணம் தலைவர்களை ஏற்றுக் கொள்ள விடவில்லை. விடுதலை தருவதானால் போரில் ஈடுபடலாம் என்று தலைவர்கள் உறுதியாகக் கூறினார்கள். ஆனால் அம்மையாரின் எண்ணம் வேறு விதமாக இருந்தது, ஆங்கில அரசுக்கு உதவுவதில் தவறில்லை என்பது அவரது ஆணித் தரமான கருத்து.

இந்த கருத்து வேறுபாடு காங்கிரஸ்காரர்களின் வெறுப்பை சம்பாதித்ததுடன் நிற்கவில்லை. மக்களினிடையேயும் அம்மையரின் மதிப்பு குறைவதற்கு காரணமாக அமைந்தது. ஆனாலும் அன்னியுடன் பிறந்த பிடிவாதம் கொள்கையில் குறியாக இருக்கச் செய்தது. ஆனால் சுதந்திரம் பற்றிய அவரது தீவிரம் மாறவில்லை.

1917 ஆம் ஆண்டில் காங்கிரஸின் தலைமைப்பீடம் அவரை வரவேற்றது. அதே ஆண்டில் கைதாகி சிறை சென்றார். விடுதலையான பின் காந்தியின் சட்ட மறுப்புக் கொள்கையை பெரிதும் எதிர்த்தார் இதுவும் அவரது அரசியல் வீழ்ச்சிக்கு காரணமாகியது. தான் எதிர்ப்பதுடன் மட்டும் நிற்காது மக்களையும் இதற்கு எதிராகத் தூண்டித் தமது பத்திரிகைகளான **'New India', 'The Common wheel'** ஆகியவற்றில் கட்டுரைகள் எழுதினார்.

படிப்பகம்

www.padippakam.com



அரசியலில் செல்வாக்கு இழந்த போது ஆர்வமும் குறைந்தது. பிரம்ம ஞான சபையோடு தான் பணிகளை ஈடுபடுத்திக் கொண்டார். நாட்கள் ஓடின. வயோதிகம், நோய் இவை எவருக்குமே இயல்பன்றோ?

காலத்தைப் பொன்னாக கருதிய அன்னிபெசன்ட், சாதிமத பேதமின்றி, உலக மக்கள் நலனுக்காக வாழ்ந்து, புகழை விரும்பாமல், உதவி செய்யும் இளகிய மனம் கொண்ட அன்னி, பெசன்ட் அஞ்சாமை, ஞாபகசக்தி, உண்மை, அன்பு போன்ற அருங்குணங்களை கொண்ட அன்னி பெசன்ட், பிறர் வாழ தான் வாழ்ந்த அன்னி பெசன்ட் அடையாறு பிரம்ம ஞான சபையில் 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று மண்ணுலகை விட்டு மறைந்தார்.

அவர் நமக்காக விட்டுச் சென்றுள்ள இயக்கங்கள், கழகங்கள், கல்வி அமைப்புகள், சமுதாய சீர்திருத்தங்கள் இன்று மட்டுமல்ல, நாளை கூட அவர் நினைவை நம் நெஞ்சில் அழியாது எழுதி நிற்கும் என்பதில் சந்தேக மேயில்லை.

★

படிப்பகம்

www.padippakam.com

# 3. சுதந்திரத்திற்கு குரல் தந்த சரோஜினி நாயுடு

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகியும் இளமையும் வளமையும் குன்றாது, காலத்தின் கோலங்களையெல்லாம் மிஞ்சி நிற்பவள் பாரதமாதா. நமது அன்னை பூமி அன்னியர் ஆதிக்கத்தில் அடைந்த அல்லல்கள் சொல்லில் அடங்கா. பூமியை விடப் பொறுமையுடையவள் பாரத மாதா என்று பாரதி பாடியுள்ள இந்தப் புண்ணிய பூமிக்கு அன்னியர் பூட்டிய விலங்குகளை அறுத்தெறிய, அவர்கள் இழைத்த கொடுமைகளைத் தகர்த்தெறிய ஆயிரமாயிரம் பேர் அன்று புறப்பட்டனர்.

'அரையாடைப் பக்கிரி' என்று ஏளனம் செய்யப்பட்ட நம் தேசத் தந்தை காந்திஜி, பட்டாடைகளையும் பகட்டாக வாழ்ந்த மாளிகைகளையும் துறந்து தேசத் தொண்டாற்றிய நேருஜி, வீர உணர்வுடன் விடுதலை தேடிய பகத்சிங், பாட்டுத்திறத்தாலே அடிமைத்தனத்தை ஒழிக்கப் பாடுபட்ட பாரதி, மானம் காக்க மறைந்து போன நேதாஜி, இந்த மண்ணுக்காக கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை, அறிவின் சுரங்கமாய் நின்று சுதந்திரத்திற்காக போராடிய மூதறிஞர் ராஜாஜி இப்படிப் பல பெரியோர் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பாரதத் தாயின் கண்ணீரைத் துடைக்கக் கிளம்பியவர் களில் ஆண்கள் மட்டுமல்லர் பெண்களும் இருந்தனர். இயற்கை வளமும், மனித பலமும், கலை நலமும் மிகுந்து விளங்கும் இந்தப் பூமியில்தான் பண்பாட்டுப் பிணைப்பு களும் கட்டுபாடுகள் மிகுந்திருக்கும் விதிமுறைகளும்கூட மிகுதியாக உள்ளன. இவை பெண்களைக் கட்டிப்போட்டு அவர்களைச் சமுதாயக் கைதிகளாக வைத்திருந்த காலம்



படிப்பகம்

www.padippakam.com



அது. ஆனாலும் இவற்றையும் மீறித் தாய்நாட்டுத் துயர் தீர்க்கப் புறப்பட்ட பெண்களும் நம்மிடையே இருந்தனர்.

ஏட்டுப்படிப்பும் நாட்டுப் பற்றும் ஆண்களுக்கு மட்டுமே உரியதென்று கருதப்பட்ட அந்த காலத்தில், பாரத நாட்டில் சுதந்திரப் பேரிகை முழங்கிட வந்த மாதரசாக ஒருவர் பிறந்தார்.

அறிவின் ஊற்றாகவும், ஆற்றலின் இருப்பிடமாகவும் இருந்த அந்தப் பெண் இயற்கையைப் பாடும் கவித்துவ வல்லமையும் பெற்றிருந்தார். தன்னுடைய கவிதை பாடும் திறமையும், அதன் கடமையும் இயற்கையை போற்றுவதுடன் நின்று போகப் போவதில்லை என்பதை அவர் உணர்ந்தார். எழுச்சியைத் தூண்டி இந்த நாட்டின் அடிமை விலங்கினை உடைப்பதுவும் தன் கடமை, தன் கவிதைகளின் நோக்கம் என்பதை நன்குணர்ந்து செயல் பட்டவர் அவர்.

அவர்தான் கவிக்குயில் சரோஜினி தேவி. உலக மகாகவி தாகூர், சிறந்த நாவலாசிரியர் சரத்சந்திரர், ஆன்மிக ஒளி பரப்பிய விவேகானந்தர் போன்ற பலரைத் தோற்றுவித்த வங்காள மண்ணில் பிறந்தவர் அவர்.

குடும்பச் சூழ்நிலையோ சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு கட்டுப் பட்டது. மறை ஓதும் வேதியர் மரபில் வந்த அகோரநாத் சட்டோபாத்யாய இவளது தந்தை. அகோர நாத்தின் மூத்த புதல்வியாகப் பிறந்தவர் சரோஜினி. இந்த இளம் தென்றல் பிற்காலத்தில் ஆங்கிலேய அரசை அயர வைக்கும் புயலாகும் என்பதை அன்று யாருமே உணர்ந் திருக்கவில்லை. தந்தையின் அறிவுத் தாகமும், முற்போக் கான எண்ணங்களும் குலத்தொழிலை மட்டுமின்றி கல்வி கற்பதிலும், கற்பிப்பதிலும் பெரும் ஆர்வம் காட்டி ஈடுபடக் காரணமாயின.

படிப்பகம்

www.padippakam.com



ஆங்கிலம் கற்றதன் பயனும், அறிவு செறிந்த எண்ணங் களும் இவருக்கு உலகத்தை புரிந்து கொள்வதற்கு உதவி செய்தன. ஆங்கிலம் தவிர மருத்துவமும் இவள் அறிந்த கலைகளில் ஒன்றாகும். இந்த ஆர்வங்கள் எல்லாம் இவள் கடல் கடந்து சென்று மருத்துவக் கல்வி பெறும் வாய்ப்பை அளித்தன.

மருத்துவரான அகோரநாத் தான் பெற்ற கல்வியின் பயனை இந்நாட்டு மக்களும் பெற வேண்டும் என்று விரும்பினார். 'தொட்டனைத் தூறும் மணக்கேணி' போல அறிவை வளர்க்க, முதல் கட்டமாகப் புனிதமான ஆசிரியப் பணியை மேற்கொண்டார். தந்தையின் கல்வி ஆர்வமும் பயிற்சியும் தான் சரோஜினிக்குள் அறிவுத்தீயை மூட்டிய முதற் கனற்பொறி என்பதில் தவறில்லை.

ஏழு சகோதரர்களுக்கு மூத்தவராகப் பிறந்த சரோஜினி எல்லாவற்றிலும் குடும்பத்தில் முன்னோடியாகத் திகழ்ந் தாள். 1879 ஆண்டு பிப்ரவரி மாதம் பதின்மூன்றாம் தேதி பிறந்த சரோஜினியிடம் சிறுவயது முதலே அறிவும் திறமை யும் போட்டி போட்டுக் கொண்டு பளிச்சிட்டன. தந்தை ஊருக்கெல்லாம் அறிவூட்டுவதுடன் தன் மகளுக்கும் குரு வாகி அறிவு விதையைத் தூவினார். அதன் பலன், சரோஜினி கல்வி பெற்ற திசையெல்லாம் வெளிப்பட ஆரம்பித்தது. தந்தையின் கல்வியார்வம் மகளிடமும் காணப்பட்டது. சென்றவிடமெல்லாம் தந்தையின் பெயரை நிலைநாட்ட ஆரம்பித்தாள் சரோஜினி. சரோஜினி யின் வளர்ச்சி கண்டு தந்தை பூரிப்படைந்தார். தன் மகளை எந்த வகையில் எல்லாம் திறம்பட பயிற்றுவிக்கலாம் என்று சிந்திக்கலானார் தந்தை.

ஏட்டையும் பெண்கள் தொடுவது பாவமென்று எண்ணியிருந்த அந்த காலத்தில் 'எட்டுமறிவினில் ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காண்' என்ற கருத்தை ஆதரித்தவர் அகோரநாத். பெண் கல்வியில்

படிப்பகம்

www.padippakam.com



பெரும் ஆர்வம் காட்டிய அவர், தன் ஆர்வத்தின் முதல் படியாகத் தன் மகளை உயர் கல்வி கற்பிக்க எண்ணினார். வைதீகக் குடும்பத்தைச் சார்ந்திருந்த காரணத்தால் முதலில் இந்த எண்ணத்தைப் பலர் எதிர்த்தனர். ஆனால் அவர்களையும் மீறித் தந்தை மகளை உயர் கல்விக்கு ஊக்குவித்தார்.

உள்ளூரில் படித்து வந்த சரோஜினி, உயர் கல்வி கற்பதற்காகத் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டாள். சென்னைக்கு வந்த சரோஜினியும் தந்தையின் எண்ணத்தின் உறுதியும், செயலின் வேகமும் நிலை தாளாமல் பார்த்துக் கொண்டாள். மிக்க ஆர்வத்துடன், வெளி நாட்டங்களைத் தவிர்த்து கல்வியில் கண்ணுங் கருத்துமாக ஒன்றினாள். எண்ணம் அழகானால் எல்லாமே அழகாகுமே. சரோஜினியின் வாழ்க்கையிலும் இது நிரூபிக்கப்பட்டது. தன் பன்னிரண்டாவது வயதில் மெட்ரிக்குலேஷன் பரீட்சை எழுதினாள் சரோஜினி. அதில் தேறிய அனைத்து மாணவர்களிலும் முதன்மை மாணவியாக மாகாணத்திலேயே முதல் மாணவி என்ற பெருமையை பெற்றாள்.

முதல் முயற்சியே வெற்றித்திருமகளுக்கு வாழ்த்தொலி தூவியது. இந்த ஆரம்பம் பல நன்மைகளுக்கு அடிப்படையாக அமைந்து விட்டது. சரோஜினியின் இந்த வெற்றியைக் கண்ட தந்தை மகளை மேலும் படிக்க வைக்க எண்ணினார். தான் பெற்ற மருத்துவ அறிவைப் போல மகளும் அறிவியல் அறிவினைப் பெற வேண்டும் என்று விரும்பினார். இதற்காக சரோஜினியை இங்கிலாந்துக்கு அனுப்புவதன் அவசியத்தை எண்ணத் தொடங்கினார். இந்தப் பயணத்தில் சரோஜினியும் பெரிதும் ஆர்வம் காட்டியது அவரது முயற்சிக்கு மேலும் ஊக்கம் அளித்தது. முயற்சி முடிவு செய்யப்பட்டுச் செயலானது.

www.padippakam.com



இலண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் அறிவியல் கற்பதற்காக சரோஜினி புறப்பட்டாள். ஆனால் சரோஜினியின் உள்ளத்தில் ஏற்பட்ட பெரும் மாற்றம் அங்கு தான் நடந்தது. திட்டவட்டமான கணிதமும் தீர்மானமாகச் சொன்ன அறிவியல் பாடங்களும் தன்னை ஒரு வட்டத்துக்குள் வைத்து வதைப்பது போல உணரத் தொடங்கினாள் சரோஜினி. சுதந்திர உணர்வு தலைதூக்க ஆரம்பித்தது. அதன் காரணமாக மனம் கவிதையில் ஈடுபட ஆரம்பித்தது. அதற்குச் சாதகமாக இலண்டன் மாநகர் சூழ்நிலைகளும் அமைந்திருந்தன.

இயல்பாகவே அழகுணர்ச்சியும் இயற்கை நாட்டமும் கொண்டிருந்த சரோஜினி இளம் பிராயத்திலேயே சிறு சிறு கவிதைகளை வடித்துக் கொண்டிருக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தவள். இந்த ஆற்றல் இங்கிலாந்தின் வனப்பு மிக்க சூழ்நிலைகளால் வளம் பெற்றது. ஆங்கில மொழி அன்னிய மொழியாக இருந்தாலும்கூட அது சரோஜினியின் பேனா முனையில் சர்வ சாதாரணமாக வெளிப்பட்டது. அவரது மன எண்ணத்தில், கலை வண்ணத்தோடு கலந்து கவிதை நயமாகப் பிரகாசித்தது. வெறும் சொல் அலங்காரங்களுடன் நின்று விடவில்லை சரோஜினியின் கவிதைகள். அந்த வயதில் அவள் படைத்த கவிதைகளில் கூட சொற் செறிவோடு பொருட் பயனும் பூத்திருந்தது.

நண்பர்களின் ஊக்கம், ஆங்கில அறிஞர் பலரது உறவு தந்த உணர்ச்சி—இவை அவளது கவிதையாற்றலையும் ஆர்வத்தையும் மேலும் தூண்டி விட்டன. ஆயிரக் கணக்கான கவிதைகள் ஊற்றெடுத்துக் கரை புரண்டோடி களிப்பில் ஆழ்த்தின. கவிதை ஆற்றல் காரணமாக உணர்ச்சி மிக்க உரைகளை ஆற்றும் வல்லமையும் வரப்பிரசாதமாகியது. வார்த்தைகளில் சரோஜினி தோய்த்தளித்த இனிமையும் கம்பீரமும் ஒருங்கிணைந்து ஒலித்த அவளது சொல்லாற்றல் முன் ஆங்கிலேய அறிஞர்கள் கட்டுண்டுக் கிடந்திருக்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



மனம் கவிதையில் நனைந்ததால் கல்வியில் கவனம் சிதறியது. நாட்டம் குறைந்தது. இந்த நிலையில் எதிர் பாராமல் சரோஜினியின் உடல் நோய்வாய்ப்பட்டது. இந்தச் சூழ்நிலைகள் சரோஜினியின் கல்விக்குத் தடையாக அமைந்தன. இவை காரணமாக சரோஜினி தாய் நாட்டுக்குத் திரும்புவதென முடிவு செய்யப்பட்டது. 1898 ஆம் ஆண்டு தடைப்பட்ட கல்வியுடனும் நோயுற்ற உடம்புடனும் இந்தியா திரும்பினாள்.

மகளின் உடல் நிலை ஒரு புறம் கவலையையும், அறிவியலில் அவளின் நாட்டமின்மை ஒரு புறம் வருத்தத் தையும் அளித்தாலும்கூட தந்தை தம் புதல்வியின் புதிய திறமையில் திருப்தி அடைந்தார். சரோஜினியின் புலமை யையும் புகழையும் கண்டு பூரித்தார் தந்தை.

நோயுற்ற உடலுடனும் கவிதை நயம் மிக்க உள்ளத் துடனும் தாயகம் திரும்பிய சரோஜினியின் உடல் நிலை சிறிது சிறிதாகத் தேறலாயிற்று. உடல்நிலை காரணமாக கிடைத்த ஓய்வில் கற்பனை சிறகடித்துப் பறந்தது. கவிதைகள் பூத்துச் சிதறின. படைப்பாற்றல் விரிந்து பரந்தது. தனிமையும் காலமும் சரோஜினியின் எண் ணத்தை மட்டுமின்றி திறமைகளையும் மிகச் சிறந்த முறையில் வளர்த்துக் கொண்டிருந்தன.

இந்தக் கால கட்டத்தில்தான், சரோஜினியின் வாழ்க்கையின் மிக முக்கியத் திருப்பு முனைக்கு வாய்ப்பு அமைந்தது. டாக்டர் கோவிந்த ராஜிலு நாயுடுவின் நட்பும் அன்பும் சரோஜினிக்கு கிடைத்தன. முதலில் நல்ல நண்பர்களாகப் பழகி வந்த இருவரும் அன்பின் இறுக்கத் தால் நாளடைவில் காதல் மலர்களைப் பரிமாறிக் கொண் டார்கள்.

சரோஜினியின் கவிதையாற்றல், சொல்லாற்றல், சுறுசுறுப்பு, இனிமையான குணம் இவை யாவுமே

www.padippakam.com



கோவிந்தராஜுலுவைக் காந்தமாகக் கவர்ந்திழுத்தன. இளம் வயதிலேயே திறமையும், நேரிய குணங்களும் நிரம்பிய கோவிந்தராஜுலுவை மணப்பது மகா பாக்கிய மெனச் சரோஜினி கருதினார்.

கருத்தால் ஒன்றுபட்ட இதயங்கள் இணைய விரும்பிய போது எதிர்ப்புகளும் சோதனைகளும் சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், சாதி—மதம் என்ற பெயர்களில் தோன்றின. அக்கால வழக்கங்களுக்கு மாறான செயல் இது என்று விமர்சிக்கப்பட்டது. ஆனாலும் சரோஜினி உறுதி சிறிதும் தளராமல், தன் முடிவில் மாறாமல் இருந்தார்.

தந்தையார் அகோரநாத் கல்வியறிவும் உலக அநுப வங்களும் கொண்டிருந்த காரணத்தால் மகளின் கருத் துடன் ஒத்த கருத்தையேக் கொண்டிருந்தார். விருப்பமில் லாமல் தன் மகளை வேறொருவருக்கு மணம் செய்வதை அவர் வெறுத்தார். முடிவில் சரோஜினியின் விருப்பப் படியே சீர்திருத்தத் திருமணமாக அவர்கள் மணம் புரிந்து கொள்ள முடிந்தது. சரோஜினி நாயுடு விரும்பிய கண வரைப் பெற்று பெயரிலும் இணைத்துக் கொண்டார். தந்தையின் ஆதரவுடன் இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தார் சரோஜினி நாயுடு.

இல்லற வாழ்க்கையில் கணவனின் அளவு கடந்த அன்பு, நிறைந்த செல்வம், பயன்தரும் கல்வி, அனைத்துமே அமைந்திருந்தன. வாழ்க்கையில் வசந்தமே வீசியது. இன்பமான அந்த நாட்களில்கூட சரோஜினியின் மன ஆழத்துக்குள் ஏதோ ஒரு சொல்லவொண்ணாத ஏக்கம் நெருடியது. காலம் யாருக்காகவும் காத்திருக்காமல் பிறந்தது. நான்கு குழந்தைகளுக்குத் தாயானார் சரோஜினி. அவருள் இருந்த ஏக்கம் மட்டும் குறையவில்லை.

தான் இந்த சமுதாயத்திற்காக செய்ய வேண்டிய பங்கை சரிவரச் செய்யவில்லை என்று எண்ணினார்.

படிப்பகம்

www.padippakam.com



அதற்காக ஏங்கவும் தொடங்கினார். நாட்டுக்காகவும், பெண்கள் மேம்பாட்டுக்காகவும் பாடுபடுவது தன் பணிகளில் ஒன்று என்று எண்ணத் தொடங்கினார்.

அந்த எண்ணத்தின் தொடக்கமாகப் பொதுத் தொண்டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங்கினார். அதே சமயத்தில் பொதுச் சேவைகள் தன் குடும்பப் பொறுப்புகளையும் கவியுணர்வையும் குலைத்து விடாமல் பார்த்துக் கொண்டார்.

கவியுள்ளம் கவிதைகளை வாரிச் சொரிந்தது. உலக அறிஞர் பலரும் அவர் கவிதைகளின் வனப்பில் கட்டுண்டு கிடந்தனர். உலகமே வியந்த அவரது கவிதைகள் 'கவியரசி' என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்தன. 'கவிக்குயில் சரோஜினி நாயுடு' என்று நாடே போற்றுமளவுக்குப் பெருமை பெற்றார்.

இத்தனைக்கும் இடையில் நாட்டுப் பணியில் தன் சிந்தனையை ஈடுபடுத்திய சரோஜினி நாட்டு நலம் கருதிச் செயல்புரிய எண்ணினார். இதன் காரணமாக அவர் பம்பாய் வந்து சேர்ந்தார். தேசம் அடிமைப்பட்டுக் கிடப்பதையும், தேசத் தலைவர்கள் சிறையில் வாடுவதையும் கண்ணுற்றார். இப்போதுதான் சரோஜினி திலகர் பெருமானை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரைத் தொடர்ந்து பல தேசநலம் கருதிய தலைவர்களின் தொடர்பும் கிட்டின. கோகலே, ஜின்னா, அன்னி பெசன்ட் போன்ற பலர் சரோஜினியிடம் நட்பு பூண்டதுடன் அவரது எண்ணத்திற்கு ஊக்கமும் அளித்தனர்.

தன் அறிவும், கல்வியும், கவிதையும், இயற்கையைப் போற்றி நின்றால் மட்டும் போதாது என்று உணர்ந்தார். அவற்றை இந்த நாட்டின் அடிமை விலங்கை அறுத்து எறியவும் பயன்படுத்த வேண்டும் என்று உறுதி கொண்டார். தேசத்தின் அன்றைய தேவை கல்வியறிவுள்ள

www.padippakam.com



தேச உணர்வுள்ள மக்கள் என்பதைப் புரிந்து கொண்டார். நாட்டின் நலம் கருதித் தன் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் அளித்திடக் கருதினார்.

நாட்டில் சுதந்திரக் கனல் மூட்டக் கிளம்பினார் சரோஜினி. ஓய்வு ஒழிவின்றி நாடு முழுவதும் பயணம் செய்து நாட்டு விடுதலைக்கு ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி விளக்கமாக கூறி வந்தார். சரோஜினியின் நடவடிக்கைகள் ஆங்கில ஆதிக்கத்தை அச்சுறுத்தின. அதன் அடிவருடிகளை சரோஜினியின் பேச்சு அலற வைத்தது.

பெண்தானே என்று இழிவாக எண்ணியவர்கள் தலைகுனிந்தார்கள். விளைவு சரோஜினியின் பெருமையைச் சிறுமைப்படுத்த எண்ணினார்கள். அவரது செயல்களைத் தூற்றத் தொடங்கினார்கள். ஆனால் சரோஜினி இவற்றை சிறிதும் பொருட்படுத்தவில்லை. இந்தப் பாதிப்புகளைத் துச்சமென மதித்துத் தன் உறுதியில் நிலை குலையாமல் கடமையைச் செய்து வந்தார்.

1918 ஆம் ஆண்டு தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழ் மாகாண அரசியல் மாநாட்டில் தலைமையேற்றுக் கலந்து கொண்டு வீர முழக்கமிட்டார். நாட்டு விடுதலைக்குப் பெண்களின் பங்கு இன்றியமையாதது என்றும் அவர்கள் தங்கள் கடமையை இந்நாட்டுக்காக ஆற்றுவது அவசியம் என்றும் உறுதியாகக் கூறினார். தமிழகத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் பிற பகுதிகளுக்கும் தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

1920 ஆம் ஆண்டு தேசப் பிதா மகாத்மா காந்தியின் அறிமுகத்தை சரோஜினி பெற்றார். ஒத்த கருத்துகளை உடைய காந்தியின் சிந்தனைகளால் கவரப்பட்ட சரோஜினி தன் பணிகளைக் காந்திஜி தந்த ஊக்கத்தினால் தீவிரப்படுத்திக் கொண்டார். தன் சக்திக்கும் மீறி

படிப்பகம்

www.padippakam.com



உழைத்த சரோஜினியின் உடல் நிலை சிரமங்களை தாங்கும் நிலையில் இருக்கவில்லை. நோய் மீண்டும் அவரை ஆட்கொண்டது. நோயுற்ற சரோஜினியின் பணிகள் தடைப்பட்டன. நோயின் தீவிரத்தால் தம் பணிகளை நீடிக்க]முடியாது என்பதை உணர்ந்த சரோஜினி ஓய்வெடுத்துக் கொள்ள எண்ணினார். அந்த அவசியம் காரணமாக இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்.

அந்த நேரம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த நேரம். ஓய்வு பெறச் சென்ற சரோஜினிக்கு அங்கும் அன்புத் தொல்லைகள் காத்திருந்தன. இலண்டனில் நடந்த கூட்டமொன்றில் பேச அழைக்கப்பட்டார் சரோஜினி. அப்போது பஞ்சாப் மாநிலத்தில் ஆங்கில அதிகாரிகள் முறைகேடாக நடந்து சுடுகாடாக மாற்றியிருந்த செயல் சரோஜினியின் காதுகளுக்கு எட்டியது. இலண்டன் கூட்டத்தில் பேசும் போது இங்கு நடந்திருந்த பஞ்சாப் படுகொலைகளைப் பற்றி விளக்கமாகப் பேசினார். இவ்விளக்கத்தைக் கடுமையாக விமர்சித்த ஆங்கிலேய அரசு சரோஜினி பொய்ப்பிரசாரம் என்ற குற்றத்தைச் சுமத்தியது.

ஆனால் சரோஜினியோ சிறிதும் கலங்காது தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்துக்கு ஆதாரம் கோரினார். அதைத் தகுந்த முறையில் நிரூபிக்க முடியாத ஆங்கில ஆதிக்கம் மௌனம் சாதித்துத் தலைகுனிந்தது.

இந்திய மக்களின் நிலையை இங்கிலாந்திற்கு உணர்த்திய பிறகு தாயகம் திரும்பிய கவிக்குயில் ‘கெய்சரி ஹிந்த்’ என்ற சிறப்பு விருதை, தாயகத்தின்மீது தாம் கொண்டிருந்த பற்று காரணமாக வாங்க மறுத்து விட்டார். இச் சாதனையை இந்திய மக்கள் அனைவரும் பாராட்டினார்கள். நமது தலைவர்கள் கவியரசியைப் போற்றினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய நாட்டிற்குத் திரும்பிய கவிக்குயிலின் பாடல்களில் இயற்கைமீது கொண்டிருந்த நாட்டம் குறைந்து, எழுச்சி மிக்க தேசியப்பற்று மிளிர்ந்தது. மகாத்மாவின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வது, காங்கிரஸ் போராட்டங்களைப் பற்றி எடுத்தியம்புவது, சுதந்திரத்தின் தேவையைப் பொதுமக்களுக்கு உணர்த்துவது- இவையே சரோஜினியின் நோக்கமாயிற்று. அந்த நோக்கமே முழு நேரப் பணியாகவும் அமைந்தது.

இந்தியர்களின் நிலைமையைப் பற்றி அமெரிக்காவில் நடந்த மாநாடொன்றில் பேசுவதற்காக மகாத்மா காந்தி அழைக்கப்பட்டார். 1928 இல் நடந்த இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இங்கிருந்த சூழ்நிலைகள் இடம் தர வில்லை. அதனால் அவர் தமது பிரதிநிதியாகத் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான சரோஜினியையே அனுப்புவதென்று முடிவு செய்தார். சரோஜினியும் மகாத்மாவின் பேச்சைத் தட்டாமல் புறப்பட்டார். அங்கு அவர் ஆற்றிய புயல் வேகப் பேச்சிலும், கருத்து வீச்சிலும் பிரிட்டிஷாரின் பொய்ப் பிரச்சாரம் பொடிப் பொடியாகியது.

1924 ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்க நாட்டில் அல்லலுற்ற இந்தியர்களுக்கு ஆதரவாகப் பேச சரோஜினி தேவி அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சென்று உரையாற்றிய அவரது உரைகளில் மிகுந்திருந்த வீர உணர்ச்சியும் உண்மைக் கருத்துகளும் அங்கு வாழ்ந்த இந்தியர்களைக் கவர்ந்தது மட்டுமல்லாது, ஐரோப்பிய அதிகாரிகளைத் தலை குனியவும் வைத்தது.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இவரது பாதங்கள் படாத நாடுகளே இல்லை; பேச்சுகள் ஒலிக்காத காதுகளே இல்லை என்று சொல்லும் அளவுக்கு சரோஜினியின் புகழ உலகம் முழுவதும் பரவியிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இவரது திறமையும் தணியாத தேசப் பற்றும் 1925 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் பொறுப்பைத் தேடித் தந்தது. தேசத்தின் தேவையையும் நிலைமையையும் உணர்ந்து அந்தப் பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். தன் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து சிறப்புடன் பணியாற்றினார் சரோஜினி தேவி.

சொல்லாற்றல் மிக்க கவிதைகளால் சுதந்திர முழக்கம் இட்டு வந்த கவிக்குயில் மகாத்மாவின் தேசப்பற்று மிக்க செயல்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்கினார்.

மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட போது சரோஜினியும் தன் தொண்டர் புடை சூழச் சென்று உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சி ஆங்கில அரசின் ஆத்திரத்தையும் நடவடிக்கை களையும் முடுக்கி விட்டன. பலர் கைது செய்யப்பட்டனர் சரோஜினி நாயுடுவும் கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவராவார். சுதந்திர தாகம் காரணமாக சிறைவாசமும் சுகவாசமாகவே கரைந்தது. சிறையில் தனிமையும், மனதில் வாழ்ந்த இயற்கையும் கவிபாடத் துணையாகின. மேலும் புதிதாக நிறையக் கவிதைகளைப் பாடி மகிழ்ந்தார்.

விடுதலையடைந்து வந்தபின் 1930 ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகக் கடுமையாகப் பணி யாற்றத் தொடங்கினார். அந்தக் கால கட்டத்தில், தொடர்ந்து வந்த இரண்டாவது உலகப்போரில் இந்தியா ஈடுபட்டதைக் காங்கிரஸ் எதிர்த்தது. இதை எதிர்த்துத் தலைவர்கள் பலர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர். மகாத்மா, நேரு, பட்டேல் போன்ற பலருடன் இணைந்து சரோஜினியும் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



கடுமையான உழைப்பு, இடைவிடாத தேசிய சிந்தனை பெண்மையின் மென்மைக்குப் புறம்பான கடுமையான சத்தியாகிரகம், சிறைவாசம் போன்றவைகள் அனைத்துமே சரோஜினியின் உடல் நிலையைப் பெரிதும் பாதித்தன. ஓய்வின் தேவையை உணர்ந்தாலும்கூட நாட்டின் நிலைமையை நினைத்துப் பணியாற்றினார். இந்நிலையில் சரோஜினியின் நிலைமையையும், சிரமங்களையும் அனுசரித்துக் காங்கிரசின் தலைமைப் பொறுப்பை மட்டும் ஏற்றுப் பணியாற்றுமாறு மகாத்மா காந்தி பணித்தார். அன்று முதல் சுமைகளைக் குறைத்துக்கொண்டு பணி யாற்றத் தொடங்கினார் சரோஜினி.

1942 இல் பம்பாயில் கூடிய காங்கிரஸ் கமிட்டி 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தைச் செயல்படுத்தியது. நாட்டிலிருந்த பல சுதந்திர வேட்கை கொண்ட தலைவர்களும் தொண்டர்களும் இதில் ஈடு பட்டனர். இதன் விளைவாகப் பலர் கைது செய்யப் பட்டனர். அவர்களுள் சரோஜினியும் ஒருவரானார்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து வந்த பல கடுமையான போராட்டங்களின் முடிவில் இந்திய மண் சுதந்திர பூமியானது. நமது தலைவர்கள் கண்ட நெடுநாள் கனவு நனவானது. சரோஜினியும் இந்த சந்தோஷத்தில் பங்கு கொண்டார். ஆனால் இதைக் குலைக்கும் வகையில் அமைந்த அந்த நிகழ்ச்சி சரோஜினிக்குப் பேரிடியாக வந்தது. ஆம் மகாத்மாவின் மறைவுதான் அது. எந்தப் பெரும் சக்தி இந்தியத் தேச விடுதலைக்குக் காரணமாக இருந்ததோ, எந்த ஆத்மா சரோஜினியின் விடுதலை வேட்கைக்கு ஆதாரமாக இருந்ததோ அது மறைந்ததெனக் கேட்ட சரோஜினி நிலை குலைந்து போனார்.

1949 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் தேதி தன் பொன்னுடலை இந்த நாட்டின் நலத்துக்காகத்

www.padippakam.com



தேய்த்து மணம் வீசிய அந்தச் சந்தனச்சரித்திரம் மறைந்தது. இந்த மக்களுக்காகப் பாடுபட்ட அந்த இனிய குயிலின் இன்னுயிர் பிரிந்த போது சரோஜினிக்கு வயது எழுபது, தன் அறிவையும் ஆற்றலையும் எந்த மண்ணுக்காக ஈடு படுத்தி இனிமை கண்டாரோ அந்த மண்ணுடன் இரண்டறக் கலந்து விட்டார் சரோஜினி.

இந்த நாட்டின் சுதந்திரச் சரித்திரத்தில் மட்டுமின்றி இந்நாட்டு மக்களின் இதயங்களிலும் இடம்பிடித்துவிட்ட அந்த கவிக்குயிலின் சாதனையும், அவர் நமக்காகச் செய்த தியாகமும் நம் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருப்பது உறுதி.

★

படிப்பகம்

www.padippakam.com

# 4. புரட்சியைப் புகுத்திய முத்துலெட்சுமி ரெட்டி

உலகிலுள்ள உயிர்கள் எல்லாமே படைப்பில் ஒன்றாகவே இருக்கின்றன. ஆனாலும் மீண்டும் ஒருயிரை பெற்றுத் தரும் பொறுப்பு பெண்களிடமே விடப் பட்டுள்ளது. ஏனென்றால் தாய்மை பெண்களுக்கே உரிய தனிச் சொத்தன்றோ!

அந்தத் தாய்மையின் காரணமாகத்தான் பெண் களிடம் இயல்பாகவே மென்மை, கனிவு, கருணை, இரக்கம் ஆகிய அருங்குணங்களும் ஒட்டிப் பிறக்கின்றன. இவற்றைத் தவிர மனித நேயத்தைக் கட்டிக் காக்கக் கூடிய அரிய சக்தியும் பெண்ணிடம் தான் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. பெண் என்றாலே சக்தி தான். எதையும் இயக்குபவளும் அவள் தான்.

அந்த சக்தி ஆக்கச் சக்தியாகி பல சீரிய பணிகளை நம் கண் முன்னே நடத்திக் காட்டியதற்கு சான்றுகள் பல உள்ளன அப்படி நடத்திக்காட்டியவர்கள் நமது நாட்டிலே பிறந்தவர்கள் என்ற பட்சத்தில் நாம் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

அந்த வகையில் அடங்கும் பெண்கள் இந்த பாரத பூமியில் பலர் உள்ளனர். அவற்றில் ஒரு சிலர் பெண் இனத்திற்கே பெரும் திருப்புமுனைகளை அறிமுகப்

படிப்பகம்

www.padippakam.com



படுத்தியவர்கள். அவர்களில் ஒருவர் தான் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி.

இன்றிருக்கும் நிலையில் பெண்கள் முன்னணியில் இருப்பதொன்றும் அதிசயமானதில்லை. ஆனால் முத்து லெட்சுமி பிறந்த காலத்தில், பெண்களின் நிலைமை மிகவும் பின்தங்கியிருந்தது.

புதுக்கோட்டையில் அரசராக இருந்த தொண்டை மானின் ஆலோசகர் நாராயணசாமி என்பவர். அவருடைய மனைவி சந்திரம்மாள். இவர்களுடைய அருமைப் புதல்வி யாக முத்துலெட்சுமி 1886 ஆம் பிறந்தாள்.

நாராயணசாமி புதுக்கோட்டை அரசினர் கல்லூரியில் முதல்வராகப் பணிபுரிந்தார். அக்காலத்திலேயே அவர் கல்வித் துறை இயக்குனராகவும் பதவி வகித்தவர். இதற் கெல்லாம் காரணம் நாராயணசாமி கல்வி மீது கொண் டிருந்த பற்றுதான். பட்டப்படிப்புடன் தன் அறிவு தாகம் தீர்ந்துவிடாது என்றுணர்ந்த அவர் மேலும் மேலும் பல நூல்களைத் தேடிக் கற்றார்.

கல்வியில் மட்டும் அவர் சிறந்து விளங்கவில்லை. தன்னுடைய கடமையிலும் மிகவும் சிறப்பாக செய லாற்றினார், கல்வித்துறைக்காக சிறந்த பல பணிகளை ஆற்றிய நாராயணசாமி தன்னுடைய கைதேர்ந்த நிர்வாகத்தில் கல்வித்துறையின் செயல்பாடுகளை திறம்பட நடத்தி வந்தார். இவருடைய திறமையும், அறிவும், கடமை யுணர்வும், ஆர்வமும் தான் இவரை மன்னர் தொண்டை மானின் அன்புக்கு பாத்திரமாக்கின.

கலைகளையும் நாராயணசாமி விட்டு வைக்கவில்லை. இசையில் பெரும் ஈடுபாடு காட்டினார். மன்னரவையில் பாட விரும்பும் எவருமே நாராயணசாமியின் சிபாரிசின் பேரிலேயே அனுமதிக்கப்பட்டனர். அந்த அளவுக்கு இசையில் ஈடுபாடும் ஆழ்ந்த புலமையும் பெற்றிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



இவருடைய கல்வி ஆர்வமும் கலை ஆர்வமும் பாதிக்காத வண்ணம் மனைவி சந்திராம்மாளும் ஒத்துழைத்தார். கணவன் மனங்கோணா வண்ணம் மனைவியும், மனைவியின் நலம் நாடும் கணவனுமாய் அவர்கள் இல்லறம் இனிதே நடந்து வந்தது.

திருமணமாகி ஓராண்டில் பிறந்த பெண் குழந்தை தான் முத்துலெட்சுமி. இவருக்கு அடுத்து ஒரு ஆண் குழந்தையும் இரண்டு பெண்களும் பிறந்தனர். இடையில் பிறந்த சில குழந்தைகள் மறைந்தன.

நாராயணசாமியின் கல்வி, கலை ஆர்வங்கள் குழந்தைகளையும் பெரிதும் ஊடுருவி இருந்தன. சகோதரன் இராமையா விளையாட்டு, சமூகசேவை ஆகியவற்றில் சிறந்தவராகவும், பின்னாளில் பெயர் பெற்ற வழக்கறிஞராகவும் விளங்கினார். சகோதரிகள் சுந்தராம்பாள், நல்லமுத்து ஆகியோர் கல்வியில் சிறந்தும், மொழியில் தேர்ந்தும் இசையில் ஈடுபாடும் கொண்டிருந்தனர்.

முத்துலெட்சுமி மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா?

அந்த நாளில் பெண்கல்வி பெரும் பாவமாக கருதப்பட்டு வந்தது. மொழியறிவே வழங்கப்படாத அந்நிலையில் ஆங்கிலக் கல்வி என்பது பெண்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்து வந்தது.

ஆனாலும் இந்த முறையை அடியோடு ஒழிக்க அரும்பாடு பட்டவர்கள் பலர். அவர்களில் ஒருவர் சேஷய்ய சாஸ்திரிகள் என்பவர். அவர் புதுக்கோட்டையில் திவானாக இருந்தார். பெண் கல்வியின் தேவையை உணர்ந்த அவர் பெண்களுக்கு என்று ஒரு கல்வி நிலையத்தை அமைக்க முடிவு செய்தார். அதன்படி ஒரு தொடக்க பள்ளியையும் பெண்களுக்காக தொடங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com



இப் பள்ளியின் ஆரம்பம் அத்தனை வரவேற்புக் குரியதாக இருக்கவில்லை. பள்ளி ஆரம்பிக்கப்பட்டதே யன்றிப் புதுக்கோட்டை பொதுமக்கள் தங்கள் பெண்களை பள்ளிக்கு அனுப்ப முன்வரவில்லை. சேஷய்யன் தன் முயற்சி தோல்வி அடைந்து விடுமோ என்று பயந்தார். இதற்கு என்ன செய்வதென்று சிந்தித்தார். முடிவில் ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

பெற்றோர்களை ஈர்க்கும் பெருந்திட்டம் ஒன்றைத் தீட்டினார். தன் பள்ளியில் சேரும் பெண் பிள்ளைகளுக்கு ஊதியத்தொகை அளிக்க முன் வந்தார். இது பெண் கல்வியை ஓரளவு ஊக்குவித்தது.

இந்த ஊக்கம் முத்துலெட்சுமியை பள்ளியில் சேர்க்கும் எண்ணத்தை தந்தை நாராயணசாமியின் நெஞ்சத்தில் தோற்றுவித்தது. முத்துலெட்சுமிக்கு அப்போது வயது நான்கு.

முத்துலெட்சுமி பள்ளியில் சேர்க்கப்பட்டாள். அவள் சேர்க்கப்பட்ட பள்ளி வெறுந் திண்ணைப் பள்ளிதான். எழுத்தாணியும், பனையோலையுமே அங்கு கல்விக் கருவிகளாக இருந்தன. அங்கு ஆண் பிள்ளைகளும் படிப்பதற்காக வந்தனர்.

முத்துலெட்சுமிக்கு இளமையிலேயே கல்விமேல் அதிக ஆர்வம் இருந்தது. நல்ல நினைவாற்றலும், விவேகமும் நிரம்பியிருந்த சிறுமிக்கு படிப்பு சிரமமாகவே இருக்க வில்லை.

ஆண்டுகள் உருண்டோடின. கல்விமேல் இருந்த நாட்டம் சிறுமியை ஆங்கிலத்தையும் கற்கத் தூண்டியது. தந்தைக்கு மகள் ஆங்கிலம் கற்கும் விஷயம் தெரியவில்லை. மகளும் இதுபற்றி தந்தையிடம் சொல்லவில்லை. ஆறு ஆண்டுகளில் முத்துலெட்சுமியின் அறிவு வளர்ச்சி அங்கிருந்த ஆசிரியர்களின் அன்பை சம்பாதித்து தந்தன.

www.padippakam.com



கல்வியே கண்ணாக இருந்த முத்துலெட்சுமி ஆறாம் வகுப்பில் மிகச் சிறப்பாக தேர்ச்சி பெற்றாள்.

இச் செய்தி தந்தை நாராயணசாமிக்கு தெரிந்தபோது முதலில் அவர் அதை நம்பவில்லை. தன் மகளின் அறிவையும், ஆற்றலையும் ஆசிரியர்கள் கூறக் கேட்டு அதிசயப்பட்டார். ஆனந்தப்பட்டார்.

ஆனால் முத்துலெட்சுமியின் கல்விக்குத் தடையாக சில சம்பவங்கள் நடந்தன.

புதுக்கோட்டை திவானுக்கும், நாராயணசாமிக்கும் இடையில் சில அரசாங்க சம்பந்தப்பட்ட மனவேறுபாடுகள் தோன்றின. இதன் காரணமாக அரசு பதவியிலிருந்து விலகுவதென்று நாராயணசாமி முடிவு செய்தார். இம் முடிவை மன்னரிடம் தெரிவித்தார். அவர் ஓய்வடைய இன்னும் பல நாட்கள் இருந்தன. ஆனாலும் தொடர்ந்து பதவியில் இருக்க விரும்பாத அவர் தன் பதவியை விட்டு விலகினார். அப்போது முத்துலெட்சுமிக்கு பன்னிரெண்டு வயதுகூட நிரம்பவில்லை.

மனைவியுடன் எதிர்காலம் பற்றி ஆலோசித்தார் நாராயணசாமி. தற்போதைய நிலைமை, மகளின் எதிர் காலம் பற்றி தீவிரமாக சிந்தித்தார். முடிவில் சிறுமி முத்துலெட்சுமியை பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்த தீர்மானித்தார். இதற்குக் காரணம் படிக்க வைக்க முடியாது என்பதல்ல. தான் ஓய்வு பெற்ற நிலையில் தன் மகளின் திருமணத்தை பற்றி எண்ண வேண்டிய சூழ்நிலை அவருக்கு இருந்தது. அது அக்கால வழக்கம். அதை மீற முடியாமல் மகளின் திருமணம் பற்றி எண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார் அவர்.

இந்த முடிவு முத்துலெட்சுமியின் மனத்தில் இடியாக விழுந்தது. தன் கல்வியைப் பற்றி பெருங்கனவு கண்டு கொண்டிருந்த சிறுமி கலங்கிப் போனாள்.

படிப்பகம்

www.padippakam.com



கவலை கொண்ட சிறுமியின்பால் இறைவன் கருணை கொண்டான்.

முத்துலெட்சுமியின் கல்வி தடைப்பட்டதை அறிந்த ஆசிரியர்கள் மனம் வருந்தினர். அவர்களில் மூத்த ஆசிரியரான பாலையா என்பவர் நாராயணசாமியிடம் இது குறித்து பேச விரும்பினார். ஒருநாள் முத்து லெட்சுமியின் வீட்டுக்கு பாலையா வந்தார். அவரை தாய் சந்திராம்மாள் வரவேற்றார்.

ஆசிரியர் சிறுமியின் திறமைகளையும், கல்வி மேலிருந்த ஈடுபாட்டையும் எடுத்துக் கூறினார். நினைவாற்றலையும், நல்ல குணங்களையும் பற்றி புகழ்ந்து பேசினார். அப்படிப் பட்ட ஒரு மாணவியை தம் பள்ளி இழக்க விரும்பவில்லை என்றும் சொன்னார். முத்துலெட்சுமியை மீண்டும் பள்ளிக்கு அனுப்பும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

சந்திராம்மாள் முதலில் இதற்கு இணங்கவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் ஆசிரியர் உருக்கமாக கேட்டுக் கொண்டது அவர் மனதில் தைத்தது. அவர் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகப் பட்டது. முடிவில் தம் மகளை பள்ளிக்கு அனுப்புவதாக தம்பதிகள் முடிவு செய்தனர். இந்த மனமாற்றம் ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி முத்து லெட்சுமிக்கும் மனமகிழ்ச்சியை தந்தது.

இரண்டாண்டுகள் முத்துலெட்சுமி தொடர்ந்து படித்தாள். பதின்மூன்றாவது வயதில் எட்டாம் வகுப்பு பரீட்சைகளில் சிறப்பாக தேர்வடைந்தார். அதன்பின் தான் மீண்டும் அவர் கல்விக்கு சோதனை தோன்றியது.

அந்த நாட்களில் பெண்கள் பருவம் அடைந்து விட்டால் வெளியிலேயே அனுப்ப மாட்டார்கள். அத்தோடு அவர்கள் பள்ளிக்கூட வாழ்க்கைக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விடும். இந்த வழக்கம் முத்துலெட்சுமியின் வாழ்க்கையிலும் தடையாக நின்றது. முத்துலெட்சுமியை

www.padippakam.com



பள்ளிக்கு அனுப்புவதை சமுதாயப் பழக்கம் தடை செய்தது.

ஆனாலும் தந்தை நாராயணசாமி தன் மகள் கல்வியிடம் கொண்டிருந்த ஆர்வமும், ஆற்றலும் கண்டு அவளை படிப்பதிலிருந்து தடுப்பது தவறென்று நினைத்தார். அதனால் அவர் வேறொரு ஏற்பாட்டை செய்யவும் முன்வந்தார். அதுதான் பள்ளிக்கு அனுப்பாமலேயே வீட்டில் பாடம் சொல்லித் தரும் முயற்சி.

முத்துவுக்கு வீட்டிலேயே ஒன்பதாம் வகுப்பு பாடங்கள் நடத்தப் பட்டன. இதற்கென ஓர் ஆசிரியரும் நியமிக்கப் பட்டார். இதிலும் முத்துலெட்சுமி தன் திறமையை வெளிப்படுத்தினாள். தொடர்ந்து மெட்ரிக்குலேஷன் வகுப்பு வரை நாராயணசாமியே மகளுக்கு கற்றுத் தந்தார்.

தன்னுடைய நண்பர்கள் உதவியுடன் மகளுக்கு எல்லாப் பாடங்களையும் வீட்டிலேயே கற்றுத் தந்தார் நாராயணசாமி.

மெட்ரிக்குலேஷன் தேர்வு எழுத புதுக்கோட்டை மாநிலம் சுமார் நூறு மாணவர்களைத் தேர்ந்தெடுத்தது. இவற்றில் தேர்வில் வெற்றியடைந்தவர்கள் பத்து பேர். அவர்களில் ஒருவர் முத்துலெட்சுமி. தந்தை தன் மகளின் அறிவு கண்டு புளகாங்கிதம் அடைந்தார். இந்த வெற்றி நாராயணசாமிக்கு கிடைத்த வெற்றியாகக் கருதப் பட்டதைவிட புதுக் கோட்டை மாநிலத்தின் வெற்றி யாகவே கருதப் பட்டது. மாநிலமே மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது.

பெண்கல்வி அரிதாக இருந்த காலத்தில் சிறப்பாக பரீட்சைகளில் தேர்ச்சி பெற்ற முத்துலெட்சுமி பற்றி மாநிலமே பெருமையாக பேசிற்று.

படிப்பகம்

www.padippakam.com



இந்த ஆரம்பம் முத்துலெட்சுமியின் மனத்தில் கல்வி ஆர்வத்தை மேலும் தூண்டியது. உயர்கல்வி பற்றிய எண்ணத்தை விதைத்தது. தானும் பட்டதாரியாக வேண்டும் என்ற ஆசையைத் தூவியது.

இது பற்றி அவள் தந்தை நாராயணசாமியிடம் கூறினாள். அப்போது இருந்த பொருளாதாரப் பிரச்சனை மகளின் வேண்டுதலை ஏற்றுக் கொள்வதை தடுத்தது. முத்துலெட்சுமி தந்தையின் மறுப்பை கண்டு துயருற்றாள். ஆனால் மனம் தளராது மீண்டும் மீண்டும் தந்தையை வற்புறுத்தி வந்தாள்.

தந்தையால் அதற்கு மேல் மகளின் ஆசைக்குத் தடையாக இருக்க முடியவில்லை. உள்ளூரிலேயே மகளைப் படிக்க வைக்க விரும்பினார். புதுக்கோட்டை கல்லூரி முதல்வரை அணுகி தன் மகளுக்கு அக் கல்லூரியில் சேர அனுமதி கேட்டார். ஆனால் அது ஆண்கள் கல்லூரியாயிற்றே. அப்போது இருந்த சட்டத்தின்படி ஆண்கள் கல்லூரியில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. அதுபோல முத்துலெட்சுமியின் வேண்டுகோளும் நிராகரிக்கப் பட்டது.

ஆனால் முத்துலெட்சுமியின் ஆர்வம் சிறிதும் குறையவில்லை. மேலும் மேலும் தந்தையை நச்சரித்தார். நாராயணசாமிக்கு மேலே என்ன செய்வதென்று புரியவில்லை. முடிவில் அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்தார். புதுக்கோட்டை அரசிடமே அணுகிப் பார்ப்பதென்ற முடிவுதான் அது. அரசரை அணுகி மகளின் திறமையையும் பெற்றுள்ள மதிப்பெண்களையும், உயர்கல்வியில் இருந்த ஆர்வத்தையும் பற்றி எடுத்துக் கூறினார்.

முத்துலெட்சுமி பற்றி அறிந்த மன்னர் மிகவும் மகிழ்ந்தார். பெண்கள் நல்வாழ்விலும், முன்னேற்றத்திலும் பெரும் அக்கறை கொண்டவர் மன்னர். மேலை

www.padippakam.com



நாடுகளுக்கு இணையாக நம் நாட்டுப் பெண்களும் வளர வேண்டும் என்று பெரு விருப்பம் கொண்டவர் அவர். இந்நாட்டுப் பெண் படிப்பில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளதை கண்ட மன்னர் அவளுக்கு கல்லூரியில் இடம் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மன்னரே உத்தரவிட்டபின் மாற்று எண்ணம் ஏது?

புதுக்கோட்டைக் கல்லூரியில் முத்துலெட்சுமிக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அவரது வருகையில் கல்லூரியில் எந்தவித அசம்பாவிதங்களும் நேரக் கூடாது என்று கடுமையான நிட்ந்தனையுமிடப்பட்டது. கல்லூரியின் பெயருக்கு தன்னால் எந்தவித பங்கமும் நேராது என்று முத்துலெட்சுமி உறுதியளித்தார். அதன்படி நடந்தும் கொண்டார். கல்வியே குறியாக இருந்தார். வீண் பேச்சுக்களையும் அறிமுகங்களையும் தவிர்த்து வந்தார். இவருடைய ஆர்வமும், படிப்பாற்றலும் அங்கிருந்த அனைவரையும் திகைக்க வைத்தன. அவருடன் படித்த சக மாணவர்களான சத்தியமூர்த்தி போன்ற பின்னாள் தேசிய தலைவர்கள் இவரது திறமையை பாராட்டியுள்ளார்கள்.

ஆண்களோடு சரிசமமாக கல்வி பயின்றதை கேலி செய்தவர் பலர். இது குறித்து முத்துலெட்சுமியின் மனம் புண்படும்படி பேசியவர் பலர். ஆனால் அவரோ இவை யெதையும் குறித்து கவலைப்படாமல் படித்து வந்தார். இன்டர் மீடியட் பரீட்சைகளை சிறப்பாக எழுதினார். முடிவுகள் முத்துலெட்சுமிக்கு சாதகமாக பெரும் சாதனையாகவே அமைந்தது.

இன்ட்டர் மீடியட் முடிந்த போது இளமையிலிருந்த நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இல்லாத முத்துலெட்சுமி நோய் வாய்ப்பட்டார். டாக்டர்கள் ஆலோசனையின் பேரில் ஓராண்டு ஓய்வும் எடுத்துக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



தன்னுடைய ஓய்வு நேரத்தையும் பயனுள்ள வகையிலேயே செலவழித்தார். தன் தம்பிக்கு பாடம் சொல்லித் தருவதிலும், நல்ல நூல்களைப் படிப்பதிலும் முத்துலெட்சுமியின் விடுமுறையின் பெரும்பங்கு கழிந்தது.

பதினாறு வயது முத்துலெட்சுமியின் திருமணம் பற்றிய பயம் தாயார் சந்திராம்மாளை பற்றிக் கொண்டது. மகளின் கல்வியறிவு திருமணத்துக்குத் தடையாக அமைந்து விடுமோ என்ற பீதியும் அவரைப் பற்றிக் கொண்டது. இது பின்னர் நோயாக மாறி சந்திராம்மாளை வருத்தியது. டைபாயிட்டில் படுத்தார் சந்திரம்மாள்.

உள்ளூர் வைத்தியர்கள் தங்களால் முடிந்ததையெல்லாம் முயற்சி செய்து பார்த்தார்கள். முடியாத பட்சத்தில் இறைவனை நம்பும்படி கூறிவிட்டார்கள். தாயின் அருகில் கண் துஞ்சாமல் துணையிருந்த முத்துலெட்சுமிக்கு மருத்துவம் பற்றி பேரார்வம் எழுந்தது. அப்போது அமெரிக்காவிலிருந்து வந்த மருத்துவர் ஒருவர் சந்திராம்மாளை பரிசோதித்தார். அவரது பெரு முயற்சியால் சந்திராம்மாள் பிழைத்தார். இந்த சம்பவம் முத்துலெட்சுமி மனத்தில் மருத்துவம் பற்றி பெருங்கனவொன்றைத் தோற்றுவித்தது. தான் ஒரு மருத்துவராகி சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் மெல்ல விரிந்தது. நாளுக்கு நாள் இந்த எண்ணம் ஆழமாக வேரூன்றியது. ஒருநாள் தந்தையிடம் தன் ஆசையை வெளிப்படுத்தினார் முத்துலெட்சுமி. முதலில் தந்தை தயங்கினார்.

ஆனால் அவருடைய பழைய மாணவர் ஒருவர் சென்னை மருத்துவ கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார். அம் மாணவரின் வரவும், சென்னையில் முத்துலெட்சுமி படிப்பதற்கு தான் ஏற்பாடு செய்வதாக கூறியதும் தந்தையின் சம்மதத்தையும் பெற்று தந்தன.

முடிவில் முத்துலெட்சுமி சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். 1907 இல் சென்னை வந்த

படிப்பகம்

www.padippakam.com



அவருக்கு தங்குவதற்கு ஏற்ற வசதி இருக்கவில்லை. தந்தை நாராயணசாமியும் மகளுடன் தங்குவதென்று தீர்மானித்தார். சென்னையில் ஒரு வாடகை வீட்டில் இருவரும் தங்கினர்.

நாராயணசாமி பின்னர் தன் குடும்பத்தையும் சென்னைக்கே அழைத்து வந்து விட்டார். பொருளாதாரத்தில் அத்தனை வசதியாக இல்லாத அந்தக் குடும்பத்தின் சுமைகளை குறைப்பதாக ஒரு செய்தி வந்தது.

முத்துலெட்சுமியின் திறமைக்காக புதுக்கோட்டை அரசு உதவித் தொகை ஒன்றை அறிவித்தது. அவரது படிப்புக்கும், புத்தகங்களும் ஆகும் செலவு தரப்பட்டது. ஆனாலும் பொருளாதார நிலை சீரடையவில்லை.

இத்தனைக்கும் நடுவில் முத்துலெட்சுமி 1912 ஆம் ஆண்டில் தன்னுடைய மருத்து படிப்பில் சிறப்புத் தேர்ச்சி பெற்று மருத்துவரானார்.

இடையில் அவருக்கு கிடைத்த நண்பர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் டாக்டர் நஞ்சுண்டராவும், டாக்டர் ராமாராவும் ஆவார். டாக்டர் நஞ்சுண்டராவின் தேசப் பற்றுமிக்க பேச்சும், செயலும் முத்துலெட்சுமிக்கு நாட்டுப்பற்றை, அறிமுகப்படுத்தியது. அத்துடன் சுப்பிரமணிய பாரதி சரோஜினி நாயுடு போன்றவர்களின் நட்பும் கிடைத்தன. காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் அவர்தான் அளித்தார். டாக்டர் ராமாராவும் அரசியல் ஆர்வம் உடையவர். இவரது தொடர்பால் டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையாரின் நட்பு கிடைத்ததுடன் அடையாறில் நடந்த மாநாட்டில் பேசவும் வாய்ப்பு கிடைத்தது.

மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமை டாக்டர் முத்துலெட்சுமிக்கு கிடைத்தது. பல மருத்துவமனைகள் அவரை பணி புரிய அழைத்தன.

www.padippakam.com



ஆனாலும் முத்துலெட்சுமி எழும்பூர் மகளிர் - குழந்தைகள் மருத்துவமனையிலேயே தன் பணியைத் தொடங்கினார். பின் புதுக்கோட்டையில் பணியாற்றி விட்டு மீண்டும் சென்னை திரும்பினார்.

சென்னையில் தனியாக ஒரு சிறு மருத்துவ ஆலோசனை நிலையத்தை அமைத்து தொழிலை ஆரம்பித்தார் அவர்.

இந்நிலையில் பெற்றோருக்கே உரிய கவலை ஆட்கொண்டது. மகளின் திருமணம் பற்றிய கவலைதான் அது. ஆனால் முத்துலெட்சுமியோ அதைப் பற்றிய சிந்தனையே இல்லாது தொழிலில் தம் திறமையை காண்பித்து வந்தார்.

இந்நிலையில் சுந்தர ரெட்டி என்கிற டாக்டரை பற்றி தெரிய வந்தது. சுந்தர ரெட்டி யாருடைய உதவியும் இல்லாமல் சுயமாகவே படித்து இங்கிலாந்து சென்று திரும்பியிருந்தார். அவர் அப்போது விசாகப் பட்டணத்தில் உள்ள மருத்துவமனையொன்றில் பணி புரிந்து கொண்டிருந்தார். அவருக்கு முத்துலெட்சுமி பற்றிய விபரங்கள் தெரிவிக்கப் பட்டபோது இத்தகைய பெண்ணைத்தான் தேடிக் கொண்டிருப்பதாக மகிழ்ந்தார்.

நாராயணசாமியும், சுந்தர ரெட்டியும் சந்தித்து மனம் விட்டுப் பேசினார்கள். இருவருக்கும் பிடித்துப் போயிற்று. ஆனால் முத்துலெட்சுமி?

தந்தையின் பெரும் வற்புறுத்தலின் பின் முத்துலெட்சுமி சுந்தர ரெட்டியை சந்தித்தார். முதலில் அவருக்கு சுந்தர ரெட்டியை பிடிக்கவில்லை. ஆனால் பலமுறை சந்தித்தபின் சுந்தர ரெட்டியின் தன்னம்பிக்கையும், சுய முயற்சியும், பெண்களை மதிக்கும் குணமும், நல்லெண்ணங்களும் முத்துலெட்சுமியை கவர்ந்தன. பின் இரு மனங்களும் இணைந்தன.

www.padippakam.com



ஓராண்டு கழித்து 1914 ஆம் ஆண்டில் இருவரும் இல்லறத்தில் இணைந்தனர். திருமணத்தின் பின்னரும் இருவரும் தனித் தனியாக தங்கள் தொழில்களை கவனித்து வந்தனர். ஆனால் சுந்தர ரெட்டி இங்கிலாந்து சென்று திரும்ப பட்டிருந்த கடன் பெரும் சுமையாக வருத்தியது. அவருடைய நூற்றைம்பது ரூபாய் சம்பளம் போதவில்லை. மாப்பிள்ளையின் துன்பம் கண்டு வருந்திய நாராயணசாமி புதுக்கோட்டை மன்னரை அணுகி உதவி கேட்டார்.

மன்னரும் அம்மாநிலத்தின் தலைமை மருத்துவர் பதவியை சுந்தர ரெட்டிக்கு அளித்தார். அவருடைய திறமையும், இடைவிடாத உழைப்பும் கடனை அடைக்க உதவியது.

திருமணமாகி ஓராண்டுக்குள் முத்துலெட்சுமி ரெட்டி தன் முதல் மகனைப் பெற்றெடுத்தார். பிரசவம் கடுமை யாகவே அமைந்தது. அதன் பின் உடல்நிலையை தேற்றிக் கொள்ள வேண்டி முத்துலெட்சுமி புதுக்கோட்டைக்குச் சென்றார்.

காலம் கடுகிச் சென்றது. சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்த உதவிப் பேராசிரியர் பதவிக்கு சுந்தர ரெட்டி பொறுப்பேற்றார். கை நிறைய சம்பாதித்த புதுக்கோட்டை வேலையை விட குறைந்த வருமானமுள்ள புதிய வேலையை அவர் விரும்பினார். அதற்கு காரணம் மருத்துவதுறையில் பல புதிய நுட்பங்களை கற்றுக் கொள்ளவும் அத் துறையில் சிறப்பான சேவை செய்யவும் இப்புதிய பதவி உதவும்என்று கருதினார் அவர். கணவரின் இடமாற்றத்தின் காரணமாக முத்துலெட்சுமி அம்மை யாரும் சென்னைக்கு வந்து மருத்துவ தொழிலில் ஈடு பட்டார்.

1919 இல் ராம்மோகனை அடுத்து இரண்டாவது குழந்தை கிருஷ்ண மூர்த்திக்கு தாயானார் முத்துலெட்சுமி அம்மையார், அதே ஆண்டில் தாயார் சந்திராம்மாளின்

www.padippakam.com



மரணம் அக்குடும்பத்திற்கு பெரும் இடியாக வந்து சேர்ந்தது.

இடையில் நோய்வாய்ப்பட்ட சகோதரி சுந்தரம்மாளை பல டாக்டர்களிடம் காண்பித்து ஆலோசனை கேட்டார் முத்துலட்சுமி. முடிவில் தன் சகோதரிக்கு வந்திருப்பது சாதாரண நோயல்ல. அப்போது குணப்படுத்துவதற்கு அரிதான புற்று நோய் என்பதை தெரிந்து கொண்டார். தாயாரின் மறைவை அடுத்து தங்கையின் மரணம் 1923-ம் ஆண்டில் முத்துலெட்சுமியை பெரிதும் பாதித்தது. மனங்கலங்கிய முத்துலெட்சுமி செய்வதறியாது திகைத்து நின்றார்.

அப்போது பெண்கல்வி பற்றி பல நாடுகளிலும் வலியுறுத்தப்பட்டு வந்தது. மருத்துவத் துறையில் மகளிர்க்கு தகுந்த இடம் அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப் பட்டும் வந்தது. மருத்துவத் துறையின் முதல் பெண்ணாக இருந்த டாக்டர் முத்துலெட்சுமியின் திறமை காரணமாக அவரை இலண்டனுக்கு ஆராய்ச்சிக் கல்விக்காக அனுப்ப அரசு முடிவு செய்தது.

அப்போது முத்துலெட்சுமி சென்னை மாநில முதல்வராக இருந்த பனகல் மன்னரின் மருத்துவ ஆலோசகராகவும் பணியாற்றி வந்தார். அவர்தான் அம்மையாரை வெளிநாடு அனுப்ப பரிந்துரை செய்தார். முதலில் முத்துலெட்சுமி தயங்கினார். ஆனால் குழந்தை மற்றும் மகளிர் நோய்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு இதை விட வேறு சிறந்த சந்தர்ப்பம் அமையாது என்ற பலரின் ஆலோசனையைக் கேட்டு ஒப்புக் கொண்டார். 1925 ஆம் ஆண்டு ஜூலையில் முத்துலெட்சுமி ரெட்டி பிரிட்டனுக்கு சென்றார்.

இலண்டன் நகரிலிருந்த செல்சியா மருத்துவமனையில் தன்னுடைய பணியையும், பயிற்சியையும் தொடங்கினார்.

படிப்பகம்

www.padippakam.com



அவர். இந்தியப் பெண்கள் கழகத்தின் உறுப்பினரான அம்மையாரை பாரிசு நகர் வரவேற்றது. அப்போது அங்கு நடக்கவிருந்த பெண்கள் மாநாட்டிற்கு முத்துலெட்சுமியை இந்தியப் பிரதிநிதியாக அனுப்புவது என்று அக்கழகம் முடிவு செய்தது.

அம்மையாரும் பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அவ்வுரையில் அவர் இந்தியப் பெண் களின் நிலைமையையும், அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமைகளையும் பற்றி விவரமாக எடுத்துரைத் தார். அம் மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரும் டாக்டர் முத்துலெட்சுமியின் வீர முழக்கத்தில் கவர்ந்திழுக்கப் பட்டனர்.

ஓராண்டுக்குள் அம்மையார் தன் ஆய்வை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பினார்.

இந்தியாவில் தொன்டு தொட்டு இருந்த 'தேவதாசி' முறை கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தது. கோயில் களில் நடனமாடுவதை குலத் தொழிலாகக் கொண்டிருந்த தேவதாசிகளை நாட்டிலிருந்த பணக்காரர்கள் தங்கள் தேவைக்காக தீய முறைகளில் பயன்படுத்தி வந்தனர். கலை ஞானத்தை விலையாக்குவதில் ஆர்வம் காட்டினார்கள் மிருக உணர்வுள்ள பெரும் புள்ளிகள். இது சமுதாயத்திற்கு பெருங்கேடு விளைத்து வந்தது.

இதனால் இம்முறையை அடியோடு ஒழித்து பெண்களை சூழும் பேராபத்தை நீக்க வேண்டும் என பாடுபட்டவர் பலர். இவ்விஷயம் அம்மையாரின் இளமை முதலே உறுத்தி வந்தது. அதனால் இம்முறையை பூண்டோடு அழிக்க அம்மையார் பிரச்சாரம் செய்வதில் ஈடுபட்டார்.

அம்மையார் மனதை தொட்ட இன்னொரு விஷயம் பால்ய விவாகம். இளம் வயதில், அறிவு முதிராத பாலகர்

www.padippakam.com



களுக்கு மணம் செய்விப்பதை கடுமையாக எதிர்த்தார் அவர்.

எனவே இம் முறைகளை எதிர்த்து அவர் கடும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இந்நிலையில் மகாத்மா காந்தியை சந்தித்த அவர் தம்முடைய முயற்சியை கூறி ஆசிகோரினார். அண்ணல் காந்தி அடிகளும் அம்மையாரின். கருத்துக்களை தாம் சென்ற இடங்களில் எல்லாம் பரப்பி வந்தார்.

இக் கொள்கைகளுக்கு உறுதுணையாக இராமாமிருத அம்மையார், பெரியார் ஈ.வே. இராமசாமி, டாக்டர் சி. நடேசன் போன்றவர்களும் இருந்தனர்.

1926 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சட்டம் பெண் வேட்பாளர்களுக்கு வழிவகுத்தது. இது பல பெண் போட்டியாளர்களை அறிமுகப்படுத்தியது. சென்னை பெண்கள் கழகத்தின் வேண்டுகோளின்படி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி சட்டமன்ற மேல் சபை உறுப்பின ராக நியமிக்கப்பட்டார். இது பெண் குலத்திற்கே பெருமைத் தேடித் தருவதாக அமைந்தது.

முதல் பெண் சட்ட மன்ற உறுப்பினர் அதுவும் சென்னையிலிருந்து வந்தது மற்றவர்களுக்கு முன்னோடி யாக அமைந்தது. அத்துடன் நிற்கவில்லை. அம்மையார் சட்ட மன்றத்தில் உதவித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அம்மையாரின் அரசியல் பிரவேசம் பல ஆக்கப் பணிகளுக்கு வழி வகுத்தது. பெண்ணுரிமைகள் வழங்கப் பட்டன. பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். உயர்நிலைப் பள்ளிகளில் மருத்துவ பணிகள் தொடங்கின. தேவதாசி முறை நீங்கியது. அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. சாரதா சட்டம் எனப்படும் பால்ய விவாகத் தடை சட்டம் நிறைவேற வழிவகுத்தார்.

www.padippakam.com



கட்டணமில்லாத கல்வியை ஏழைப் பெண்களுக்காக அறிமுகப்படுத்த உதவினார்.

பொதுப்பணிகளில் பேரார்வம் காட்டி வந்தாலும் தன்னை இந்நிலைக்கு உயர்த்திய மருத்துவத் தொண்டையும் அயராது தொடர்ந்து வந்தார்.

ஆதரவற்ற பெண்களையும், அநாதைக் குழந்தைகளையும் அரவணைப்பது நமது கடமை என்ற எண்ணம் கொண்டார் அவர். இதற்காக பெருமுயற்சியின் சிறு விளைவாக 1926 ஆம் ஆண்டில் குழந்தைகள் பாதுகாப்பு இல்லம் ஒன்று உருவானது.

பெண்களுக்காக ஒரு மகளிர் பாதுகாப்பு இல்லத்தையும் தொடங்கினார். அதற்காக பலரை அணுகி நிதியையும் திரட்டினார்.

இப்படி நல்லவைகளை நடத்திக் கொண்டிருக்கும் போது, அவரது முயற்சிகளுக்கு உறுதுணையாக நின்ற தந்தை நாராயணசாமி 1930 இல் மறைந்தார் அதே ஆண்டில் கைதான காந்திஜிக்காக தன் மேல்சபை பதவியையும் ராஜினாமா செய்தார்.

1936 இல் அநாதை இல்லம் அடையாறுக்கு இடம் பெயர்ந்தது. எந்தவித வேறுபாடுகளையும் காட்டாது அபலைக்கு ஆதரவளித்தது அந்நிலையம். தன் கணவரின் துணையோடு அவ்வில்ல வளர்ச்சியில் இரவு பகல் பாராது ஈடுபட்டார் திருமதி முத்துலெட்சுமி ரெட்டி.

புற்றுநோய் ஆய்வுக் கழகமொன்றின் தேவையை வலியுறுத்தி வந்தார் அம்மையார். தன் அருமைச் சகோதரி புற்று நோயால் மரணமுற்றதை தொடர்ந்து அவர் இப்பெரு முயற்சியில் ஈடுபட்டார். 1935 இல் இருந்து தொடங்கிய அவரது முயற்சிக்கு பலனாக 1952 இல் பண்டித நேரு இதற்கு அடிக்கல் நாட்டினார். அதன் விளைவு தான் இன்று சென்னையில் நேரிய முறையில் செயல்பட்டு வரும் புற்றுநோய் மருத்துவமனை.

படிப்பகம்

www.padippakam.com



1936 இல் அம்மையார் கிராம மக்களின் நல்வாழ்விற்காக பொது மருத்துவமனையொன்றை அடையாறில் தொடங்கினார்.

பெண்களின் மேம்பாட்டை பெரிதும் விரும்பியவர்;

பெண்ணுரிமைக்காக பாடுபட்டவர்;

பெண்கள் நலனைக் காத்து வந்தவர்;

ஆசியப் பெண்கள் மாநாட்டுக்கு தலைமை வகித்த பெருமையுடையவர்;

சென்னை மாநகராட்சியில் பதவி வகித்த முதல் பெண்மணி;

சமுதாய சீர்திருத்ததில் தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்த முத்துலெட்சுமியின் பெரும் பணி கருதி இந்திய அரசு பத்மபூஷன் விருதை வழங்கியது.

இந்தியப் பெண்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் பெருந்துணையாகவும் விளங்கிய அந்த மறக்க முடியாத மாதர் திலகம் எழுதுவதிலும் வல்லவர். தன்னுடைய சட்டமன்ற அனுபவங்களை நூலாக வெளியிட்ட அவர், தன் சுயசரிதையையும் எழுதியுள்ளார்.

தீண்டாமை ஒழிப்பு, சமுதாயத்தில் புரையோடிப் போன கொள்கைகளை சாடுதல் போன்ற பல பகுத்தறிவு கொள்கைகளைப் பற்றியும் எழுதியுள்ளார்.

முதுமை முத்துலெட்சுமி ரெட்டிக்கு மட்டும் விதி விலக்கானதா? தன்னுடைய எண்பத்தி ரெண்டாவது வயதில் திருமதி முத்துலெட்சுமி ரெட்டி 1968 ஜூலை 2 ஆம் நாள் இவ்வுலகை விட்டே சென்றார்.

அவரது மறைவு பெண்களுக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கே ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

★ ★ ★

படிப்பகம்

www.padippakam.com

# சேவைக்கொரு சுபலட்சுமி

காலம் காலமாக இந்த மண்ணின் மேம்பாட்டிற்காக வும், மனித் குலத்தின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர்கள் பலர். அவர்களில் ஆணுக்கு சரியாக பெண்களும் தங்கள் பங்கை அளித்தது இந்த மண்ணின் மாண்பாக இருந்து வந்திருக்கிறது. அத்தகைய மாட்சி உடையவர்களில் சகோதரி சுபலட்சுமியின் பங்கும் பணியும் மறக்க முடியாததாகும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமும், கலைக் களஞ்சியமு மான தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய அய்யருக்கு மூத்த புதல்வியாக பிறந்தவர் சகோதரி சுபலட்சுமி ஆவர். சென்னை மயிலாப்பூரில் 1886ஆம் ஆண்டு பிறந்த சுபலட்சுமி இளமையிலேயே கல்வியார்வ மும் தொண்டுள்ளமும் கொண்டிருந்தவர் என்றால் மிகை யாகாது.

ஐந்து சகோதரர்களுடன் பிறந்த சுபலட்சுமியிடம் இயல்பாகவே பயமும் பணிவும் குடி கொண்டிருந்தன. அதே சமயத்தில் எதையும் ஆழ்ந்து கவனிக்கும் குணமும் ஆராயும் மனப்பான்மையும், அறிவுத் தாகமும் கூடப் பிறந்த குணங்களாக இருந்தன. ஒன்பது வயதில் ஆரம்பக் கல்வியை முடித்த சுபலட்சுமி வீட்டிலேயே இருந்து கொண்டு அறிவை வளர்க்கும் பல நூல்களைக் கற்க ஆரம்பித்தார். மூன்றாண்டுகள் கழிந்தன. இவருக்கு வயது



படிப்பகம்

www.padippakam.com



பதினொன்று ஆயிற்று. அப்போது சகோதரி சுபலட்சுமியின் வாழ்வில் பெரும் மாற்றத்தை தரக்கூடிய மண வாழ்க்கை அமைந்தது. விபரம் தெரியாத, உலகம் புரியாத அந்த பாலகப் பருவம். சுபலட்சுமியின் திருமணத்தை தொடர்ந்து அவள் வாழ்வில் எரிமலை வெடித்தது. பெரும் புயல் வீசியது. ஆம், அந்த இளம் மனத்தில் இடியாக அவளது கணவனின் மறைவு வந்து இறங்கியது. மூன்றே மாதங்கள் வாழ்ந்த அந்த வாழ்க்கை சுபலட்சுமிக்கு புரியாத புதிரா கவே அமைந்திருந்தது. புதிதாக வந்த ஒருவர்; அவரின் உறவு அதன்பின் வந்த அவலம். இவை எதுவுமே அவள் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஏதோ ஒரு அசம்பாவிதம் என்ற எண்ணம் மட்டும்தான் மிஞ்சி நின்றது. குழந்தை உள்ளத்தில் குழப்பங்கள் அதிகம் இருக்கவில்லை.

ஆனால் உறவினர்கள் தொல்லை, துயரத்தை பெரிது படுத்தி நோகடிக்கும் சுற்றத்தார். இவை சுபலட்சுமியின் மனதை பெரிதும் பாதித்தன. தன்னைக் காட்சிப் பொருளாக கண்டு துக்கம் கொண்டாடும் பிறரை பார்க்க அஞ்சினாள். இயல்பாகவே இருந்த பயமும் வெட்கமும் பூதாகாரமாகி வெறுப்பாக உருவெடுத்தன. பிறர் பார்வையை தவிர்க்க விரும்பும் உணர்ச்சியும், தனிமை நாட்டமும் மேலோங்கி இருந்தன. பயமும், பரபரப்பும், நடுக்கமும் சுபலஷ்மியை ஆட்கொண்டன.

இந்த நிலைமையின் கொடுமையை உணர்ந்த பெற் றோர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். தம் மகளின் திருமண வாழ்க்கை பற்றிய சுவடுகூட அவளை அணுகக் கூடாது என்று குறியாக இருந்தனர். மகளின் மனதை திசை திருப்பி வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த எண்ணினர். அதற்கு முதல், கட்டமாக பெண்ணுக்கு கல்வியும், இசையும் போதிப்பதை முக்கியமாகக் கொண்டார்கள் அதற்கான முழு முயற்சியில் பெற்றோர்கள் இறங்கிய

படிப்பகம்

www.padippakam.com



போது அந்தக் கால வழக்கத்துக்கு விரோதனமான இந்த செயலை சிலர் எதிர்க்கவும் செய்தனர். அந்த எதிர்ப்புகளை பொருட்படுத்தாத தந்தை மகளின் கல்வி மேம்பாட்டிலும், மன அமைதியிலும் பெரும் ஆர்வம் காட்டினார்.

தினமும் அவரே காலை வேளைகளில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். இசைக்கற்றுக்கொள்ளவும் ஆசிரியரை அமர்த்தினார். முதலில் பயத்துடன் இதில் ஈடுபட்டாலும் சுபலட்சுமிக்கு இந்த மாற்றம் நாளடைவில் பெரும் ஈடுபாட்டை உருவாக்கியது.

சுபலட்சுமியின் கல்வி ஆர்வத்தை கண்ட அவள் தந்தை 1898 இல் எழும்பூர் பள்ளியொன்றில் அவளை நான்காம் வகுப்பில் சேர்த்தார். பெண்களுக்கு பள்ளிக் கல்வியே மிகவும் எட்டாத கனியாக இருந்த அந்தக் காலத்தில் சுபலட்சுமியின் பள்ளிப் படிப்புக்கு ஒரே நாளில் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. எழும்பூரிலிருந்து வீடு திரும்பு வதற்குள் இருட்டிப் போன காரணத்தினால் அவள் மீண்டும் தந்தையிடமே கல்வி கற்க ஆரம்பித்தாள்.

ஆனால் தந்தைக்கு மட்டும் மகளை படிக்க வைக்க வேண்டும் என்ற ஆர்வம சிறிதும் குறையவில்லை. 1899ம் ஆண்டு அக்டோபர் மாதம் பள்ளிக்கருகிலேயே வீடொன்றில் தங்கிப் படிக்க ஏற்பாடு செய்தார். மீண்டும் சுபலட்சுமியின் கல்வி தொடர்ந்தது ஆர்வமும், முயற்சியும் அவளுக்கு பரிசுகளை வாங்கித் தந்தன. வகுப்பில் முதன்மை யாக விளங்கிய சுபலட்சுமி அந்த ஆண்டில் மாநிலத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுத் தேறிய முதல் தமிழ்ப் பெண் என்ற பெருமையும் தட்டிச் சென்றாள். அவளது திறமை இன்டர் மீடியட் பரீட்சையைத் தொடர்ந்து. உபகாரச் சம்பளத்தை (உதவிப் பணத்தை) பெற்றுத் தந்தது.

படிப்பகம்

www.padippakam.com



1904 ஆண்டில் அவள் விடுமுறையை வீணாக்காமல் மலையாள மொழியையும், வீணையையும் கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். 1906 ஆம் ஆண்டு சுபலட்சுமி மெட்ரிக் குலேஷன் பரீட்சையில் தேறினாள். தொடர்ந்து கல்லூரிப் படிப்பையும் தொடர்ந்தாள். அப்போது தமிழார்வம் காரணமாக தமிழறிவையும் வளர்த்துக் கொண்டாள். இரண்டாண்டுகள் கழிந்தன. கல்லூரியில் முதன்மையாகத் தேறி சுபலட்சுமி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றாள். கல்லூரியிலிருந்து வெளிவந்த போது அங்கிருந்த கன்னியாஸ்திரிகளின் சேவையும் தொண்டுள்ளமும் சுபலட்சுமியின் மனதைப் பெரிதும் ஊடுருவியிருந்தன. அதன் விளைவாக நம் நாட்டிலும் இத்தகைய கல்வி நிலையங் களும், மருத்துவமனைகளும், அனாதை ஆசிரமங்களும் ஏன் உருவாக கூடாது என்ற கேள்வி மனதை நெருட ஆரம்பித்தது.

1908 ஆம் ஆண்டு பல எதிர்ப்புகளுக்கும், தடுமாற்றங் களுக்கும் இடையில் சுபலட்சுமி மாநிலக் கல்லூரிக்குள் பி. ஏ. வகுப்பில் அடியெடுத்து வைத்தாள். சுபலட்சுமிக்கு தமிழாசிரியராக அங்கு டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் அறிமுகமானார். இருபத்து மூன்றாவது வயதில் சுபலட்சுமி பி. ஏ. பட்டதாரியாக தேறினாள்.

இவளது கல்வியறிவு இங்கு பிற மாநிலங்களில் மட்டு மல்லாது இலங்கையிலும் இவளுக்கு வேலை வாய்ப்புக் களை வழங்கியது. ஆனால் அவற்றையெல்லாம் மறுத்து தான் முன்னர் படித்த பள்ளிக் கூடத்திலேயே ஐம்பது ரூபாய் ஊதியத்தில் ஆசிரியையாகச் சேர்ந்தாள். தொடர்ந்து ஆசிரியப் பயிற்சியையும் 1913-இல் பெற்ற துடன் தன் படிப்பை நிறுத்திக் கொண்டார்.

ஆசிரியப்பணியே அவரது ஆசிரமப் பணிக்கு வித்திட்டது. சுபலட்சுமி 'சிஸ்டர் சுபலட்சுமி' ஆனார்.

www.padippakam.com



1912 ஆம் ஆண்டில் சகோதரி சுப்புலட்சுமி கனவு நனவாக ஆரம்பித்தது. ஆம்; இளம் விதவைகளுக்கு மறு வாழ்வு அளிக்கக்கூடிய கல்வி நிலையமும், ஆசிரமும் தொடங்க அப்போது கல்வி ஆய்வாளராக இருந்த செல்வி லிஞ்ச் என்பவர் முன் வந்தார் சகோதரி. சுபலஷ்மியின் மகிழ்ச்சி அளப்பரியது. ஆரம்பத்தில் நான்கு இளம் விதவைகளுடன் [சகோதரியின் இல்லத்திலேயே] 'விதவாசிரமம்' ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் ஆசிர மத்துக்கு வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்ததை முன்னிட்டு வேறு இடத்தில் அரசு உதவியுடன் தன் பணியை தொடர்ந்தது. கல்வியையும் ஒழுக்கத்தையும் இரு கண்ணெனக் கொண்டு ஆசிரமம் வளர்ந்தது.

சுமார் இருபது பெண்கள் இருந்த ஆசிரமத்தை திருவல்லிக்கேணிக்கு 1913 இல் மாற்றியதன் பின் அன்னி பெசன்ட் அம்மையார் ஆசிரமத்தை பார்வையிட்டு சகோதரி . சுபலட்சுமியின் முயற்சியை பாராட்டினார். இக்காலத்தில் டாக்டர் முத்துலட்சுமியின் உதவியும் சுபலட்சுமியின் ஆசிரமத்துக்கு கிடைத்து வந்தது.

1914 ஆம் ஆண்டு உலக அரங்கில் மிக முக்கியமான காலகட்டமாகும். முதலாம் உலக மகாயுத்தம் ஆரம்ப மானது. இதன் காரணமாக இடமாற்றம் தேவைப் பட்டது. ஆசிரமம் ஐஸ் ஹவுசிற்கு மாற்றப்பட்டது.

1920 ஆம் ஆண்டில் தெலுங்கு மொழியில் தேர்ச்சி பெற்றார் சகோதரி. சகோதரியின் கல்விச் சேவையை பாராட்டி அந்த ஆண்டில் அவருக்கு (கெய்லியர்) இ-ஹிந்த் விருதை அரசு அறிவித்தது. பத்து ஆண்டுகளாக நடந்து வந்த பாடசாலை அரசு ஆதரவுடனும் மிகப் பெரிய கட்டிட வசதியுடனும் 1922 ஆம் ஆண்டில் லேடி வெல்லிங்டன் பள்ளியாக உருவானது. அதன் தலைமைப் பொறுப்பு சகோதரி சுபலட்சுமியிடம் 1923ல் ஒப்படைக்கப்

www.padippakam.com



பட்டது. பெண் கல்வியில் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டு வந்தது.

தொடர்ந்து வந்த நாட்களில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியுடைய இந்திய பெண்கள் கழகம் சகோதரி சுபலட்சுமியின் சேவையை பெண்கள் மேம்பாட்டுக்காக பயன்படுத்திக் கொண்டது. அக்கழகத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்த சகோதரியின் ஆலோசனைகள் பொன்னே போல் போற்றப்பட்டன.

திருமதி. கஸின்ஸ் இன் பெருமுயற்சியில் இந்திய மகளிரை ஒன்றிணைக்கும் திட்டம் உருவானது. அகில இந்திய மாதர் சங்கம் உருவாக்கப்பட்டு 'எல்லோரும் இந்திய மாதர்' என்ற ஒருமைபாட்டு எண்ணத்துடன் செயல்படுத்தப்பட்டது. சென்னை மாகாணத்தில் இதன் கிளை நிறுவப்பட்டு பல துறைகளில் இருந்தும் வந்த பெண்கள் உறுப்பினர்களாக அறிமுகம் ஆனார்கள். அந்தக்கூட்டத்தில் சகோதரி சுபலட்சுமி தலைமை வகிக்க அழைக்கப் பட்டார். பெண் கல்வியிலும், மேம்பாட்டிலும் பேரார்வம் கொண்டிருந்த சகோதரியும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டம் தமிழக பெண் களிடையே ஒரு விழிப்புணர்வை ஊட்டியது.

பதினைந்து ஆண்டுகளாக ஸ்ரீ சாரதா ஐக்கிய சங்கம் என்ற சுபலட்சுமியின் பாடசாலை மற்றும் ஆசிரம அமைப்புக்ள் சிறப்பான தொண்டாற்றியதனை நினைவு கூர்ந்து அதன் ஆண்டு விழா 1927 இல் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி தலைமையில் கொண்டாடப்பட்டது. ஆசிரமத்தில் வந்து சேரும் இளம் விதவைகளை கருத்தில் கொண்டு புதிய பள்ளியொன்றை ஆரம்பிக்க இச்சங்கம் முடிவுசெய்தது. பலருடைய நட்பும், ஆதரவும், வரவேற்பும் பொருளுதவியும் இந்த முடிவுக்கு துணையாக நின்றன. வீட்டிலிருந்தபடியே பள்ளிக்கு வரக்கூடிய வசதியுடன் ஸ்ரீ சாரதா வித்தியாலம் 1927 இல் தொடங்கப்பட்டது.

www.padippakam.com



பலர் இந்தப் பள்ளிக்கூடத்தில் தம் பெண்களை சேர்க்க முன் வந்தது மேலும் சகோதரியின் முயற்சிக்கு ஊக்கம் அளித்தது.

சகோதரியின் குடும்ப அங்கத்தினர்கள் எப்போதும் அறிவு பூர்வமான விஷயங்களை விவாதிப்பதிலும், சிந்திப்பதிலும் ஆர்வம் காட்டினார்கள். இதனை ஊக்குவிக்க சகோதரி தலைமையில் 'நானாத்மா' என்ற அமைப்பு உருவானது. அவரது குடும்பத்தினர் அனைவரும் இதில் உறுப்பினர்களானார்கள். நானாத்மாவின் முக்கிய நோக்கங்களான பல முன்னேற்ற நடவடிக்கைகளை எடுப்பது, அவை பற்றி விவாதிக்க மாநாடு நடத்துவது, சிந்தனைகளை வெளிக்கொண்டு வர பத்திரிகை ஒன்றை ஆரம்பிப்பது, உயர்ந்த எண்ணங்களை பிரதிபலிக்கும் நாடகம் அல்லது வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்துவது, இளைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்துவது ஆகியவை அமைந்திருந்தன. உயர்ந்த நோக்கங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்த இந்தச் சங்கம் இருபது ஆண்டுகள் வெற்றி நடை போட்டது.

சகோதரியின் மனித குலத்தொண்டுகளில் மிக முக்கியமானது சமூக சேவை. இதை அவர் பள்ளி, ஆசிரம மாணவிகளிடமும் பழக்கப்படுத்தினார். சமூக சேவா சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பலவித நல்ல வழிகளில் நிதிதிரட்டி சேவைக்காக செலவழிப்பது போன்ற பல திட்டங்களை அமுல் படுத்தினார். ஏழைக் குழந்தைகளுக்கான பள்ளியொன்றையும் இச்சங்கம் ஆரம்பித்து நடத்தியது.

சகோதரி சுபலட்சுமியின் முயற்சியும், ஆர்வமும் சாரதா வித்யாலத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றது. திருவல்லிக்கேணியிலிருந்த இப்பள்ளி இடம் பற்றாக்குறை காரணமாக மயிலாப்பூருக்கு இடமாற்றம் பெற்றது.

www.padippakam.com



பல போராட்டங்களுக்கு இடையில் சகோதரி சுபலட்சுமி சாரதா வித்தியாலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டார்.

1934 இல் கடலூருக்கு மாற்றப்பட்ட சகோதரி அங்கும் தன் சமூகத் தொண்டை நிறுத்தினாரில்லை. அருகிலிருந்த ஒரு சேரியில் மாலைப் பள்ளியை நிறுவி மூன்றாண்டுகள் கடலூரில் தன் சேவையை தொடர்ந்தார்.

தொடர்ந்து வந்த ஆண்டில் சகோதரி தன் தாயாரை இழந்து சிறகொடிந்த பறவை போல துயருற்றார். இதன் பின் அவர் கடலூரிலிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

1938 இல் இராமகிருஷ்ணா மிஷன் நிர்வாகத்தினரிடம் நிர்வாகப் பொறுப்பை மாற்றி பள்ளியையும், ஆசிரமத்தையும் ஒப்படைத்தார் சகோதரி. சில மாதங்களில் மாம்பலத்தில் இப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு மேலும் பல மாணவிகளுக்கு புகலிடம் தந்தது.

முதியோர் கல்வியில் ஈடுபாடு கொண்டிருந்த சகோதரி முதியோர் பள்ளியொன்றையும் அமைத்து பெரும் தொண்டாற்றினார். 1941 ஆண்டில் தன் முப்பத்தாண்டு கல்வித் தொண்டை விட்டு விலகினார் அவர். அதே ஆண்டில் திருமளாச்சாரியார் பெண்கள் பள்ளிக்கு தலைமையேற்று தொடங்கி வைத்த பெருமையும் இவருக்கு உரியதே.

1946 ஆண்டு இந்திய மாதர் சங்க தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் சகோதரி. 1952 இல் சட்ட மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அவர். 1955 இல் சகோதரியை பேரிடியாக அவரது தந்தையின் மரணச் செய்தி தாக்கியது.

போராட்டங்களையும், வெற்றிகளையும் தன் வாழ்க்கையின் பல பகுதிகளில் சந்தித்த சகோதரி சுபலட்சுமி இயற்கையின் நியதியை வெல்ல முடியுமா? மக்களுக்காக

படிப்பகம்

www.padippakam.com



அதுவும் பெண்களுக்காக தன் வாழ்வின் துன்பங்களை எல்லாம் மறந்து பிறர் வாழ பெருமுயற்சி செய்த அந்த தியாகஉள்ளம். நம்மை விட்டு மறைந்து விட்டது.

சகோதரி சுபலட்சுமி மறைந்தாலும் அவரது கல்வித் தொண்டும், அவர் அமைத்து தந்த சாரதா வித்தியாலமும், இளம் விதவைகளுக்கு பெற்றுத் தந்துள்ள சமூக அந்தஸ்தும், பெண் கல்விக்கு வித்திட்டு உருவாக்கியுள்ள நம்பிக்கையும் இந்த பூவுலகம் உள்ளளவும் ஒவ்வொரு பெண்ணின் இதயத்திலும் என்றும் வாழும்.

www.padippakam.com

# நாட்டை நிமிர்த்திய இந்திரா காந்தி

**பூக்கின்ற பூக்கள் எல்லாமே புதுமணம் பரப்புவ தில்லை. பிறக்கின்ற உயிர்கள் எல்லாமே புகழுடன் பிறப்பதுமில்லை. வாழ்கின்ற போதும் அவர்கள் வரலாறு படைப்பதில்லை. சாகின்ற போதும் அவர்கள் சாதனை யாவதில்லை.**

பிறப்பிலும் இறப்பிலும் சாதனை காண்பவர்கள் ஒரு சிலரே. அப்படிப்பட்டவர்களின் பிறப்பு என்றும் நினைவு கூர்வதற்குரியது. நம் கண்ணெதிரே சரித்திரம் படைத்த வர்களை எண்ணிப்பார்க்கும் போது இந்த நூற்றாண்டின் தலை சிறந்த பெண்மணி என்ற பெயரைத் தட்டிச் சென்ற ஒருவரை நாம் மறக்க முடியாது.

நவம்பர் மாதம் பத்தொன்பதாம் தேதி. அந்த நாள் உங்களுக்கு அவரை ஞாபகப்படுத்தாமல் போகாது.

''நான் முழுமையான வாழ்க்கையை வாழ்ந்துவிட்டேன் இந்த நாட்டிற்கு நான் ஆற்ற வேண்டிய கடமையையும் செய்து விட்டேன்'' என்று சொன்ன காஷ்மீரத்து ரோஜா என்றும் நம் இதய ரோஜா அல்லவா. இந்த நாட்டு நலம் காண்பதற்காக மணம் வீசிய அந்த மலர்.

இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை காப்பதற்காகக் கருகி விட்ட அந்த மலர்.

ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் இடம்பிடித்த அந்த மலர்.

www.padippakam.com



ஒவ்வொரு இந்தியனையும் நேசித்த அந்த மலர்.

இந்து என்றழைக்கப்பட்ட இனிய மலர்.

''இந்தியாவே இந்திரா. இந்திராவே இந்தியா'' என்ற புதிய சகாப்தம் படைத்த அந்த இந்திரா பிரியதர்ஷினியின் வாழ்வு இந்திய மக்கள் ஒவ்வொருவரின் நினைவிலும் நிற்க வேண்டிய ஒன்றாகும்.

1917 ஆம் ஆண்டில் நவம்பர் பத்தொன்பதாம் தேதி ஆனந்த பவனத்தில் கமலா நேருவின் மடியில் மகளாகக் கிடந்து ஆனந்தப்படுத்திய இந்து இன்று பாரதத் தாயின் பனி படர்ந்த மடியில் சாம்பல் பூக்களாய் சங்கமித் திருக்கிறாள்.

பிறந்தது பெண் என்று நேருவுக்கு அறிவிக்கப்பட்டது. அது கேட்டு நேரு சிறிதும் கவலைப்படவில்லை. ''அதனாலென்ன ஆயிரம் ஆண்களை விட உயர்ந்தவள் என் பெண்'' என்று கூறிப் பூரித்தார்.

பார்வைக்கு இனியவளாக விளங்கிய தன் பெண்ணுக்கு ''இந்திரா பிரியதர்ஷினி'' என்று மிகப் பொருத்தமாகப் பெயரிட்ட நேருவைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மகளுக்குப் பின் மகனில்லாத குறையைக் கூட நேரு பெரிதாக எண்ணவில்லை. ஆண்கள் அணியும் உடைகளை இந்து அணிந்து வருவதை நேரு கண்டு மகிழ்ந்தார்.

முதல் உலக மகா யுத்தம் உருவானது. அது முடிவடைகிற தருவாயில் 1918 ஆம் ஆண்டில் வெள்ளை அரசின் அட்டுழியங்கள் எல்லை மீறிப் போயிற்று. நீதியும் நியாயமும் தோற்றுப் போய், வைத்ததெல்லாம் சட்டம் என்ற நிலையில் வெள்ளை அரசின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. இதற்குச் சிகரமாக வெள்ளை அரசின் 'ரௌலட் சட்டம்' நீதி விசாரணைகள் இல்லாத தண்டனை முறை அமுலானது.

www.padippakam.com



தொடர்ந்து தேசியத்தலைவர்கள் கொதித்தெழுந்தனர். நாடு முழுவதும் வன்முறை, தலைவர்கள் கைது, வெள்ளையரின் அடக்கு முறை பரவி வந்தன. அப்போது நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை மோதிலில் தீவிர மாக வெள்ளையரை எதிர்க்கக் காரணமாயிற்று. தொடர்ந்து அவர் வெள்ளை அரசை எதிர்த்துத் தீவிரமாக ஈடுபட்டார். அவரைக் கைது செய்ய உத்தரவுடன் போலீஸ் அவர் வீட்டை நெருங்கியது.

தாத்தா மடியில் குழந்தை இந்து. அவரைப் போலீசார் நெருங்கியபோது குழந்தை இந்துவின் வயது ஐந்து தான். ஆனாலும் தாத்தாவைப் போலீஸ் கைது செய்யப் போவது கண்டு அவள் இறங்க மறுத்ததுடன் அழவும் ஆரம்பித்து விட்டாள்.

மனம் நெகிழ்ந்த மோதிலால், குழந்தைக்கு ஆறுதல் சொல்லிச் சமாதானப்படுத்தினார். "எதற்காகவும், எப்போதும் என் இந்து அழக்கூடாது." என்ற அவரது அறிவுரையை இந்திரா தான் கடைசி நாட்கள் வரையிலும் கடைபிடித்தார் என்பதற்குப் பல சம்பவங்கள் அவர் வாழ்வில் உள்ளன.

இன்னொரு சம்பவம் இந்திராவின் இளவயது வீரத்தை எடுத்துக் காட்ட உதாரணமாக அமைகிறது.

நேருவைக் கைது செய்த போலீசார் அவரை நீதி மன்றத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அந்த அபராதத் தொகையைக் கட்ட நேரு மறுத்து விட்டார். போலீசார் விடுவார்களா? நேராக அவர் வீட்டிற்குள் நுழைந்து அங்கிருந்த விலை யுயர்ந்த பொருட்களைச் சூறையாட ஆரம்பித்தனர்.

வந்தது கோபம் இந்திராவுக்கு சட்டென்று சமையலறைக் குள் புகுந்து, தேடி, சமையலறைக் கத்தி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தாள். போலீஸ்காரர்களை எதிர்த்துப்

படிப்பகம்

www.padippakam.com



புயலெனப் பாய்ந்தாள். எந்த அநியாயத்தையும் பொறுக் காத திட மனது இந்திராவுக்கு இருந்தது அன்றே வெளிப் பட்டது.

பிறப்பிலேயே தேசபற்று மிக்க குடும்பத்தில் பிறந்த இந்திரா பிறந்த சூழ்நிலை மட்டுமன்றி அவர் வளர்ந்த விதமும் வாழ்ந்த விதமும்கூட தேசப்பற்று மிக்க வாழ்வைத் தேர்ந்தெடுக்க வைத்தது. தாத்தா மோதிலால் இட்ட சுதந்திர தீப்பொறி, பற்றிக் கனலாகித் தந்தை நேருவினால் பெருந்தீயாக உருப்பெற்று இந்திரா மனதிலும் இடம் பிடித்து கொண்டது.

இளமையிலேயே இந்திரா வேகமும் விவேகமும் மிக்க சிறுமியாக விளங்கினாள். நினைவாற்றலும், நேரிய குணங் களும் இந்திராவின் அரிய குணங்களாகின. தேசப்பற்றும் சமூக சேவையும் அவளுடன் உடன் பிறந்த இயல்புகள். அன்பும் இரக்கமும் எளியவர்கள்பால் இயல்பாகவே தோன்ற ஆரம்பித்தன. பிறர் நலம், பார்வையில் கூர்மை, தீர்க்கமான முடிவுகள், பிடிவாத குணம்-இவை யாவுமே இந்திராவிடம் இளமை தொட்டு காணப்பட்ட தனித் தன்மைகள்.

இந்திரா இளவயதில் கூட எளிய உடைகள் உணவு, அமைதியான சூழ்நிலையே விரும்பி வரவேற்றார். நெஞ் சுரமும், வீரமும் அவளுக்குத் தாத்தா மோதியால் தந்த உரம். கற்பனை அவளது குடும்பச் சொத்து. சிப்பாய் விளையாட்டு சிறுமிக்குப் பிடித்த விளையாட்டு இயற்கை அவளது இனிய நண்பன். புத்தகங்கள் இந்திராவின் இதயங்கவர்ந்தவை. நடனமும், கலை, கலாச்சார நிகழ்ச்சி களும் அவளுக்கு மிகவும் பிடித்தமானவை. மலர்களையும் மாம்பழங்களையும் கண்டால் இந்திராவுக்குக் கொள்ளை ஆசை, கல்வியில் ஆர்வமும், கூர்ந்து கவனிக்கும் குணமும் இந்திராவுக்கே உரியவை.

படிப்பகம்

www.padippakam.com



இத்தனை குணங்களும் கொண்ட சிறுமி இந்திரா காந்திஜியின் ஆசிரமத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. சபர்மதி நதிக் கரையில் இருந்த அந்த ஆசிரமத்தில் இயற்கை எழிலும் அமைதியும் நிரம்பி வழிந்தன. அந்த இயற்கையும் அமைதியும் சிறுமி இந்துவின் இதயத்தைக் கவர்ந்து விட்டன. எளிமையான வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கங்கள், ஆரோக் கியமான சூழல், சுயவேலை செய்யும் முறைகள், தினமும் நடக்கும் பிரார்த்தனைகள் இவையெல்லாவற்றுக்கும் மேலாக, காந்திஜியின் கனிவும் அன்பும் ததும்புகின்ற இனிய பேச்சுக்கள் இந்திராவுக்கு புது அனுபவத்தை ஏற்படுத்தின.

முதலில் இவை புரியாமல் இருந்தாலும் விரைவில் அந்த சூழ்நிலை இந்துவுக்கு பழகிப் போக ஆரம்பித்தது. சுதந்திரமான சூழ்நிலையில் சுதந்திரமான எண்ணங் களுடனும் சுற்றி வந்தாள் சிறுமி இந்திரா. எளிமையும் இனிமையும் அங்குதான் இந்திரவுக்கு அறிமுகமாயின.

இந்நிலையில் நேருவின் தேசபற்றுமிக்க குடும்பம் தேச சேவையில் முழு மூச்சாக ஈடுபட்ட சமயத்தில் கமலா நேரு வின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. இதையெல்லாம் பெரிது படுத்தாத நேருவின் கடமையுணர்வு காரணமாக கமலாவும் நேருவிடம்தான் நோய் பற்றிக் கூறாமலேயே காலங்கடத்தினார். ஒரு நாள் நோய் தன் கொடிய உருவத்தைக் காட்டியது. நோய் காரணமாக கமலா மிகவும் பாதிக்கப்பட்டார். விளைவு அவரை மேலை நாட்டுக்கு மருத்துவ சோதனைக்கு அழைத்துச் செல்ல டாக்டர்கள் ஆலோசனை கூறினார்கள்.

முடிவு பெற்றோர்களுடன் இந்துவும் ஸ்விட்சர் லாந்துக்கு சென்றாள். 1926 ஆம் ஆண்டு ஸ்விட்சர்லாந்து சென்ற இந்திரா அதே ஆண்டில் ஜெனிவாவிலுள்ள பள்ளி யொன்றில் சேர்ந்தாள். அங்குதான் இந்திராவுக்குப்

www.padippakam.com



பிடித்த பனிமலைகள் இருந்தனவே! அது போதாதா இந்துவுக்கு?

நோயுற்ற தாய், தேச சேவையில் தந்தை, உடன் பிறந்தோர் எவருமில்லை. தனிமை இந்திராவைப் பிடித்துக் கொண்டது. இந்திராவுக்கும் தனிமை பிடிக்க ஆரம்பித்தது. இலகுவாகக் கிடைக்க கூடிய அறிவு நூல்கள் நண்பர்களாயின. கிடைத்த நேரத்தில் எல்லாம் நூல்களை படிப்பதிலேயே செலவிட்டாள். பொதுவாகவே விளையாட்டுகளில் அதிக ஈடுபாடு இல்லாத இந்திராவின் எண்ணம் பூராவும் கல்வியில் ஒன்றியது. எப்போதாவது கிடைக்கும் பொழுதையும் பனி படர்ந்த மலை ஓரங்களில் கழித்தாள்.விளையாட்டுக்களை விட தந்தையின் அருகாமையும், அனுபவங்களுமே பிரியதர்ஷினக்குப் பிரியமான பொழுது போக்குகள் ஆயின.

தந்தை தான் சென்ற இடங்களைப் பற்றியும் சந்தித்த நபர்களைப் பற்றியும் மகளிடம் கூறினார். சில விஷயங்கள் புரியும். பல விஷயங்கள் புரியா. ஆனாலும் ஆர்வத்துடன் கேட்டுக் கொள்வாள் இந்து. அறிமுகப்படுத்தப் படும் நண்பர்களை இன்முகத்துடன் நோக்கிப் பழகுவாள். ஸ்விட்சர்லாந்து வாசம் இந்திராவுக்கு பல புகழ் பெற்ற அறிஞர்களையும் பெருமக்களையும் இளம் வயதிலேயே சந்திப்பதற்கு வாய்ப்பளித்தது. இந்தச் சந்திப்புக்கள் வெறும் சந்திப்புக்களாக மட்டுமே அமைந்து விடவில்லை. எதையும் உன்னிப்பாகக் கேட்கவும், மனத்தில பதிந்தவற்றை வாழ்வில் பயன்படுத்தவும் இந்திரா கற்றுக் கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன. கமலா நேருவின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. ஓராண்டு இடைவெளிக்குப் பின் இந்தியா திரும்பிய இந்துவைப் புனா பள்ளி வரவேற்றது.

www.padippakam.com



பள்ளி நாட்கள் இன்பமாகவே அமைந்தன. பள்ளி நாட்களில் இந்துவின் மனதைக் கவர்ந்த கதை, வீரப் பெண்மணியான 'ஜோன் ஆப் ஆர்க்'கின் வீரவரலாறே யாகும். அக்கதையின் நாயகியான 'ஜோன்' தானே என்ற இந்துவின் கற்பனை சிறகடித்துப் பிறக்கும். ஜோனைப் போல குதிரையில் பறப்பாள். போர் புரிவாள். வீரசாக சங்களை நிகழ்த்துவாள். எல்லாம் கற்பனைதான் ஆனால் அதிலும் ஒரு நெஞ்சுரம் இருக்கும்.

ஓராண்டு கால இடைவெளி தாத்தா மோதிலாலின் போக்கிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆங்கிலேயரிடம் அவருக்கிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கை யையும் இழந்து முற்றும் 'சுதேசி'யாக மாறியிருந்தார்.

வெளிநாட்டுத் துணிகளைக்கூட நேரு குடும்பத்தினர் ஒதுக்கித் தள்ளிய காலகட்டம். சிறுமி இந்துவுக்கும் இந்தக் குணம் பற்றிக் கொண்டது. ஆடம்பரமான வெளிநாட்டு ஆடைகளை ஒதுக்கினார், எளிய முரட்டுக் கதராடையை விரும்பி அணிய ஆரம்பித்தாள். தன்னுடையவிளையாட்டுப் பொம்மைகளில்கூட சுதேசி பொம்மைகளை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை நெருப்பில் எறிந்தவள் இந்திரா.

சுதந்திரத் தீ நாடெங்கிலும் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தோம். தேசத் தலைவர்களுக்கு தொண்டர்களின் உதவி அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. இந்தத் தொண்டர் படையில் பெரியவர்களாக இருந்தவர்கள் மட்டுமன்றி சிறுவர்களும் பயன்படுத்தப்பட்டனர். அப்படிச் சேர்ந்த சிறுவர்கள் 'வானரப்படை'யினர் என்று அழைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு சிறுமி இந்திராவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்திராவும் தன்னுடன் இணைந்து செயலாற்றிய சிறுவர் களுடன் சேர்ந்து சுவரொட்டி ஒட்டுதல், தண்ணீர், மருந்து விநியோகம் ஆகியவற்றை கவனித்துக்கொண்டார்.

www.padippakam.com



தவிர இப்படையின் முக்கியமான பங்கு இரகசியக் கடிதங்களைத் தேச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலும், இரகசியச் செய்தி பரிமாற்றத்திலும் தங்கியிருந்தது. இந்திராவின் தலைமையில் இவை செவ்வனே நடந்தன.

1930 ஆம் ஆண்டில் ஆனந்த பவனத்தின் சரித்திரம் இந்திய சரித்திரத்துடன் இணைந்த பெரும் புகழ் வாய்ந்த நிகழ்ச்சி நடந்தது. காந்திஜியின் தண்டி யாத்திரையின் போது அவர் நேரு குடும்பத்தினரைச் சபர்மதி என்ற இடத்தில் சந்தித்தார். அப்போது நேரு குடும்பத்தினரின் தியாக மனமும் தேச பற்று உணர்வும் தாங்கள் வாழ்ந்த ஆனந்த பவனத்தைத் தேசச் சொத்தாக்கும் எண்ணத்தினை மோதிலால் வெளியிட்டார். ஆடம்பரமான அந்த அழகு மாளிகை சுயராஜ்ய பவனமாகியது.

தொடர்ந்து நேரு உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதுடன் ஒத்துழையாமை, சட்ட மறுப்பு போன்ற போராட்டங்களில் ஈடுபட்டார். கமலா நேருவும் கணவருடன் இணைந்து இப்போராட்டங்களில் ஈடுபட்டார். விளைவு இருவருமே கைது செய்யப்பட்டனர். ஆனாலும் இந்திரா சிறிதும் சளைக்காமல் வழக்கம்போல் தனது 'வானர சேனை சேவையை வெற்றிகரமாக நடத்தி வந்தாள்.

அப்போது ஒருநாள் மலைகலங்கினாலும் தன் நிலை கலங்காத மோதிலால் நேருவை நோய் தாக்கியது. மன உறுதி நோயை அடக்கியாண்டது. ஆனாலும் முதுமையின் பலவீனம் முடிவில் நோயின் பக்கமே ஆதரவளித்தது. அஞ்சாத சிங்கமாக வெள்ளை அரசுக்குச் சிம்ம சொப்பன மாக விளங்கிய அந்த முதிய இளைஞர் 1931 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆறாம் தேதி அருமை இந்துவையும் மறந்து மறைந்தார். சிறுமிக்கு இது பேரதிர்ச்சியாக அமைந்தது.

பெ—7

படிப்பகம்

www.padippakam.com



ஆனாலும் பள்ளிப்படிப்பு அவளை ஓரளவு தேற்றியது புனாவில் மெட்ரிக்குலேஷன் படித்துக் கொண்டிருந்த இந்திரா தன் ஓய்வு நேரங்களை வீணாகக் கழிக்கவில்லை, தனக்கு நேரம் கிடைத்த போதெல்லாம் சேரி வாழ் மக்களைச் சந்தித்தாள். அவர்களிடம் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பற்றி எடுத்துச் சொல்ல ஆரம்பித்தாள். வெள்ளையர் ஆட்சியில் மலிந்து கிடந்த மதுவகைகளின் தீமைகளைப் பற்றியும் அந்த ஏழைகளிடம் அச்சுறுத்தினாள். சுதந்திரத்தைப் பற்றியும், அண்ணல் காந்தியின் அஹிம்சை பற்றியும் எளிய மக்களிடையே அறிவு புகட்டும் வகையில் பேசினாள். ஏழை மக்களுக்கு தேவைப்பட்ட சேவைகளை தயங்காது செய்தாள். அந்த வயதிலேயே இந்திரா ஏழைகளுக்கு உற்ற நண்பனாகவும் எளியவர்களின் வாழ்வை மேம்படுத்தும் ஆசானாகவும் இருந்தது பாராட்டத் தக்கதேயாகும்.

பள்ளிப் படிப்புக்கு உரிய காலம் முடிந்தது. அடுத்து மேலே படிப்பதற்காக இந்திரா 1933 இல் ரவீந்தரநாத் தாகூரின் 'சாந்திநிகேதனுக்கு வந்தாள், சாந்தி நிகேதனின் இயற்கை எழில் கொஞ்சும் தூய்மையான சூழலில் அமைந்திருந்தது. இந்த சூழ்நிலையும், கல்வி முறையும் இந்திராவுக்கு மிகவும் பிடித்திருந்தன. பச்சைப் பசேலென்ற புல்வெளிகள், நீண்டு வளர்ந்திருந்த மரங்கள். பட்டுப் போன்ற மலர்கள் சுத்தமான சுவாசம் இவை சாந்தி நிகேதனின் சிறப்பம்சங்கள். இயற்கையை நேசிக்கும் இந்திராவின் மனது இவற்றுடன் ஒன்றியதில் ஆச்சரியமில்லை.

நிம்மதியும் அமைதியும் இந்திராவின் மனதில் இடம் பிடித்துக் கொண்டன. கல்வியில் மட்டுமன்றி ஆசிரம வாழ்க்கை போல இருந்த குருகுலத்தில் கலைகளையும் போதித்தனர். இயல்பாகவே கலைகளில் ஈடுபாடு கொண்ட இந்திரா தனக்கு மிகவும் பிடித்த மணிப்புரி நடனத்தை கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். இலக்கிய ரசனையுடன்

படிப்பகம்

www.padippakam.com



தாகூரின் கவிதைகளில் ஈடுபாடுடன் படிக்க ஆரம்பித்தாள் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் நூல்களையும் விரும்பிப் படித்தாள். நாடகங்கள், இசை நிகழ்ச்சிகளிலும் ஆர்வமுடன் பங்கெடுத்துக்கொண்டாள். ஆதனால் எந்தவித இடையூறும் அவளது கல்விக்கு ஏற் படாத வண்ணமும் பார்த்துக் கொண்டாள். இந்திராவின் இளமை ஆர்வங்களுக்கு நேருவின் கடிதங்கள் பெரும் ஊக்கமாக அமைந்து வந்தன.

இந்திராவின் கல்வி இடையில் தடைப்பெற ஒரு காரணமும் அமைந்தது. அன்னை கமலாவின் உடல்நிலை தான் அது. டேராடூன் சிறையிலிருந்த நேருவால் மனைவி யின் உடல்நிலைக்கு தகுந்த மருத்துவ ஏற்பாடுகளை செய்ய முடியவில்லை. மகள் இந்திராவுக்கு கடிதம் எழுதினார். வெளிநாடு செல்லவிருக்கும் மனைவிக்குத் துணையாக மகளை உடன் செல்லுமாறு அன்புக் கட்டளை யிட்டார். கமலாவுக்கும் கணவன் தன் பொருட்டு அரசியலை விட்டு வருவதில் சிறிதும் விருப்பமில்லை. முடிவு கமலா நேருவுடன் இந்திரா மட்டுமே ஜெர்மன் செல்வதென்று முடிவு செய்யப்பட்டது. 1935 ஆம் ஆண்டில் இருவரும் ஜெர்மன் சென்றார்கள்.

கமலா நேருவின் நாட்டுப் பணிகளில் மிகவும் குறிப்பிடத் தக்கது 'ஸ்வாம் சேவகன்' குழுவுக்காக இளைஞர்களையும் மாணவர்களையும் சேர்ப்பது. கல்லூரி களிலும், வீதிகளிலும் கமலா நேருவின் தேசபற்று மிக்க வீர உரைகளைக் கேட்டு இந்த இயக்கத்தில் சேர்ந்த இளைஞர்கள் அநேகர். அப்படி சேர்ந்தவர்களில் முக்கிய மானவர் பெரோஸ் காந்தி. அவர் அப்போது இலண்டனில் பொருளாதாரம் கற்றுக் கொண்டிருந்தார். கமலா நேரு ஜெர்மனுக்கு வந்தது அறிந்த பெரோஸ் கமலாவைக் காண விரைந்தார். பெரோஸின் வரவு இந்திராவின் சுமைகளைப் பெரிதும் குறைத்தது. இலண்டனுக்கு திரும்பிய பின்னரும் பெரோஸ் தன்னாலான உதவிகளை

www.padippakam.com



இந்திராவுக்கு செய்து வந்தார். ஆனாலும் கமலா நேருவின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏதும் காணப் படவில்லை. முடிவு நேரு வருவது அவசியமாயிற்று. வெள்ளை அரசும் ஓரளவு மனமிரங்கி நேருவை விடுதலை செய்தது. நேரு ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தார். இந்திரா வுக்கு ஓரளவுக்கு பொறுப்புக்கள் குறைந்தன.

ஸ்விட்சர்லாந்தின் பனி படர்ந்த மலைகளின் நடுவே அமைந்த கல்வி நிலையமொன்றில் இந்திரா தான் கல்வியைத் தொடர்ந்தார். இனிமையான இயற்கை, பனி குவிந்த மலை முகடுகள், தந்தையின் அருகாமை இந்திராவிற்கு நாட்கள் இனிமையாய் கழிந்தன. கமலா நேருவின் உடல் நிலையும் திருப்திகரமாகவே அமைந் திருந்தது. ஆனாலும் முற்றிலும் குணமாகி விடவில்லை.

இந்நிலையில் நேருவை இந்தியா திரும்பச் சொல்லியும், காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் படியும் தகவல் வந்தது. இக்கட்டான சூழ்நிலையில் சில நாட்கள் உருண்டன. கமலாவின் உடல்நிலை மோசமடைய ஆரம்பித்தது. எட்டு மாத கால மலைவாசல் காற்றுகூட கமலா நேருவின் நோயின்முன் மண்டியிட்டு விட்டது. 1936 ஆண்டு பிப்ரவரி இறுதியில் கமலா நேருவின் ஆத்மா பிரிந்தது. இந்திராவும் நேரும் தனித்துவிடப் பட்டனர். கவலை மேகங்கள் இருவர் மனத்தையும் சூழ்ந்து கொண்டன.

நேருவை காங்கிரஸ் மாநாடு அழைத்தது. கடமை வீரரான நேரு மனைவியின் அஸ்தியுடன் மட்டுமே திரும் பினார். இந்திராவின் மனநிலைக்கு மாற்றம் தேவை என்று கருதிய நேரு இந்திராவை இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புக்காக சேர்த்து விட்டார். இந்த இடமாற்றம் இந்திராவின் மனதில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியதுடன், ஒரு புதிய நட்புக்கும் வழி வகுத்தது.

www.padippakam.com



ஆம். இலண்டனில் படித்துக் கொண்டிருந்த பெரோஸ் காந்தி பழைய நட்பை மறக்காமல் புதுப்பித்துக் கொண்டார். பெரோஸின் வரவு இந்திராவின் இளைய மனதிற்கு தெம்பாகவே அமைந்தது. நேரு குடும்பத்தினரிடம் இளமை முதலே அதிக தொடர்புகளை வைத்திருந்த பெரோஸின் இதமான பேச்சும், ஆதரவான செயல்களும் இந்திராவிற்கு பிடித்துப் போயின. ஒரு நல்ல நட்பு உருவாக இது உதவியது. இந்திரா சங்கோஜி என்று அறிந்தும், பெரோஸ் வலிய வந்து பேசியும், உதவியும், இந்திராவுக்கு துணையாக நின்றார். இந்திராவின் அரிய குணங்கள் பெரோசை பெரிதும் கவர்ந்தன. அவர் இந்துவை உள்ளன்போடு விரும்ப ஆரம்பித்தார்.

ஆனால் இந்திரா?

இந்திராவுக்கு இளமை வாலிபத்தின் இன்பங்களைப் பற்றி அறிவிக்கவில்லை. வாழ்க்கையின் உண்மைகளையும் நாட்டிற்கு தேவைப்பட்ட நன்மைகளையும் பற்றியும் சிந்திக்கவே தூண்டியது. இந்த நிலையில் கல்வியும், அறிஞர் கருத்துப் பொதிந்த நூல்களும் மட்டுமே இந்திராவின் குறிக்கோளாயின. பெரோஸிடம் இந்திராவுக்கு ஏற்பட்டது. ஒரு நல்ல நட்பாக மட்டுமே இருந்தது. இந்நிலையில் பெரோஸின் நேசமோ பாசமோ இந்திராவைப் பாதிக்கவில்லை.

தொடர்ந்து இந்திரா தன் கருமமே கண்ணாக இருந்தார். பலவித நட்பு இயக்கங்களிலும், அறிவு இயக்கங்களிலும், கல்வி அமைப்புகளிலும் தன்னை இணைத்துக் கொண்டார். பெரும் பொழுதை அரசியல் அறிவை வளர்ப்பதிலும், அது தொடர்பான தலைவர் களுடனும், அறிஞர்களுடனும் விவாதிப்பதிலும் செலவிட்டார்.

பல பொதுச்சேவை, சமூக சேவை அமைப்புகளிலும் இந்திராவின் சேவை ஈடுபடுத்தப் பட்டது. இந்தியக்

www.padippakam.com



கழகம் போன்ற நல்லெண்ண அமைப்புகளிலும் சேர்ந்தாள். அங்கு பல நற்காரியங்களை நடத்துவதற்காக நன்கொடைகளை வசூலித்து உதவினார். இந்திராவின் நல்ல நோக்கங்கள், கடின உழைப்பு, பழகும் முறை ஆகியவை அவரது முயற்சியில் பெரும் வெற்றியை ஈட்டித் தந்தன.

கடின உழைப்பு, இங்கிலாந்தின் குளிர், தாயின் பிரிவு தந்தை அருகில் இல்லாதது இவை யாவும் இந்திராவின் உடல்நிலையைப் பாதித்தன. முடிவில் சளித் தொல்லை முற்றி இந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். தனியாக மருத்துவமனையில் இருந்த இந்திராவை கவனிக்க தகுந்த ஆள் இருக்கவில்லை. அப்போது பெரோஸ் தன்னுடைய வேலைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, சிரமம் பாராது இந்திராவுக்கு துணையாக மருத்துவ மனையில் தங்கினார். இரவு பகல் பாராது கண்ணுங் கருத்துமாக இந்திராவை கவனித்துக் கொண்டார்.

பெரோஸின் தூய்மை மிக்க கவனிப்பு இந்திராவை விரைவில் குணமடையச் செய்தது. அவரின் இந்த அன்பு தான் இந்திராவின் மனதைக் கவர்ந்தது. இருவர் இதயங்களும் இணைவதற்கு இது ஒரு நல்ல ஆரம்பமாக அமைந்தது. இந்த கால கட்டத்தில்தான் ஹிட்லரின் ஆட்சியின் கீழ் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

உலகப்போரின் விளைவாக 1940 ஆண்டு பெரோஸ், இந்திரா கல்வி தடைப்பட்டது. இருவரும் இந்தியா திரும்ப வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை தோன்றியது. உலகம் முழுவதும் சூழ்ந்திருந்த போர் மேகங்களின் கீழ் இருவரும் கப்பலில் இந்தியாவுக்கு திரும்ப முடிவு செய்தனர்.

வழியில் கப்பல் தென்னாப்பிரிக்காவை அடைந்தது. இந்திராவைப் பற்றி அறிந்திருந்த டர்பன் நகர மக்கள்

www.padippakam.com



இந்திராவை நகர சபை கூட்டமொன்றுக்கு அழைத்தனர். இந்திராவும் மறுக்காமல் ஒத்துக் கொண்டாள். அங்கிருந்த கறுப்பு இன மக்கள் வெள்ளையரால் இழிவாக நடத்தப் படுவதைக் கண்டு மனம் கொதித்தாள். இந்திராவின் கன்னிப் பேச்சு நகரசபை கூட்டத்தில் நடந்த போது, வெள்ளையரின் ஆதிக்க வெறியை எதிர்த்தும் நாட்டுப் பற்றைத் தூண்டியும் அவரது பேச்சு ஆபிரிக்க மக்களை ஊக்குவித்தது.

பயணம் தொடர்ந்த போது பெரோஸ்—இந்திரா இதயங்கள் ஒருமித்து இருந்தன. இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர். திருமணம் பற்றியும் முடிவு செய்தனர். இருவரும் ஒரே பாதையில் இணைய முடிவு செய்தனர்.

இந்தியாவிற்கு வந்த இருவரும் தங்கள் கருத்துக்களை பெரியவர்களிடம் கூறிய போது சம்மதம் தரப்பட்டது. 1942 ஆண்டு மார்ச் மாதம் இருபத்தாறாம் நாளில் இருவரும் இல்லறத்தில் இணைந்தனர். பார்ஸி இனத்தை சேர்ந்த பெரோஸ் இந்திராவை இந்து முறைப்படி மணந்து கொண்டார்.

அந்த ஆண்டின் இந்திய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி 'வெள்ளையனே வெளியேறு' என்ற பம்பாய் காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானம். இதைத் தொடர்ந்து வெள்வள அரசு இந்தியாவின் தேசிய தலைவர்கள் நாடு முழுவதும் கைது செய்யத்தொடங்கியது. இரவோடு இரவாக பலர் சிறையில் தள்ளப்பட்டனர். காந்தி உட்பட பலரை ஆங்கில அரசு சிறையில் தள்ளியது. நேருவும் இதற்கு விதி விலக்கல்ல. எந்தவித விபரங்களும் வெளியே வராமல் தலைவர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நாட்டின் நன்மை கருதி சில தேசிய வாதிகள் தலைமறைவாக வேண்டிய சந்தர்ப்பம் ஏற் பட்டது. நாட்டின் நலன் கருதி பெரோஸ் தலைமறைவா

படிப்பகம்

www.padippakam.com



கினார், இந்திராவின் கடமைகள் அதிகரித்தன. இரகசிய அமைப்புகளை ஏற்படுத்தி காங்கிரஸ் வீரர்களுக்கு உதவி வந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் தேசிய பற்றுமிக்க ஒரு கல்லூரியிலிருந்து இந்திராவுக்கு அழைப்பு வந்தது. அக்கல்லூரியில் மூவர்ண கொடியினை ஏற்றி வைக்குமாறு இந்திரா கேட்டுக் கொள்ளப்பட்டார். இந்திராவும் அப்பொறுப்பை விருப்புடன் ஏற்றுக் கொண்டார். விஷயமறிந்த போலீசார் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். மூவர்ணக் கொடியை கையில் பிடித்துக் கொண்டிருந்த மாணவனின் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர். இந்திராவுக்குள் ஆவேசம் பொங்கியது, பாய்ந்து ஓடிச் சென்றார். கொடியைத் தாங்கிக் கொண்டார். போலீசாரின் ஆத்திரம் அதிகரித்தது தடியடிப் பிரயோகம் சகலருக்கும் பொதுவாகியது. இந்திராவையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

இந்திரா காயமடைந்து வீழ்ந்தாள். இந்திராவின் துணிச்சல் மிக்க சாதனை பலராலும் பாராட்டப்பட்டது. இது இந்திராவிற்கு மேலும் மேலும் சுதந்திர வேட்கையை ஊட்டியது.

தொடர்ந்து அலகாபாத்தில் நடந்த கூட்டமொன்றில் பேச ஒத்துக் கொண்டார். கூட்டத்திற்கு இந்திரா வந்ததுமே போலீஸ் அதிகாரிகள் மிரட்டவும், அச்சுறுத்தவும் ஆரம்பித்தனர். அதிகார மிரட்டல்களை புறக்கணித்த இந்திரா அஞ்சாத பெண் சிங்கமாக மேடையேறி வீர முழக்கமிட ஆரம்பித்தார்.

வெள்ளை அதிகாரிகளின் துப்பாக்கிகள் இந்திராவை குறி பார்க்க ஆரம்பித்தன. கூட்டம் கொந்தளிப்புடன் கோஷமிட்டது. அப்போது எதிர்பாராமல் வந்து நின்றார் பெரோஸ். துப்பாக்கிக்கும் இந்திராவுக்கும் இடையில் நின்ற பெரோஸினால் இந்திராவின் உயிர் காப்பாற்றப் பட்டது. ஆனால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு சிறைவாசம் இருவருக்கும் விதிக்கப்பட்டது. இந்திரா நைனி சிறையில் இருந்தார்.

நைனி சிறைவாசம் இந்திராவுக்கு நரகமாக இருந்தது. ஆனாலும் நாட்டின் நிலையை நினைத்தபோது இது ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை. இந்திரா அங்கு மூன்றாந்தர கைதியாகவே நடத்தப் பட்டார். நல்ல உணவோ, ஆரோக்கியமான சூழலோ அன்றில் அறிவுப் பசிக்கு நூல்களோ கிடைக்கவில்லை. நேருஜியின் ஏற்பாட்டின்படி இந்திராவுக்கு அனுப்பப்பட்ட மாம்பழங் களைக்கூட சிறையதிகாரிகள் தின்று தீர்த்து விட்டனர். ஆனால் எந்தவித துன்பங்களையும் நாட்டின் பொருட்டு சுமக்கத் தயாராக இருந்த இந்திராவின் மன உறுதியின் முன் இவை மிகச் சாதாரணமாக அமைந்தன.

சிறையின் சுகாதாரமில்லாத சூழ்நிலை இந்திராவின் உடல் நிலையை பெரிதும் பாதித்தது. ஆனால் சிறை யதிகாரிகள் இது குறித்து எந்த மருத்துவ நடவடிக்கை களையும் மேற்கொள்ளவில்லை. இந்த விஷயம் மக்களுக்கு தெரிய வந்தபோது பொது மக்கள் கொதித்தெழுந் தார்கள். இது இந்திராவை மருத்துவ சோதனைக்குட் படுத்த சிறையதிகாரிகள் ஏற்பாடு செய்வதற்கு காரண மாக அமைந்தது. ஆனால் சோதனையின்முன் எழுதித் தரப்பட்ட மருந்துகள் எவையும் இந்திராவிற்கு தரப்பட வில்லை.

இந்திரா சிறையிலும் சோம்பி இருக்கவில்லை அங்கிருந்த பெண் குற்றவாளிகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தந்ததுடன், சிறிய கைத் தொழில்களையும் சொல்லித் தந்தார்.

மேலும் உடல் நிலை மோசமடைந்ததால் ஒன்பது மாத கால சிறைவாசத்தின் பின் இந்திரா விடுவிக்கப் பட்டார்,

www.padippakam.com



தண்டனைக் காலம் முடிந்த பெரோசும் விடுவிக்கப் பட்டார்.

இந்திரா தாய்மை அடைந்தார். 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் தேதி ஆண் குழந்தைக்கு தாயானார். தம்பதிகளின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தாய் கமலாவின் பெயரையும், தந்தை ஜவஹர் பெயரையும் இணைத்து பிள்ளைக்கு ராஜிவ் ரத்தன் என்று பெயர் சூட்டி மகிழ்ந் தனர். நேருஜி அப்போது சிறையில் இருந்தார்.

நேருஜி விடுதலையாகித் திரும்பினார். இது இந்திரா கணவனுடன், அவரது லக்னோ வீட்டிற்கு செல்லுவதற்கு சந்தர்ப்பமானது. மகளைப் பிரியும் துயரை தாங்கிக் கொண்டு நேரு சம்மதம் தந்தார்.

1946 ஆம் ஆண்டு இந்திரா இரண்டாவது ஆண் குழந்தைக்கு தாயானார். சஞ்சய் பிறந்து ஓராண்டு காலத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது.

சுதந்திரப் போரில் இணைந்திருந்த தலைவர்கள் சிலருக்கிடையில் கருத்து வேற்றுமைகள் எழுந்தன.

அதன் விளைவு இந்து-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமைக் குலைவும், அமைதியின்மையும் நிலவியது. அந்த சந்தர்ப்பத்தில் இந்திரா நகரின் பல பகுதிகளில் சுற்றி வந்து பாதிக்கப் பட்டவர்களை காப்பாற்றினார். தன் வீட்டிலேயே தங்க இடமும், அகதிகளுக்கு உணவும் அளிக்கவும் ஏற்பாடு செய்தார். இந்து-முஸ்லிம் பாகு பாடின்றி அனைவருக்கும் உதவி வந்தார். இந்த சேவை உள்ளமும், ஒருமைப்பாட்டு உணர்வும் மகாத்மாவின பெரிதும் பாராட்டப்பட்டன.

இலக்னோவில் இருந்தாலும் அரசியல் சூழ்நிலைகளும், தந்தைக்கு தேவைப்பட்ட உதவிகளும், இந்திராவை அடிக்கடி டெல்லிக்கு வரவழைத்தன. இது இந்திராவுக்கு பெரும் சிரமமாக இருந்தன. இதனால் இந்திரா குடும்பத்

படிப்பகம்

www.padippakam.com



துடன் நேரு வீட்டிலேயே தங்கினார். பெரோஸ் வளர்ந்த விதமும், நேருவின் பழக்க வழக்கங்களும் முற்றிலும் மாறுபட்டிருந்தன. இது அவர்களுக்கிடையில் இடை வெளியைத் தோற்றுவித்தது. இந்திராவின் நிலையோ சொல்ல முடியாது. இதற்கிடையில் பெரோஸ் பாராளு மன்ற உறுப்பினராக தேர்தலில் வெற்றி பெற்றார். இடையில் நடந்த சில சம்பவங்கள் பெரோஸ்-இந்திரா மண வாழ்வில் திரையாக அமைந்தன. பெரோஸ் மனைவியைப் பிரிந்து சென்றார்.

1949 ஆம் ஆண்டு இந்திராவின் அரசியல் ஈடுபாட்டை அதிகரித்தது. தந்தையுடன் அமெரிக்கா சென்று வந்த அவர் அதிக ஈடுபாட்டுடன் அரசியலில் உதவி வந்தார்.

1955 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பெரு விருப்பத்தின்படி தன்னை அரசியலில் இணைத்துக் கொண்டார் இந்திரா. அந்த ஆண்டில் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாடு இதற்கு வழி வகுத்தது. இந்திரா காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தொடர்ந்து தந்தையுடன் பல நாடுகளுக்குச் சென்று வந்தார். அரசியல் தலைவர்களை சந்தித்துப் பேசினார். புதிய விஷயங்களை கற்றுக் கொள்ளவும் அரசியல் அநுபவத்தை பெறவும் இவை உதவின.

1959 ஆம் ஆண்டில் அகில இந்திய காங்கிரஸின் தலைமைப் பதவி இந்திராவை நாடி வந்தது. தன்னுடைய நாற்பத்தி இரண்டாவது வயதில் டாக்டர் அன்னி பெசன்ட், கவிக்குயில் சரோஜினி தேவி, திருமதி. சென்குப்தாவை தொடர்ந்து நான்காவது பெண்ணாக காங்கிரஸ் தலைமைப் பீடத்தை அலங்கரித்தார்.

ஓராண்டு ஓடிப் போனது. அப்போதுதான் அந்தப் பேரிடி வந்தது. பெரோசின் மறைவுதான் அந்தச் செய்தி.

படிப்பகம்

www.padippakam.com



இந்திரா இதயங் கலங்கினார். ஆனால் தந்தை நேரு ஒரு தாயாகவும் அல்லவா இருந்தார். குழந்தைகள், நேரு, கடமைகள்- இவை இந்திராவின் மனப்புண்ணை ஆற்றின· கால வெள்ளத்தில் கடமைகளில் மூழ்கிப் போனார்.

தொடர்ந்து 1962 இல் சீனப் போர் பண்டித நேருவின் உடல் நிலையை பாதித்தது. உள்ள வலிமையுடன் வெற்றி பெற்றாலும்கூட நேருவின் உடல் வலிமை குன்றியது. 1964 இல் இந்திராவின் பக்கபலமாக நின்ற அருமைத் தந்தை மறைந்தார்.

நேருவிற்கு அடுத்து சாஸ்திரி பிரதமர் பதவியேற்றார். குறுகிய கால பதவியில் சாஸ்திரியின் மறைவு அப்பதவிக்கு பொருத்தமானவராக இந்திராவையே தேர்ந்தெடுத்தது.

1966 இல் பிரதமரான இந்திராவை அடுத்து வந்த பொதுத் தேர்தலும் ஆதரித்தது. மூன்றே ஆண்டுகளில் இந்திய பொருளாதார நிலையில் பெரும் திருப்பு முனையை கொண்டு வந்த பெருமை இந்திராவிற்கே உரியது. 1969 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்த பதினான்கு வங்கிகளும் தேசிய மயமாக்கப்பட்டன. தனியார் கையில் உருண்ட பணம் பொதுச் சொத்தாக்கப் பட்டது. ஏழைகளை வாழ்விக்க சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் ஊக்குவிக்கப் பட்டன.

மன்னர்களுக்கான மானியங்கள் நிறுத்தப்பட்டன. பெண்களுக்கு வீட்டுத் தொழில்களுக்கு ஊக்கம் தரப் பட்டது. பாட்டாளியும், ஏழை பாளையும் இந்திராவை பாராட்டத் தொடங்கினர். ஆனால் மூத்த தலைவர்கள் இந்திராவின் புதிய பொருளாதாரக் கொள்கையை குறை கூறினார்கள்.

எழுந்த எதிர்ப்புக்கள் எழுச்சியைத் தந்தன. நாடு புதிய பாதையில் பீடு நடை போடத் தொடங்கியது.

1971 இல் பொதுத் தேர்தலில் மீண்டும் இந்திராவின் தலைமை நிர்ணயிக்கப்பட்டது. அதே ஆண்டில் கிழக்கு

படிப்பகம்

www.padippakam.com



வங்காளத்தில் போர் மேகம் சூழ்ந்தது. இந்திராவின் துணிச்சலான முயற்சிகள் 'பங்களா' தேசத்தை உருவாக்கியது. அகதிகள் அரவணைக்கப் பட்டார்கள். பாரதம் தனது மிக உயரிய விருதான 'பாரத ரத்னா'வை இந்திராவுக்கு அளித்தது. மெக்சிக்கன் அகாடமி விருதும் வழங்கப் பட்டது.

இது இந்திராவின் ஆக்கத்திற்கு ஊக்கம் ஊட்டியது. இருபது அம்சத் திட்டங்கள், அதிவேகமாக அமுலாக்கப் பட்டன. உணவு உற்பத்தி, பொருளாதாரம், நலிந்தோர் நலம், கிராம மேம்பாடு, ஆகியவை ஓங்கி வளர ஆரம்பித்தன. விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் சிறந்தோங்கியது. பெண்கள் நிலை உயர்வதற்கு பொற்காலம் உருவானது.

சட்டம், பொருளாதாரம், கல்வி, உடல் நலம் மற்றும் சுகாதாரம், தொழிற்கல்வி, தங்கும் விடுதிகள், வேலை வாய்ப்பு சுயதொழில், மற்றும் பயிற்சி முகாம்கள் போன்ற துறைகளில் பெண்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்ற வகையில் அமைப்புக்கள் ஏற்படுத்தப் பட்டன.

ஆனாலும் வளர்ச்சிப் பாதையில் ஒரு தடைக் கல்லாக சோதனைக் காலம் குறுக்கிட்டது. நாட்டில் அரசு கொள்கைசளை எதிர்த்து அதிருப்தி கிளம்பியது. எதிர்க் கட்சிகள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்திராவின்மீது வழக்கு தொடர்ந்தன. இந்திரா நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி சின்ஹா இந்திய சரித்திரத்தில் இன்றியமையாத தீர்ப்பை கூறினார். உச்சநீதி மன்றத்தில் செய்த அப்பீலுக்கும் இந்திரா வரவேற்காத தீர்ப்பே வழங்கப் பட்டது. நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டது,

அரைகுறையாக விடப்பட்ட அரசியல், நிர்வாக பொறுப்புகளுடன் அடுத்த தேர்தலை 1977 இல் சந்தித்தார் இந்திரா. காங்கிரஸ் கட்சியின் வரலாறு காணாத

www.padippakam.com



தோல்வி. ஜனதாவை ஆட்சியில் அமர்த்தியது. இந்திராவின் பொது வாழ்க்கை கறைபடிந்தது என்று குற்றஞ்சாட்டப் பட்டு கைது செய்யப்பட்டார். இதனை விசாரணை செய்ய 'ஷா கமிஷன்' நிர்மாணிக்கப் பட்டது. அந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் அவர் விடுதலை செய்யப் பட்டார்.

அப்போது ஆட்சியில் இருந்த ஜனதா தலைவர் பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். தொடர்ந்து நீடிக்க முடியாமல் அக்கட்சியில் உட்பூசல் கிளம்பியது. அதே ஆண்டில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தோல்விகளில் துவண்டு விடாத இந்திரா மீண்டும் ரேபய்லி, மேடக் ஆகிய் இரு இடங்களில் போட்டியிட்டு 1980 ஆண்டு ஜனவரியில் நடந்த தேர்தலில் பெரும் வெற்றியீட்டினார்.

முப்பத்து மூன்று கால இடைவெளிக்கு பின் ஆட்சியில் அமர்ந்த இந்திரா சந்தித்த பிரச்னைகள் பலப்பல.

அந்த ஆண்டு ஜுன் மாதம் தனது இளைய மகன் சஞ்சய் விமான விபத்தில் மறைந்த துயரம்கூட தன் கடமையை பாதிக்காது செயலாற்றினார் இந்திரா.

பிரச்சனைகளின் பரிமாணங்கள் அதிகரித்தன. அஸ்ஸாமில் பிரச்சனை, விவசாயிகள் கிளர்ச்சி, பீஹாரில் வெள்ளம், அகாலி தள கோரிக்கைகள் ஆனாலும் கலங்காது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றார்.

செயற்கை கோள் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன. தொலைகாட்சி செய்திக் கோள்கள், விண்வெளிப் பயணங் கள், அணுமின் சாதனைகள் அனைத்தும் இந்திய மண்ணில் அரங்கேறின.

அண்டை நாடுகளுடன் நல்லுறவு நூளக விளங்கிய இந்தியா சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் உலக நாடுகள் அனைத்திடமும் வலியுறுத்தியது.

www.padippakam.com



நட்பு நாடுகளை நேசக்கரங்களுடன் வரவேற்று 1982 ஆம் ஆண்டில் ஆகிய விளையாட்டு போட்டியையும், 1983 இல் அணி சேரா நாடுகளின் மாநாட்டையும் வெற்றி கரமாக நடத்திக் காட்டிய பெருமை இந்திராவையே சேரும்.

உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு அதிகரித்துக் கொண்டே போனது. வல்லரசு நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவின் வலிமைக்கும் மதிப்பளிக்கப்பட்டது. வளர்ந்து வரும் நாடுகள் இந்திராவின் ஆலோசனையை பெற ஆரம் பித்தன. இந்தியாவின் தலைமையை ஆதரித்தன. அணு ஆயுத உற்பத்தியை அருமையாக விமர்சித்த இந்திரா அமைதியையும், நட்பையும் வரவேற்றார்.

நாடு நல்லதொரு எதிர் காலத்தை நோக்கி நடை போட ஆரம்பித்தது.

1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முப்பதாம் தேதி புவனேசுவரில் பேசிய இந்திரா "தேச சேவையில் எனக்கு மரணமே நேர்ந்தாலும் மகிழ்ச்சியடைவேன். எனது ஒவ்வொரு துளி ரத்தமும் இந்நாட்டின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் ஒற்றுமைக்காகவும் பாடுபடும்" என்று முழங் கினார்.

எண்ணமே வாழ்க்கையாகும்.

மறுநாள்......

அக்டோபர் முப்பத்தியொன்று.

இந்திரா பற்றிய திரைப்படத்தை தயாரிக்கும் குழு தாயராக நின்றது.

மஞ்சள் நிறப்புடவையுடனும் மகிழ்ச்சி பூத்த முகத் துடனும் சப்தர்ஜங் இல்லத்திலிருந்து அக்பர் தெரு அலுவலகத்துக்கு வருவதற்கு தோட்டத்தை கடந்து கொண் டிருந்தார். அப்போது தான் அந்த சம்பவம் நடந்தது. காலை மணி 9.20.

www.padippakam.com



தோட்டாக்களின் சப்தத்தை தொடர்ந்து. மஞ்சள் நெஞ்சில் சிவப்பு பூக்கள் பூத்துக் கொண்டிருந்தன.

ஆம். இந்திரா சுடப்பட்டார்.

கருணை ததும்பும் ஒரு ஜோடிக் கண்கள் சுட்ட அக்காவலாளியை ஏறிட்டு பார்த்தன.

"நீயா?" அந்தப் பார்வை. நிலைத்தே விட்டன.

மருத்துவ முயற்சிகள் தோற்றுப் போயின. முதல் நாளின் முழக்கம் நிரூபிக்கப்பட்டது.

"வரலாறு படிப்பதை விட வரலாறு சமைப்பதே வாழ்க்கையின் சிறப்பு" என்ற நேருவின் வாக்கு நிலையாக் கப்பட்டது.

பதினெட்டு ஆண்டுகள் சகாப்தம் படைத்த. இந்தியா என்கிற இந்திரா பதினாறு குண்டுகளுக்கு பலியானார்.

இந்தியாவின் இணையற்ற "ஜோன் ஆப் ஆர்க்". எழுபது கோடி மக்களின் இதயங்கவர்ந்த தலைவி. மலை வாழ் மக்களின் மனங்கவர் மாதா.

பழங்குடி மக்களின் பிரியத்திற்குகந்த பெண்மணி. நாட்டு நலம் காப்போரின் நம்பிக்கை நட்சத்திரம். உலகப் புகழ் பெற்ற பெண்மணி என்று அமெரிக்க 'கேலப் வாக் கெடுப்பு' நிரூபித்த் ஒரே பெண்மணி. அன்னை இந்திரா அமரர் இந்திரா ஆனார்.

இந்திரா என்கிற சந்தன மரத்தின் சாம்பல் சுவடுகள் இமயமலை முகடுகளில் இருந்து சொல்லுகின்ற சேதிஎன்ன?

"நாம் மொழியில் மாறுபட்டிருக்கலாம். மதத்தால் வேறுபட்டிருக்கலாம். நிலத்தால் கூறுப்பட்டிருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் இந்தியர்." ஆம் நாம் அனைவரும் இந்தியர் என்பதே அமரர் இந்திரா நமக்கு உணர்த்திச் சென்றுள்ள உண்மையாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# கலைச்சுடர் ருக்மணி தேவி அருண்டேல்

ஐந்தறிவுள்ள உயிர்களைக் கூட தன் வசப்படுத்தி மகிழ்விக்க வல்லது இசை. இசையை ஆதாரமாக கொண்டு பிறந்தது நடனம். இந்தக் கலைகள் மனித மனத்திற்கு இயற்கையான, நிலையான நிம்மதியைத் தரவல்லன. இக் கலைகள் நம் கண்களையும், காதுகளையும் நனைக்கும் போதே இதயத்தையும் குளிர்வித்து விடுகின்றன. கலை தெய்வீகமானது. மனதை ஒருமைப்படுத்தவல்லது. ஆன்மாவுக்கு உயிரோட்டம் வழங்குவது. காந்தர்வ வேதம் எனப்படும் கலைகள் யாவுமே உற்சாகம் தருபவை. அதிலும் குறிப்பாக பாரதக் கலையை ஐந்தாவது வேதம் என்றே வழங்குவார்கள். இவை நமது பண்பாட்டுடனும் பாரம் பரியத்துடனும் மிகவும் நெருக்கமான பிணைப்புடையன. இத்தகைய பிணைப்பு காலங்களை கடந்து இக்கலைகள் தோன்றிய நாள் முதலே நம்மோடும் நம் மண்ணோடும் வாழ்ந்தவை; வாழ்ந்து வருகின்றவை.

இத்தகைய பெருமை பெற்ற நமது கலைகளை வளர்த் தவர்கள், அதற்காகப் பாடுபட்டவர்கள் பலர். மெல்லிய இயல்புகளும், கலை நயமிக்க உள்ளமும் கொண்டவர்கள் பெண்கள் என்றால் மிகையாது. அதனால் கலையின்பால் இயல்பாகவே அவர்களுக்கு ஈடுபாடு இருப்பதில் வியப்மேது மில்லை. அந்த ஈடுபாடு அளவு கடந்து வியாபித்து தன்

பெ—8

www.padippakam.com



வாழ் நாளை அதற்காகவே அர்ப்பணித்த சாதனையாளராக ஒரு பெண்மணியைத் தமிழகம் பெற்றிருப்பது பெரும் பேறாகும். இந்த மண்ணில் ஒரு கலைக்கூடத்தை அமைத்த பெருமையும் அவரையே சாரும். அவர்தாம்... ருக்மணி தேவி அருண்டேல்.

பிறக்கும் போது மறக்க முடியாத வகையில் பிறந்தவள் ருக்மணி. நான்காண்டுகளுக்கு ஒரு முறை மலரும் லீப் வருடத்தில் பெப்ரவரி மாதம் இருபத்தொன்பதாம் தேதி 1904 ஆம் ஆண்டு பிறந்தவள். பிற்காலத்தில் ஒளிமயமாகப் பன்முனைப்புடன் பல துறைகளில் இவள் விளங்குவாள் என்ற எதிர்பார்ப்பு நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் ருக்மணி (ஒளிமயமான) என்று பெயர் சூட்டப்பட்டாள். மதுரையைச் சேர்ந்த நீலகண்ட சாஸ்திரிக்கும் சேஷம்மாளுக்கும் ஆறாவது பிள்ளையாகப் பிறந்தவள் ருக்மணி.

எட்டுக் குழந்தைகளுக்கு இடையில் பிறந்தாலும் இவள் அறிவினால் எட்டாத தொலைவில் நின்று நிலைப்பாள் என்று அப்போது யாருமே எண்ணவேயில்லை. தந்தையோ வேத, இலக்கியங்களில் சிறந்து விளங்கினார். தாயார் சிறந்த இசை ஞானம் மிக்கவர். நூறு வயதுக்கும் மேல் வாழ்ந்த சேஷம்மாள் அந்த வயதிலும் ராகங்களை இனம் கண்டு கொள்ளவும், சுரம்பிரித்து பாடவும் வல்லவர் என்பதே இதற்குச் சான்றாகும்.

பெற்றோரிடம் இயல்பாகவே காணப்பட்ட கலை நுணுக்கங்களும் கலை ஆர்வமும் ருக்மணியிடமும் காணப்பட்டதில் வியப்படையில்லை. இளமை முதலே அவளை ஆட்கொண்டிருந்த கலை என்னும் அம்சம் பலகோணங்களில் வெளிப்பாக ஆரம்பிக்கும் காலமும் கனிந்தது. சித்திரத்தில் அதிக ஊக்கம் காண்பித்தார். இசைக்கு அதிக முக்கியத்தும் தந்து அதில் ஈடுபட விரும்பிய ருக்மணியின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது 1920 ஆம்

www.padippakam.com



ஆண்டு. 1919 இல் தந்தை நோய்வாய்பிடடு மறைந்து போனார். சாத்திர கட்டுப்பாடுகளையும் சமுதாய சட்டங் களையும் மீறி 1920 ஆண்டு ருக்மணி அருண்டேல் என்ப வரை மணந்து கொண்டார். அப்போது சென்னை பிரம்ம ஞான சபையை நிர்மாணிப்பதில் இறங்கியிருந்தவர் டாக்டர் அன்னி பெசன்ட் அமையார். அவருடன் இணைந்து பணியாற்றிய ருக்மணிக்கு டாக்டர் **George Sydney Arundale** என்பவரது அறிமுகம் கிடைத்தது. டாக்டர் அருண்டேல் இங்கிலாந்தைச் சேர்ந்த கல்வியாளர். கலைகளில் அதிக நாட்டம் கொண்டிருந்தவர். அறிவிற் சிறந்த அருண்டேலை ருக்மணி முதன் முதலாகச் சந்தித்த போது அவளுக்கு வயது ஒன்பது. அன்பும், கனிவும், நகைச் சுவை உணர்வும் நிரம்பிய அருண்டேல் ருக்மணி தேவி யிடம் உறைந்து கிடந்த ஆற்றலையும், அறிவு வளத்தை யும் அடையாளம் கண்டு கொண்டார்.

இந்திய கலாச்சாரத்திலும், ஆன்மீக உணர்வுகளிலும் தீவிர நம்பிக்கை கொண்டிருந்த அருண்டேல் ருக்மணியிடம் காணப்பட்ட கலை, கலாச்சாரம், அன்பு, அறிவு நிரம்பிய உள்ளத்தை நேசித்தார். இதை வெளிப்படையாகக் கூறிய போது பூகம்பம் வெடித்த உணர்வே ஏற்பட்டது! காலங் காலமாக கட்டுதிட்டங்களுக்குட்பட்டு வந்த ஒரு குடும் பத்தைச் சேர்ந்த' பதினாறு வயது சிறுமிக்கும் அந்நிய நாட்டைச் சேர்ந்த வேறு கலாச்சாரத்தையும் பழக்க வழக் கங்களையும் கொண்ட ஒரு நாற்பது வயது ஆணுக்கும் திருமணமா? என்று சென்னை நகர் வாழ்ந்த பொதுமக்கள் மட்டுமன்றி அறிவின் சிறந்தோரும் எள்ளி நகையாடினர். ஆனால் அந்த வயதிலேயே சுயமாக சிந்தித்து முடி வெடுக்கும் திறமை பெற்றிருந்த ருக்மணி பல எதிர்ப்பு களுக்கிடையே அருண்டேலின் இந்த முடிவை ஏற்றுக் கொண்டார்.

திருமணத்தின் பின் பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு பொது வாழ்க்கையில் ஈடுபடத்

படிப்பகம்

www.padippakam.com



தொடங்கினாள் ருக்மணி. இந்த கால கட்டத்தில் தான் ருக்மணியின் பேச்சுத் திறமையும், அறிவாற்றலும் பொது மக்களுக்கு புலப்படத் தொடங்கியது. இந்த ஆரம்பம் இந்திய இளைஞர் அமைப்பின் தலைவராக 1923 இல் ருக்மணி தேர்ந்தெடுக்கப்பட காரணமானது. தொடர்ந்து 1925 இல் இவர் உலக இளைஞர் தியாசபிகல் அமைப்பின் தலைவியானார்.

இசை ஆர்வமிக்க ருக்மணி எப்படி நடனத்தில் ஈடுபட்டார்! அவரது நடன எதிர்காலத்தை நிர்ணயித்த அந்த சம்பவம் 1926ல் நடந்தது. ஆஸ்திரேலியில் அண்ணா பால்லோலே Anna Paoloia வின் நடனத்தை கண்டு களிக்கும் வாய்ப்பு ருக்மணிக்கு கிடைத்தது நடன ஆர்வம் மெல்ல மெல்ல தலைதூக்கியது. இதை அண்ணாவிடம் தெரிவித்த போது அவரது ஆர்வத்தைக் கண்ட Anna paloia ருக்மணிக்குள் உள்ள நடன ஆர்வத்தை பாராட்டி அதில் ருக்மணி ஈடுபட வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்தார். அவரது ஆலோசனையின் பேரில் ருக்மணி கிளியோ நார்டி [Cleo Nordi] என்ற நடன ஆசிரியையிடம் பாலே கற்றுக் கொள்ளவும் ஆரம்பித்தார் இடையில் அண்ணாவின் மரணம் ருக்மணிக்கு பேரிடியாக அமைந்தது. அண்ணா ஒருமுறை கூறியிருந்த அறிவுரையின் படி தாய்நாட்டின் கலையான பரதம் கற்கவேண்டும் என்ற ஆர்வம் மட்டும் நெஞ்சில் நிறைந்து நின்றது.

ருக்மணி தேவி கௌரி அம்மாளிடம் முறையாக நடனம் கற்றுக் கொள்ள ஆரம்பிததார். நடனப் பயிற்சியை விடாது தொடர்ந்து வந்த ருக்மணி பரதம் கற்றுக் கொள்வதற்காக மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அணுகினார். பரதம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்காக மட்டுமே என்று வகுக்கப்பட்டிருந்த அந்தக் கால கட்டத்தில் ருக்மணி தேவியின் ஆர்வமும் விருப்பமும் ஆசிரியருக்கு ஊக்கம் அளிக்கவில்லை.

www.padippakam.com



ருக்மணியை இந்த நோக்கத்திலிருந்து விடுபடச் செய்ய வேண்டுமென்ற நோக்கங்ருடன் பல கடினமான பரீட்சைகளை நடத்தினர். இவற்றையெல்லாம் வென்று ருக்மணியின் நடனப்பற்று நிலைத்தது. முடிவில் ருக்மணி நடனம் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

1934 ஆம் ஆண்டு டாக்டர் அருண்டேல் **பெசன்ட் மெமோறியல்** பள்ளியை நிறுவினார். ஆனால் நிதி நிலைமை களில் ஏற்பட்ட தேக்கம் காரணமாக பள்ளியை மூட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் ருக்மணி கைகொடுத்து உதவினார்.

தன் நடன நிகழ்ச்சிகள் மூலம் பள்ளிக்கு பணம் சேர்க்க ஆரம்பித்தார். ருக்மணி பொதுமக்கள் முன்னிலையில் நடனம் ஆடுவதை எதிரித்தவர் பலர். அதையும் மீறி கணவரின் ஆதரவுடனும் ஆசியுடனும் ருக்மணியின் மேடைப் பிரவேசம் நடந்தது. இதை ஆதரித்தவர்களுள் சர் சி.பி. ராமசாமி ஐயர், ஸ்ரீனிவாச சாஸ்த்ரி ஆகியோர் குறிப்பிடத்தவர்கள். அன்று நடந்த ருக்மணியின் நடனம் பிரமாதமாக அமைந்து விட்டது. பலர் விழிகளில் வியப்பை வாரிச் சிதறியது.

ருக்மணிக்குள் பரதக் கலை தெய்வீகமாக ஊறிப் போய் இருந்ததைக் கண்ட பலர் அவரை மேலும் ஊக்குவித்தார்கள், அந்த ஊக்கத்தின் விளைவாக ருக்மணி மேலும் இக்கலையைத் தன்னுடன் வளர்த்துக் கொள்ள விரும்பினார்.

கௌரி அம்மாளிடம் காணப்பட்ட நடன முறைக்கும், அதனுடன் இணைந்த இசைப் பிணைவுக்கும், நட்டு வாங்கத் திறமைக்கும் ருக்மணியின் திறமைகள் தலை வணங்கின. அதே சமயம் கௌரி அம்மாளின் அடவுகளை விட மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தஞ்சாவூர் பாணி ருக்மணியை கவர்ந்ததும் உண்மைதான்,

படிப்பகம்

www.padippakam.com



ருக்மணி தேவியின் அழகும், நடன நளினமும், திறமையும், கலைக்கான அர்ப்பணமும் பலரையும் கவர்ந்தன. தன்னுடைய நடன ஆர்வத்தின் வடிவத்தையும், பரிமாணத்தையும் புரிந்து கொண்ட ருக்மணி இதை மேலும் வளர்க்க வேண்டுமென்பதில் குறியாக இருந்தார்.

இதற்கு முதல்கட்டமாக பரதக்கலையை முறையாகக் கற்பிக்கும் பள்ளியொன்றின் அவசியத்தை ருக்மணி உணர்ந்து கொண்டார். இதன் விளைவாக கலைக்கான சர்வதேச அமைப்பை 1936இல் அமைத்துத் தன் கலைப் பணிக்கு வித்திட்டார். அந்த கலைக்கோயில்தான் தற்போதைய கலாச்சேத்திரா என்பதைச் சொல்லவும் வேண்டுமா! விளம்பரங்களும் வீண் வார்த்தை அலங்காரங்களும் இல்லாமல் அது அமைதியான முறையில் இயங்க ஆரம்பித்தது. 1936ஆம் ஆண்டு ஜனவரி ஆறாம் தேதி ஆரம்பிக்கப்பட்ட இக் கலைப்பீடம் இன்று உலகெங்கிலும் தன் கலைப் பணியையும் புகழையும் பரப்பி நிற்பதற்கு மூலதனமாக நின்றவர் நம் நெஞ்சில் நிலைத்த ருக்மணி தேவிதான்.

ஓலைக் குடிசைகளின் ஓரத்திலும் மரங்களின் நிழல் அரவணைப்புகளிலும் இரண்டு மூன்று மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட கலாசேத்திராவில் இன்று நூற்றுக்கணக்கானவர் பயிற்சி பெற்று வெற்றிகரமாக வெளிவருகின்றனர். நடனம் மட்டுமின்றி பிற கலைகளும் இங்கு கற்பிக்கப்படத் தொடங்கியன.

இத்துடன் நிற்காமல் பிற நற்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தயங்கவில்லை ருக்மணிதேவி. 1939 முதல் 1947 ஆண்டுகளுக்கிடையில் மேடம் மாண்டசரி (Montesary Montesary) பள்ளியை ஆரம்பிக்க பேருதவியாக இருந்தார். சென்னையின் மிகப் பெரிய ஓலைச்சுவடி நூல் நிலையமான உ வே. சாமிநாதய்யர் நூல் நிலையமும் இவர் பொறுப்பில் விடப்பட்டன,

படிப்பகம்

www.padippakam.com



சுமார் இருபத்தைந்து நாட்டிய நாடகங்களைத் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், வங்காள மொழிகளில் அமைத்து வழங்கிய பெருமை ருக்மணி தேவிக்கே உரியதாகும். நடனத்துக்கு மெருகூட்டும் இசைக் கலைஞர்களை மேடையில் நடனக் கலைஞருக்கு சமமாக அமர்த்திய பெருமையும் இவருக்கே உரியதாகும். அதுவரை பின்னால் இருந்து வந்த இசைக் கலைஞர்கள் இன்றும் மேடையில் இணையாக உட்கார்ந்திருப்பதற்கு காரணம் ருக்மணிதேவியே என்றால் அது மிகையாகாது.

இராமாயணம், குமாரசம்பவம், சாகுந்தலம், கீத கோவிந்தம், குறவஞ்சி, பாகவதமேளம் ஆகியவை ருக்மணி தேவியின் நடன அறிவினால் மெருகேற்றப்பட்டு மேடையேற்றப்பட்ட சில நடன நிகழ்ச்சிகளாகும். இவற்றின் வெற்றிக்கு ருக்மணியுடன் உறுதுணையாக நின்றவர்கள் வீணை கிருஷ்ணமாச்சார்யா, டைகர் வரதாச்சாரியார், வாசுதேவனார், பாபநாசம்சிவன் மற்றும் பலர்.

பரதக்கலை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்து முடிந்து விடுமோ என்ற கவலையைப் போக்கி கலையார்வம் கொண்ட அனைவருக்கும் பரதம் உரிமையானதே என்பதை நிலைநாட்டியதுடன் அதற்குப் புத்துயிர் அளித்து வித்திட்டவர் ருக்மணிதேவி. தொழிலாக இருந்ததைக் கலையாக மாற்றிய இவரது தொண்டுகளில் மிகச் சிறந்தவை புதிய உத்திகளைக் கையாண்டு நடனங்கள் அமைத்ததும் இன்றும் பல நல்ல நடன ஆசிரியர்களை நம்மிடையே உருவாக்கி உலவ விட்டிருப்பதும் ஆகும்.

நினைத்ததைச் செயலாக்கும் வல்லமையும், செய்வதைச் சாதனையாக்கும் சிறப்பும் கொண்டு விளங்கியவர் இவர். ருக்மணிதேவி சொன்னால், ருக்மணிதேவி செய்தால் இது சிறக்கும் என்று ஒரு காரியத்தைக் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



கடின உழைப்பும், தெளிவான சிந்தனையும் நேர்த்தியான செயலும் இவரது இயல்பாகும். ஒழுக்கமும், செயல் உறுதியும் இவரது இரண்டு கண்கள். ஈடுபாடும் சுறுசுறுப்பும் இசைவாகக் கொண்டு இயங்கியவர் ருக்மணி.

இயல்பாகவே கருணையுள்ளம் கொண்ட ருக்மணி தேவி பிராணிகளிடம் அதிக அன்பும் அவை தம் நலத்தில் அக்கறையும் காட்டினார். இவையே பிராணி நல வாரியத் தலைமைப் பதவி இவரைத் தேடி வரக் காரணமாகின. எடுத்த பணியை சிறப்புற ஆற்றுவதில் தனித்துரிமை பெற்று விளங்கிய ருக்மணி இதிலும் திறம்பட செயல் பட்டார்.

புதுடில்லி ராஜ்ய சபை உறுப்பினர் பதவி இவரது திறமை கருதி இவருக்கு அளிக்கப்பட்ட **ஒன்**றாகும்.

இவை தவிர பல விருதுகளைப் பெற்ற பெருமையும் ருக்மணி தேவிக்கு உண்டு. இவரது கலைத் தொண்டைக் கருதி **பத்ம பூஷன்** விருதை இந்தியப் பேரரசு 1956 ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது. சாந்திநிகேதன் **'தேசிக உத்தம'** விருதை அளித்து கலைத்தாயின் இந்த அருந்தவப் புதல்வியைப் போற்றியது. மத்தியப் பிரதேச அரசின் **காளிதாச** விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இலண்டன் பிராணிவதைத் தடுப்புச் சங்கம் இவரது பிராணி நலத் தொண்டுக்காக 1958 இல் விக்டோரியா ராணி விருதை வழங்கிப் பராட்டி யிருக்கிறது. **'பிராணி மித்ரா'** விருதை முதலில் பெற்றவரும் இவரே.

இவரது திறமையையும், தனித்தன்மையையும் கருத்தில் கொண்டு இந்திய **ஜனாதிபதி** பதவிக்கு தேர்ந்தெடுக்கப் படக் கூடிய நியமன விண்ணப்ப வாய்ப்பை இவர் தாமாகவே வேண்டாமென்று தடுத்து விட்டவர்.

ஏனெனில் இவரது கண்ணும், கருத்தும் கவலையும் கலாசேத்திராவின் வளர்ச்சியும் வாழ்வுமாகவே இருந்ததே

www.padippakam.com



ஆகும். கலைத் தாகத்துடன் வரும் மாணவர் யாவர்க்கும் தாகம் தீர்க்கும் தடாகமாக இருந்தார். கலாசேத்தி ராவின் இன்றைய நிலை ருக்மணி தேவி அருண்டேலின் அயராத உழைப்பிலும், இடைவிடாத எண்ணத்திலும் உருவானது என்றால் மிகையாகாது.

கலைக்கோயில் ஒன்றை தன் கருத்தின் வலிமையிலும் கலை தாகத்தின் திண்மையாலும் கட்டி முடித்து கலையொளி பாய்ச்சிய அந்த கலைச்சுடர் 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் தேதி கலையுள்ளங்களை கதற வைத்து மறைந்தது. ஆனால் அவர் தம் சாதனை களைப் பறைசாற்ற இன்றும், என்றும், என்றென்றும் நம் உள்ளங்களில் கலாசேத்திரா நின்று நிலைத்து நீடு வாழும் என்பது உறுதி.

படிப்பகம்

www.padippakam.com

# தியாக தீபம் அன்னை தெரசா

பருவங்கள் தோறும் பொழிகின்ற மழையைப் போல இல்லாது, காலமும் இடமும் கருதாது பொழிவதுதான் அன்பு மழை. இந்த மழையால் இதயங்கள் குளிர்கின்றன இரக்கமும், இன்பமும் பிறக்கின்றன.

பிறப்பால் வருவது மட்டுமே அன்பன்று. பிணைப் பால், ஏனையோரிடம் வரும் இணைப்பால் இந்த அன்பும் பின் இரக்கமும் வெளிப்படும்போதே இதன் அருமையும் பெருமையும் அழகுற வெளிப்படுகின்றன.

முகம் தெரியாத ஒருவரின் முனகல்கூட நம் இதயத்தில் ஈரத்தைச் சுரக்க வைத்தால் அந்த அன்புக்கு ஈடு இணை இருப்பதில்லை. அத்தகைய அன்பைத்தான் 'தாய்மை' என்ற பண்புக்குத் தகுதியுடையதாகக் கருதுகிறோம். பிறர் துயர் துடைக்க தன் சுகத்தையே தானமாகத் தரும் அந்த 'தாய்மை' உணர்வுக்கு உதாரணமாக அன்னையர் பலர் நம்மிடையே இருந்து வருகிறார்கள். அவர்களில் ஒருவர் தாம் — இந்த மண்ணில் பிறக்காவிட்டாலும் இந்த மண்ணின் மைந்தர்களுக்காகத் தம் இதய அன்பையும் இன்முகத் தொண்டையும் முழுதுமாக ஒப்படைத்துள்ள அருள்மிகு அன்னை தெரசா. அருட்திரு, அருள்மிகு என்ற பொருள்மிகு சொற்றொடர்க்கு உயிருள்ள விளக்கமாகத் திகழ்பவர் அன்னை தெரசா அவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அணு ஆயுத அவலங்களும், இயற்கை தரும் எதிர் பாராத துயரங்களும் உலகெங்கிலும் பரந்து, விரிந்து பாதித்துக் கொண்டுள்ளன இன்று. இந்த நேரத்தில் கதி யற்ற மனித குலத்துக்கு அமைதிக் காக்க, அமைதியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அன்னை தெரசா இந்திய மண்ணுக்கு ஆற்றியுள்ள, ஆற்றிவரும் அரிய தொண்டுகள் அளப்பரியன.

1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் இருபத்தேழாம் நாளில் யுகேஸ்லாவியாவில் உள்ள ஸ்கோப்ஜி நகரில் தெரசா பிறந்தாள். பெண் பிறந்த போது பேருவகை யுற்ற பெற்றோர் இவளுக்கு இட்ட பெயர் அக்னஸ் கோன்க்ஸா பெஜாக்ஷீ. அக்னஸின் பெற்றோர் உழைப் பாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கட்கு அக்னஸ் தவிர ஒரு ஆண் மகனும், பெண்ணும் இருந்தனர். உழைத்தே உண்ண வேண்டிய குடும்பம். ஐந்து ஜீவன் களின் வாழ்க்கை. மலைபோல் தோன்றிய வாழ்க்கையை மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டனர் பெற்றோர்.

கல்வியினால் பெறக்கூடிய பெரும் பேற்றினை அறிந் தும் உணர்ந்தும் இருந்த தந்தை அக்னசை தன் வசதிக் கேற்ப அரசுப் பள்ளியொன்றில் சேர்த்தார். தந்தையின் நோக்கமே தனது நோக்கமாகக் கொண்டிருந்த மகள் தாய்மொழிக் கல்வியில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றாள்.

உலகமனைத்தையும் ஒருங்கிணைக்கும் மொழியான ஆங்கிலத்தைக் கற்பதன் அவசியத்தை உணர்ந்து அக்னஸ் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டாள். அப்போது அவ ளுக்கு வயது பதினெட்டு. அறிவுத் தாகம் தளிர்விட்டுத் துளிர்த்தது.

சிறுவயது முதலே சமூக சேவையில் பெருவிருப்பு கொண்டு, தொண்டுள்ளத்துடன் சிறு சிறு உதவிகளைச் செய்து வந்தவள் அக்னஸ். இரக்கமும், அன்பும், எளிமை

www.padippakam.com



யும் அவளுடன் பிறந்த குணங்கள். இன்பங்களிலோ, கேளிக்கைகளிலோ அவள் மனம் ஈடுபடவில்லை. எப்போதும் பிறர் நலத்தையும், உலக நன்மையையுமே மனம் சிந்திக்கத் தொடங்கியது. அவரது எண்ணங்களுக்கு உதவியாகவும் உறுதுணையாகவும் கிறிஸ்தவ சேவை இயக்கம் அமைந்தது. அதுவே அவரது ஆங்கில அறிவுக்கும் வித்திட்டது.

தன்னுடைய பன்னிரண்டாம் வயது முதலே சேவையில் பெரும் ஆர்வம் கொண்டிருந்த அக்னசின் கனவு, பல ஆண்டுகள் கழித்தே நனவாகும் வாய்ப்பு கிட்டியது.

மதத் தொண்டுடன் மனிதத் தொண்டும் ஆற்ற வேண்டும் என்ற பேராவலால் கன்னியர் மடத்தில் சேர வேண்டும் என்றும் அவள் விரும்பினாள். ஆனால் பாலகப் பருவமான பன்னிரண்டு வயதில் அவளைத் தன்னுடன் வைத்துக் கொள்ள எந்த கன்னியர் மடமும் முன் வரவில்லை. இது அக்னசுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. ஆனாலும் காலம் கனியட்டும் என்று காத்திருந்தாள் அவள்.

அந்த நேரத்தில்தான் இந்தியாவில் இருந்த நிலைமைகள் அக்னசின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனைக்கு வித்திட்டன. ஆங்கிலேயரது ஆதிக்கத்தின் கீழிருந்த இந்திய மண்ணில் வறுமையும் நோயும் வாட்டி வந்தன.

தொண்டுணர்வுடன் கிறித்தவ சேவை மையத்தைச் சேர்ந்த சிலர் இந்திய மக்களின் துயர் துடைக்க கல்கத்தா வந்து சேர்ந்தனர். இந்நிகழ்ச்சி அக்னசின் மனதிலும் இங்கு வந்து தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெருமளவுக்கு தூண்டியது. இந்தியாவில் இரக்க உணர்வுடன் சேவை செய்து மீண்ட சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அவர்கள் அங்கிருந்து பல சுவையான செய்திகளைச் சுமந்து வந்திருந்தனர். அவை

படிப்பகம்

www.padippakam.com



அக்னசின் செவிகளையும் எட்டின. அவற்றில் ஒன்று அவள் மனதை ஈர்த்தது.

கல்கத்தா நகரில் 'லாரட்டா' கிறித்தவ கன்னியர் மடம் ஆற்றும் நற்பணிகளைப் பற்றிய செய்தியே அது. கல்கத்தா மாநகரிலும் அதனைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளிலும் 'லாரட்டா' ஆற்றி வரும் தொண்டு மனித சமூகத்தின் மேம்பாட்டைப் பேணுவதாக இருந்ததை அறிந்தாள். தன் எண்ணம் ஈடேறிவிடும் என்ற நம்பிக்கை அவளிடம் துளிர் விட்டது. எண்ணத்தைச் செயலாக்கும் முயற்சியாகத் தன் பதினெட்டாவது வயதில் 'லாரட்டா' வில் கன்னியாகச் சேர்ந்து விட்டாள் அக்னஸ்.

தன் எண்ணத்தின் தடம் புரளாமல் சேவையே தனது இலட்சியம், மக்கள் நலமே தனது மூச்சென்று எண்ணி காலம் வரும்வரையில் காத்திருந்து செயலாற்றிய அக்ன சின் உறுதியும் செயலும் பலராலும் பாராட்டப் பட்டன.

1928ஆம் ஆண்டு 'லாராட்டா'வின் சிறப்புப் பயிற்சி விதிகளை முறையாகப் பின்பற்றவும், கற்றுக் கொள்ள வும் அக்னஸ் அயர்லாந்துக்கு அனுப்பப் பட்டார். அங்கு தான் அக்னசின் ஆங்கில அறிவுக்கு வித்திடப்பட்டது. முறையான ஆங்கிலக் கல்வியை மகிழ்ச்சியுடனும் ஆர்வத் துடனும் கற்றுக் கொண்டாள்.

இந்தப் பயிற்சி டப்ளின் நகரில் நடைபெற்றது. பயிற்சியின் பின் அக்னஸ் நெடுங்காலமாக எண்ணிவந்த எண்ணம் நிறைவேறியது. ஆம், இந்தியாவின் ஏழை எளியவர்களுக்குத் தாம் ஆற்ற வேண்டிய அன்புத் தொண்டைச் சிறப்புற ஆற்றுவதற்காக இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்தாள் அக்னஸ்.

கோடானு கோடி மக்கள் வாழ்ந்த நமது பாரதத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்தவர்களே மிகஅதிகம். வருந்தி உழைத்துக் குடிசையிலும், குப்பை மேட்டிலும்

படிப்பகம்

www.padippakam.com



குடித்தனம் நடத்தும் அந்த ஏழை உள்ளங்களின் நோய்களும் தேவைகளும் எழுத்தில் அடங்காதன. போராட்டமே வாழ்க்கையாக, பசியொன்றே பிரச்சனையாகச் சாவின் நிழல் படிந்த துன்பத் துறைமுகங்களாக வாழ்ந்த அவர்களின் வாழ்க்கைத் தரத்தின் இழிவு எந்த ஒரு மனிதன் — இந்தியன் கண்களையும் புனலாக்கிவிடும்.

இந்தச் சூழ்நிலையைச் சந்திக்க வந்தாள் அக்னஸ். இந்த மண்ணின் மாண்பையும், இதன் புனிதத்தையும், பாரம்பரியத்தையும் மட்டுமே கேள்விப்பட்டிருக்கவில்லை அவள். இங்குள்ள வருந்தத்தக்க நிலைமைகளையும் அறிந்து வைத்திருந்தாள். இங்கு அடியெடுத்து வைத்தபோது அவற்றைக் கண்கூடாகக் காணும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

டார்ஜிலிங் 'லோரொட்டா' கன்னியர் மடத்துக்குச் சென்று முறையான பயிற்சிகளை முடித்தபின், வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவின் கல்வி நிலையமொன்று அவரைக் கரம்கூப்பி வரவேற்றது. தூய மேரி உயர்நிலைப் பள்ளியில் 1929இல் ஆசிரியையாக அடியெடுத்து வைத்தார். பள்ளியை அடுத்திருந்த கன்னியர் மடத்திலேயே தங்கினார்,

கண்கவர் காட்சிகளை விட கல்கத்தா மாநகர் காட்டிய கவலை தரும் கண்ணீர்க் காட்சிகளே அக்னசின் மனதில் ஆழப் பதிந்தன. அருகிலேயே அமைந்திருந்த சேரியின் சூழ்நிலையும் சுகாதாரமற்ற நிலையும் அக்னசுக்கு மனச்சுமையாக மாறி வருத்தின. புதிய சூழ்நிலைக்கு வந்திருந்த அக்னஸ் இவ் இழிநிலை கண்டு வருந்துவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

1931ஆம் ஆண்டு அக்னசின் வாழ்வில் மறக்கமுடியாத நாள். கிறித்தவக் கொள்கைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்தார் அக்னஸ். இதில் தன்னுடைய முதிர்ச்சி நிலையை நிலைநாட்டுவதற்காக ஏழ்மை, பணிவு, ஒழுக்கம் ஆகியவற்றில் நிலை தடுமாறாமல் இருப்பதாக உறுதி

படிப்பகம்

www.padippakam.com



மொழி தரவேண்டிய சமயம் அது. இதற்காக டார்ஜிலிங் நகருக்கு சென்றார் அவர். அங்கு நடந்த கிறித்தவ மதப் பேரவையின் நிகழ்ச்சியொன்றில் அக்னஸ் தெரசா ஆனார். அன்று முதல் புதிய பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தார். இன்று அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

நோய் கண்டு வாடும் இயல்பும், பசிப்பிணி கண்டு உருகும் இதயமும் கொண்டிருந்த தெரசா தன் கடமையை ஆற்ற வேண்டிய சூழலில் பதினைந்து ஆண்டுகளை கல்கத்தா பள்ளியில் கழித்தார். 1944ஆம் ஆண்டில் அதே பள்ளியின் முதல்வர் பதவி அவரைத் தேடி வந்தது. பதவி அவருக்கு பகட்டையும் அதிகாரத்தையும் அறிவுறுத்தவில்லை. மாறாக அன்பையும், ஏழைகளிடம் இரக்கம் காட்ட வேண்டிய வாய்ப்பையும் அள்ளித் தந்தது.

முதல் கட்டமாக அருகில் இருந்த ஒரு சேரியில் தம் உள்ளத்துப் பிரிவையும் உதவும் கரங்களையும் அர்ப்பணித்தார். உடன் வந்த மாணவ சமூகத்தினர் துணையுடன் தம் தொண்டைத் தொடங்கவும் தொடரவும் விரும்பினார். ஆனால் எந்த ஒரு நற்பணிக்கும் தடைகளும் இடர்களும் தோன்றுவது வழக்கம்தானே. அதுபோலவே அன்னையின் இந்த அருட்பணிக்கும் தடைகள் வந்தன. விதிமுறைகளும் விலங்கிடுதல் போன்ற கட்டுப்பாடுகளும் நிறைந்திருந்த கிறித்தவ மதக் கன்னியர் மடம் தெரசாவின் வெளியுலகத் தொண்டை விரும்பவில்லை. அதனால் தெரசாவின் தூய எண்ணத்திற்குத் தடை விதிக்கப்பட்டது.

ஏழைகளிடம் பரிவு காட்டுவதற்குக் கூட தனக்கு உரிமை இல்லாதது கண்டு தெரசா மனம் நொந்தார். நொந்த மனம், நோயுற்ற உடலுக்கு வழிகாட்டியது. உடல் நலம் குன்றிய நிலையிலும்கூட கடமையுணர்வுடன் முதல்வர் பொறுப்பைத் திறம்பட ஆற்றி வந்தார். இது கண்ட ஏனையோர் அச்சம்கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



கன்னியர்மடத் தலைவிக்கு உடனடியாக தெரசாவின் ஓய்வு ஒழிச்சல் இல்லாத உழைப்பும் உடல் நலிவும் தெரிவிக்கப்பட்டன. தலைவியோ தெரசா உடனடியாக ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார். இதை மீறமுடியாமல் தெரசா 1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் டார்ஜிலிங் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதுவே தன் வாழ்க்கையின் திருப்புமுனை என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

பயணம் தொடங்கிய பின் வண்டியலமர்ந்து இறைவனை வழிபட ஆரம்பித்தார். திடீரென உள்ளுணர்வு பேச ஆரம்பித்தது போன்ற உணர்ச்சி தோன்றியது. தன்னுள் புத்துணர்வு பாய்ந்தது போல அவர் உணர்ந்தார். இறைவனே நேரடியாகத் தோன்றி,

'கடைப்பட்டவர்களில் எவருக்கேனும் நீ ஏதேனும்
உதவி செய்தால் அது எனக்கே செய்ததாகும்'

என்றாற் போல ஓர் உணர்வு; உவகை. திடீரென வண்டி நின்றதால் புற உலகச் சூழ்நிலைக்கு அவர் மீண்டார்.

மீண்டும் மீண்டும் சிந்தித்ததில் தன்னுடைய வாழ்வின் நோக்கமும் செயலும் புலப்பட ஆரம்பித்தது. ஆக்கப் பணிக்கும், அறப்பணிக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதை அவர் தீர்மானித்தார். அந்த நாளான செப்டம்பர் மாதம் பத்தாம் தேதியை இன்றும் தெரசா இயக்கத்தினர் உள்ளொளி நாளாகக் கொண்டாடுகின்றனர். ஓடும் வண்டியிலேயே அன்று தன் புனிதப் பணிக்கான குறிப்புகளையும் திட்டங்களையும் எழுதி வைத்துக் கொண்டார்.

சில கால ஓய்வுக்குப் பின் கல்கத்தா திரும்பிய தெரசா தன் திட்டத்தை, தன்னிடமும் தன் சேவையிடமும் அதிக நம்பிக்கை வைத்திருந்த கிறித்தவப் பாதிரியார் வான் என்பவரிடம் தெரிவித்தார். முறையான ஒப்புதலுக்காக

படிப்பகம்

www.padippakam.com



இத்திட்டத்தைக் கல்கத்தா பிஷப் பெர்டினாண்டிடம் அனுப்ப வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறிய வான் தாமே இத் திட்டத்தை பிஷப்பிடம் தெரிவித்தார்.

ஆனால் பிஷப் இதிலுள்ள தொல்லைகளையும், தடைகளையும் உணர்ந்தவர். அதனால் தெரசாவின் முயற்சிக்கு முட்டுக்கட்டையாகப் பதிலளித்தார். இந்த வேதனையுடன் சேர்ந்து தெரசா தங்கியிருந்த மடத் தலைவியின் சினமும் தெரசாவைப் பாதித்தன. மடத் தலைவியின் அதிருப்தி காரணமாக தெரசா நெடுந்தொலைவில் இருந்த வேறொரு மடத்துக்கு மாற்றப்பட்டார். ஆனாலும் பிஷப் நியாயமான உணர்வும், நேர்மையான கருணையும் கொண்டிருந்ததால் இந்த விஷயத்தில் தலையிட்டு மீண்டும் தெரசாவை கல்கத்தாவுக்கே வரச் செய்தார். ஆனாலும் பழைய பொறுப்புகள் அவரிடம் தரப்படவில்லை.

இவற்றால் சோர்ந்து விடாது, தன் கொள்கையே குறியாக வான் பாதிரியார் அறிவுரைப்படி தன் நோக்கத்தை விளக்கி கத்தோலிக்க மதப் பெருந்தலைவர் போப், அயர்லாந்து நாட்டு லொரட்டா தலைமைபீட மடத் தலைவி, கல்கத்தா பிஷப் பெர்டிணாண்ட் ஆகியோரிடம் மூன்று மனுக்களை அளித்தார் தெரசா.

ஆண்டுகள் நகர்ந்தன. முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இந்நிலையில் 1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் போப்பாண்டவர் தெரசாவுக்கு அனுமதி அளித்து எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. கடிதத்தை கண்ட கல்கத்தா பிஷப்பும் தன் அனுமதியைத் தந்து விட்டார். அத்துடன் நிற்காது தெரசா தொண்டாற்ற மருத்துவப் பயிற்சி பெற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அவரது அறிவுரைப்படியே தெரசா பயிற்சி பெறுவதற்காக பாட்னா நகர் சென்றார்.



படிப்பகம்

www.padippakam.com



அதே ஆண்டில் அவர் செய்த இன்னொரு புரட்சி கன்னியர் மட ஆடைகளை விலக்கிவிட்டு, வங்காளப் பெண்களைப் போல புடவை அணிய ஆரம்பித்ததாகும். முகம் மட்டுமே தெரியும் வண்ணம் கன்னியர் ஆடை போலவே புடவை உடல் முழுவதையும் மறைத்திருந்த எளிமைக் கோலத்தில் புதிய தோற்றத்தில் தெரசா பணியைத் தொடங்கினார்.

மண்ணின் வண்ணம் எண்ணிக் கொண்ட
பெண்மைக் கோலம்; வெண்மைக் கோலம்.
காந்தியடிகளும் உடைமாற்றி உண்மையான
உருமாற்றம் கொண்டு மக்கள் நெஞ்சில் மலர்ந்து
நிறைந்தாரன்றோ

மூன்றே மாதங்களில் தன் பயிற்சியை விரைவாகவும் விவேகமாகவும் கற்றுத் திரும்பினார். இந்தியாவில் முதன் முதலில் தன் கண்ணில் பட்ட சேரியிலேயே தன் முதற் பணியைத் தொடங்கினார் தெரசா. அங்குப் பள்ளியொன்றைத் தொடங்கி, சேரிக் குழந்தைகள் இருபத்தோருவருடன் பள்ளியை ஆரம்பித்தார். காலம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது. கல்வி கற்க வரும் சிறுவர்களின் எண்ணிக்கை கூடியது. இதனால் ஏற்பட்ட இடப் பற்றாக் குறையைச் சமாளிக்க வான் பாதிரியார் உதவினார். அவரது நண்பரான கோமஸ் என்பவரின் உதவியுடன் கோமஸின் இல்லத்தின் மாடிப்பகுதியைத் தனது இயக்கத்துக்காகப் பெற்றுக் கொண்டார். அதே ஆண்டில் இந்தியக் குடியுரிமைக்காக பதிவு செய்து கொண்டார்; வங்காள மொழியையும் கற்க ஆரம்பித்தார்.

இவருடைய அரும்பெரும் தொண்டுகளை அறிந்து முதலில் தன் சேவையை நல்க முன்வந்தவர்களில் சுபாஷிணி தாஸ் முதல், அடுத்து சகோதரி ஜெர்த், மூன்றாவது டோரத்தி, நான்காவதாக மர்க்கரீத் ஆகியோரும் இணைந்து கொண்டனர். இயக்கம் ஆலமரமாகக் கிளை

படிப்பகம்

www.padippakam.com



யிட்டு விழுதுவிட்டுப் படர ஆரம்பித்தது. விரிவைக் கண்டு அதனை அறப்பணி இயக்கமாக அன்னை தெரசா பதிவு செய்தார்.

1959ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏழாம் நாள் முறையான பதிவு நடைபெற்றது. விதிமுறைகளில் ஏனைய மடங்களைப் போல ஒழுக்கம், பணிவு. எளிமை என்ற நோன்புகளுடன் நிற்காது ஏழைகளுக்கு இலவச உதவியையும் கட்டாய விதியாக குறிப்பிட்டிருந்தார்.

அதே ஆண்டில் அன்னை தெரசாவின் கண்ணில்பட்ட காட்சி அவரது குறிக்கோளுக்கு இன்னொரு அடியெடுத்துக் கொடுத்தது.

கல்கத்தாவின் மிகப் பெரிய மருத்துவ மனையின் வாசலில் ஓர் ஏழை நோயாளி விழுந்து கிடந்தான். சாவோடு போராடிக் கொண்டிருந்த அவனைக் கண்டு தெரசா வருந்தினார். இப்படி அநாதரவாக இறப்போரின் நலத்திற்காக அவர்களைக் காப்பாற்றுவதற்கு ஓர் அமைப்பை ஏற்படுத்த விரும்பிப் பலரை அணுகினார். முடிவில் கல்கத்தா புனித மாதா கோயில் அருகில் கிடைத்த இடத்தில் மருந்தகம் மட்டும் வைத்துக் கொள்ள அனுமதி கிடைத்தது.

ஆனாலும் 'இறப்போர் நல விடுதி'யில் அவருக்கு இருந்த ஆர்வமும் முயற்சியும் சிறிதும் குறையவில்லை.

அவரது பெருமுயற்சியின் பயனாக மாநகராட்சி உதவியுடன் கல்கத்தா காளி கோயில் அருகில் இருந்த தர்மசாலா கட்டிடம் இறப்போர் நல இல்லத்துக்கு வழங்கப்பட்டது. 'நிர்மல் இருதயம்' என்ற பெயருடன் 1952இல் இப்பணி தொடங்கியது. அன்றுமுதல் இன்று வரை இங்கு ஆயிரக்கணக்கான நோயாளிகள் அடைக்கலம் பெற்று வந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



இயக்கத்தின் வளர்ச்சியுடன் இடப் பற்றாக்குறையும் வளர்ந்து கொண்டிருந்தது. கன்னியர் தங்க மட்டுமின்றி, அலுவலகம், பயிற்சிமையம் என்று பலதேவைகள் இருப்பதை உணர்ந்தார் தெரசா. 1953இல் கோமஸ் இல்லத்திலிருந்து லோயர் சர்க்குலர் வீதியிலிருந்த மூன்றடுக்கு கட்டிடத்துக்குத் தன் இயக்கத்தை மாற்றிக்கொண்டார்.

அன்னை தெரசாவின் அடுத்த பணி பிறக்கும்போதே பெற்றோர் முகம் காணாமல் 'அநாதை' என்ற பட்டத்துடன் குப்பை மேடுகளிலும், கோயில் குளங்களிலும் கிடக்கின்ற பாலகர்களுக்கு பரிவுடன் பராமரிக்க ஓர் இல்லம் படைத்ததுதான்.

ஊனமுற்ற குழந்தைகளையும், அநாதைக் குழந்தைகளையும் பராமரிக்க 'சிசு பவனம்' என்ற குழந்தைகள் காப்பகத்தை அமைத்தார். அங்கேயே உள்ள சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் வெளியிலிருந்து வரும் ஆதரவற்ற சிறுவர்களுக்கும் உணவு படைக்கத் தவறுவதில்லை இந்த இல்லம்.

வெளிநாட்டிலிருந்து வரும் தம்பதியர் தத்தெடுத்துக் கொள்ளவும் உதவுகிறது இந்த இயக்கம். இங்கே, திக்கற்ற பெண்களுக்கு ஆதரவு தரும் வகையில் வேலை வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

சிசு பவனத்தின் இரண்டாவது காப்பகம் சுமார் பதினைந்து ஆண்டுகளின் பின் **நிர்மல கென்னடி இல்லம்** என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான பண உதவியை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான் கென்னடியின் சகோதரர் செனட்டர் எட்வர்ட் கென்னடி அளித்தார். தன் இந்திய வருகையின்போது சிசுபவனச் சிறப்புகளைப் பாராட்டி அளித்த ஐம்பதாயிரம் டாலர்

www.padippakam.com



களின் உதவியுடன் கென்னடியின் பெயரிலேயே இல்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

பிறர் தொடவே அஞ்சும் தொழுநோயாளர்களை ஆதரவுடன் பராமரிக்கும் வகையில் தொழுநோயாளர் இல்லம் ஒன்றையும் தொடங்கினார். காந்தியடிகளின் கண்ணோட்டமும் செயலாற்றலும் தெரசாவிடத்தும் காண முடிகிறது.

ஐரோப்பாவிலிருந்து வந்து இந்திய மண்ணில் தொண்டாற்றும் இந்தப் புனித இதயத்தின் கருத்துக்களில் ஈடுபாடும், செயல்களில் நம்பிக்கையும் கொண்ட இளைஞர்களும் ஏனையோரும் இந்த நாடு முழுவதும் அவரது இயக்கத்துக்குக் கிளைகள் அமைத்திருக்கிறார்கள். கல்கத்தாவுக்கு அடுத்தபடியாக சாஞ்சியிலும், அடுத்து புதுடில்லியிலும் இயக்கங்களின் கிளைகள் ஏற்படுத்தப்பட்டு தொண்டு விரிவடையத் தொடங்கியது.

தமிழகத்திலும், மேலும் பல இடங்களிலும் அன்னை தெரசாவின் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நீலக்கரையிட்ட வெள்ளைப் புடவையை வங்காள முறைப்படி அணிந்து சேவை மனப்பான்மையுடன் உலாவருவதை இன்றும் காண முடிகிறது.

இந்திய மண்ணில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் அன்னையின் அருள்மிகு தொண்டின் மனம் வீசி வருகிறது. முதன் முதலில் அந்தப் பேற்றை பெற்றநாடு வெனிசுலா. 1965ம் ஆண்டு அங்கு மடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து கொலம்பியா, பொலிவியா, பிரேசில் போன்ற நாடுகளிலும் மடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிறகு போப்பாண்டவரின் அழைப்பிற்கிணங்கி ரோம் நகரிலும் ஓர் அறப்பணி இயக்க இல்லத்தை அமைத்தார். அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவிலும், பின் மத்திய கிழக்கு நாடுகளிலும் இயக்கத்தைத் தொடக்கி வைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com



நன்கொடைகளை விட நல்லிதயத்துடன் உழைக்க முன்வருபவர்களையே இந்த இயக்கம் பெரிதும் விரும்பு கிறது.

ஐந்தே ரூபாயுடன் சேரியில் அறப்பணியைத் தொடங் கிய அன்னைக்கு இன்று உலகெங்கிலும் இருந்து அவரது பணிக்காக நன்கொடைகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

இந்த நாட்டு மக்களுக்காகத் தன் வாழ் நாளை அர்ப் பணித்து வரும் அன்னை தெரசாவின் சாதனைகளைப் பாராட்டி பாரதம் அவருக்கு 1962இல் மிக உயர்ந்த பாராட் டாகிய **பத்மஸ்ரீ** விருதை அளித்துப் போற்றியது. அந்த ஆண்டிலேயே பிலிப்பைன்ஸ் நாட்டரசு **'மக்சேசே'** விருதை வழங்கி அவரது மக்கள் பணியைப் பாராட்டியது.

சுமார் ஐம்பதாயிரம் ரூபாயை வழங்கிய மக்சசே விருதையும் அவர் அறப்பணிக்காகவே ஆக்கரா நகரில் ஒரு இல்லம் அமைத்துச் செலவிட்டார்.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் போராட்டத்தின் பின் இங்கு வந்த அகதிகளுக்கு அன்னை ஆற்றிய தொண்டு கள் எழுத்திலடங்காதன. அந்த ஆண்டு உலக அமைதிக் கான பரிசு போப்பாண்டவரால் தெரசாவுக்கு வழங்கப் பட்டது. அதே ஆண்டு அமெரிக்காவின் 'குட் சமாரிட்டன்' பரிசும், டாக்டர் பட்டமும் அன்னைக்குத் தரப்பட்டன.

1972 இல் நம் நாட்டில் **நேரு நினைப் பரிசைப்** பெற்ற பின், இங்கிலாந்தின் 'டெம்பிள்டன் பரிசை'யும் பெற்றார். மேலும் இங்கிலாந்து 1978 இல் பிரித்தான்ய உயர் விருதான **'ஆர்டர் ஆப் பிரிட்டிஷ் எம்பயர்'** விருதினை அளித்து அவரைக் கௌரவித்தது. இத்தாலிய—சுவிஸ் இணை பரிசாகிய **'பால்சன் சர்வதேச விருது'** 1979 இல் அன்னைக்கு கிடைத்தது.

www.padippakam.com



விருதுகளிலேயே சிறந்ததாகக் கருதப்படும் நோபல் பரிசு 1979ஆம் ஆண்டு அன்னை தெரசாவுக்கு அவரது அளப்பறிய அறப்பணிகளுக்காக வழங்கப்பட்டது. இந்தப் பரிசைப் பெறும் மூன்றாவது இந்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'பிறப்பால் வருவதெல்லாம் உறவல்ல. பிணைப்பால் வருவதே உறவு' என்பதை இந்த நாட்டு மக்களுடனும் மண்ணுடனும் தாம் கொண்டிருந்த பாசத்தால் நிலைநாட்டிய அன்னை தெரசா நமது நாட்டவர் என்பதில் நாம் பெருமைப்பட வேண்டும்.

எளிமையும் அடக்கமும் கொண்ட உருவம், அனுபவங்களும் ஏழைகளின் அவலங்களும் தோற்றுவித்த சுருக்கங்களை கொண்ட முகம். சேவைக்காக அலைந்தே சேவை செய்தே வளைந்துபோன பாதங்கள், ஆதரவு தருவதற்கென்றே நீட்டப்படும் அன்புக் கரங்கள் - இவைதாம் அன்னை தெரசா.

அந்த அன்னையின் அரும்பணிகளைக் கருத்தில் கொண்டு தமிழகம், தன் பங்காக சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. அவரது தொண்டுகளுக்குத் தலை வணங்கி, பெண்களுக்கான கொடைக்கானல் பல்கலைக் கழகத்துக்கு 'அன்னை தெரசா'வின் பெயரைச் சூட்டியுள்ளது.

சேவையே இந்தியாவின் தேவை என்பதை அன்றே உணர்ந்து செயலாற்றிய அன்னையின் பொன் உள்ளமும். காலத்தால் பஞ்சாகிப் போன உடலும் இன்னும் இந்த நாட்டின் ஏழை மக்களின் நலத்துக்காகவே அர்ப்பணிக்கப் பட்டுள்ளன. அவர்தம் சேவைக்குத் தலைவணங்கவும், துணை புரியவும் ஒவ்வொரு இந்தியனும் — உலக மாந்தர் அனைவருமே என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர்.

முற்றும்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்